
முன்னேறு
முன்னேற்று
என்.சி.மோகன்தாஸ்

ஆசிரியர் - என் சி மோகன்தாஸ்

மின்னூலாக்கம் - தனசேகர்

*tkdhanasekar@gmail.com*

அட்டைப்படம் - *GNU ANWAR*

*gnukick@gmail.com*

மின்னூல் வெளியீடு : *http://FreeTamilEbooks.com*

உரிமை – *Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License.*

உரிமை – கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

# முன்னேறு! முன்னேற்று!!

## சாதனையாளர் திரு. அ. சீனிவாசன்

# பொருளடக்கம்

பாகம் 1.........................................................5
பாகம் 2.........................................................10
பாகம் 3.........................................................15
பாகம் 4.........................................................18
பாகம் 5.........................................................23
பாகம் 6.........................................................26
பாகம் 7.........................................................30
பாகம் 8.........................................................34
பாகம் 9.........................................................37
பாகம் 10.......................................................46
பாகம் 11.......................................................48
பாகம் 12.......................................................54
பாகம் 13.......................................................57
பாகம் 14.......................................................64
பாகம் 15.......................................................67
பாகம் 16.......................................................70
பாகம் 17.......................................................73
சாதனையாளர் திரு.அ.சீனிவாசன் பற்றி இவர்கள்;.........................81

## *பாகம் 1*

*ஒர் ஊர் அல்லது பகுதியின் வளர்ச்சி அங்கு அமைந்துள்ள மழைவளம், கனிம மண், தொழில் நீர், மனிதவளம் போன்றவற்றை உட்கொண்டு அமையும்.*

*இத்தனை வளங்கள் இருந்தாலும் அவற்றை வளர்க்கவும் விஸ்தரிக்கவும் போக்குவரத்தில் தரை, ரயில், ஆகாயம், கடல் மார்க்கங்கள் அவசியம்.*

*இவை எதுவுமேயில்லாமல் சென்னை – திருச்சி-தேசிய நெடுஞ்சாலைக்குக் கொஞ்சம் பக்கம் என்கிற ஒரு தகுதி மட்டுமே உள்ள மிக வறட்சியுடன் –எந்த வளமுமேயில்லாமலிருந்தது பெரம்பலூர்.*

பெண் கொடுக்கவும், எடுக்கவும் யோசிக்கப்பட்டு, இந்தப் பகுதியில் தொழில் துவங்கினால் வளருமா-விளங்குமா என ஒதுக்கப்பட்டிருந்தது. பெரம்பலூர்.

இன்று பெரம்பலூர் வெளியே தெரிகிற அளவிற்கு வளர்ந்திருப்பதில் தனலட்சுமி சீனிவாசன் குழும நிறுவனங்களும் முக்கிய காரணமாய் அமைந்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

நூறு வருடப் பாரம்பர்யம் உள்ள கல்வி நிறுவனங்கள் பலவும், உள்ளதைக் கட்டிக்காத்தால் போதும் –விரிவுபடுத்த வேண்டாம்' எனச் செயல்படுவதைப் பார்க்கிறோம்,

இவர்களோ பதினைந்து வருடங்களில் 17 நிறுவனங்களாக வளர்ந்திருக்கின்றனர். வளர்ந்து

கொண்டிருக்கின்றனர். 17 கல்வி நிறுவனங்களுடன் பால் உற்பத்தி, போக்குவரத்து, நிதி நிறுவனம், சர்க்கரை ஆலை, மருத்துவமனை, நட்சத்திர ஓட்டல், மின்உற்பத்தி என இக் குழுமத்தின் விழுதுகள் விரிந்து கொண்டிருக்கின்றன.

30 ஆயிரம் மாணவ –மாணவிகளுக்கு மேல் உலகத் தரத்தில் கண்ணியம் –கலாசாரம் – கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு வரும் அந்தக் கல்வி நிறுவனங்களை நிறுவி தலைமை ஏற்று நடத்தி வரும் திரு.அ.சீனிவாசன் அவர்கள் பெரிய படிப்பாளியல்ல, வசதியான குடும்பத்தில் – நகரத்தில் –கல்வியாளர்களுக்குப் பிறந்தவருமல்ல.

மிகச் சாதாரண கிராமத்தில் –வறுமை – கஷ்டத்திற்கிடையே படிப்பிற்கு நேரம் ஒதுக்க

முடியாமல் ஆரம்பப் பள்ளியோடு நின்றுவிட்டவர்.

வசதியில் பிறந்து – வசதியை அனுபவித்து, பாரம்பர்ய செல்வத்தைக் கட்டிக்காக்காமல் அழித்து –அழிந்து போகிறவர்களைக் கூட பார்க்கிறோம். மூதாதையர் அமைத்துக் கொடுத்தவற்றை மேலும் பெருக்குவது என்பது அத்தனை எளிதான காரியமல்ல.

அப்படியிருக்கும் போது எந்தவித அடித்தளமும், சொத்து –சுகம் எதுவுமில்லாமல் சுய உழைப்பில் முன்னுக்கு வந்திருக்கும் சீனிவாசன் நிச்சயமாய் ஒரு முன்னுதாரணம்.

இவரது தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்கள் பெரம்பலூரிலிருந்து மேற்காகத்

துறையூர் சாலையில் ஐந்து நிமிடப் பயணத்தில் அமைந்திருக்கின்றன.

கட்டாந்தரையாக, பொட்டாந்தரையாக – வானம் பார்த்துக் கிடந்த அந்த வறண்ட பகுதியில் எங்குப் பார்த்தாலும் கட்டடங்கள்! பசுமையாய்ப் புல் தரைகள்! மரங்கள்! கம்பீரமாய் மதில் வளைவு! உள்ளே நுழைந்தால் அழகான கட்டமைப்பில் சிமெண்ட் சாலைகள்! வெளிநாட்டுப் பல்கலைக்கழக அளவிற்கு வனப்பு! வசீகரம்!

அங்கங்கே சீருடையில் மாணவர்கள்! பசுமை வளர்க்கும் தொழிலாளர்கள்! வகுப்பு முடிந்து ஓய்விற்கு அல்லது சாப்பிட வரிசை கடைப்பிடித்து நடக்கும் பள்ளியினர்!

எல்லாப் பொறுப்புகளையும் தன் தலையில் சுமக்க வேண்டும் என்பது போல கீழ்த்

தளத்திலேயே –முகப்பிலேயே – சீனிவாசன் `ஐயா'வின் அலுவலக அறை!

நண்பர் தினத்தந்தி குருவுடன் உள்ளே நுழைந்தால் ஆச்சர்யம்! உடையும் மனமும் வெளுப்பாய் வரவேற்கிறார். முகத்தில் கறுப்பையும் பிரகாசிக்கும் வைக்கிற களை! பார்த்த மாத்திரத்தில் நமக்கும் உற்சாகமேற்கும் மலர்ச்சி; நீண்ட அரைக்கைச் சட்டை! எளிமை! வெகுளி!போலியில்லா –ஆடம்பரம் – ஆர்ப்பாட்டமில்லா –அமைதியான அணுகுமுறை! யதார்த்த நாட்டுப்புறாப்பேச்சு!

கல்வியின் அவசியத்தை உணர்ந்த – உணர்த்தி வரும் அவரைப் பார்க்கும் போது `கர்மவீரர்' ஞாபகத்திற்கு வருகிறார்.

நாங்கள் அவரைச் சந்திக்கப் போனது மாலை ஆறு மணிக்கு மேல்! அலுவலக நேரம்

முடிந்தாலும் –அவருக்கு ஓய்வில்லை. அவரது சிந்தை –செயல் எல்லாம் எல்லாம் கல்வி நிறுவனங்கள் பற்றியே!

மாலையில் நிறுவனங்களைச் சுற்றிப்பார்த்துத் தேவைகளை நேரில் பார்த்து – விசாரித்தறிவது அவரது வழக்கம். மாணவர்களோடு அளவளாவி அவர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை சரி பண்ணுவார்.

`ஐயா' என அன்போடு அனைவராலும் அழைக்கப்படும் அவரின் வளர்ச்சியையும், செயல்பாடுகளையும் அருகில் இருந்து பார்த்து- துணையாக இருந்துவரும் –ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.வெங்கட்ராஜ் அவர்களும் நம்மோடு இணைந்து கொண்டார்.

மாலைச் சிற்றுண்டியாக –பிரசாதம் போல சுண்டல் வருகிறது. கவனிக்கவும்- சுண்டல்! ``எடுத்துக்குங்க!'' என்று `ஐயா'வும் எடுத்துச் சுவைக்கிறார். உதவியாளரை அழைத்து ``உப்பு தூக்கலாய்த் தெரிகிறதே! ஹாஸ்டல் மாணவர்களுக்கும் இதுதானே போகும் –கவனமாய் இருங்கப்பா!'' என்கிறார். ஐயா அவ்வப்போது ஹாஸ்டல் விசிட் செய்து உணவுப் பதார்த்தங்களைப் பரிசோதிப்பதுண்டாம்.

ஹாஸ்டலில் மாலைச் சிற்றுண்டி பெரும்பாலும், சுண்டல், பட்டாணி, வேர்க்கடலை, பயிறு... இப்படி எண்ணெயில்லாச் சத்துணவு!

``பிஸா, பர்கர் அது இதுன்னு கொழுப்பு, எண்ணெயும் தவிர்த்து நமது இயற்கை

உணவை இளம் வயதிலேயே மாணவர்கள் பழகிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு'' என்று புன்னகைக்கிறார்.

``மாணவர்கள் இவற்றை ஏற்றுக் கொள்கிறார்களா வரவேற்கிறார்களா...?

``நிச்சயமாய்.நல்ல பழக்க வழக்கங்கள் -நல்ல குணங்கள், கலாச்சாரம் இவற்றை நல்ல விதமாய் எடுத்துச் சொன்னால் நிச்சயம் யாருமே ஏற்றுக் கொள்வார்கள். பிள்ளைகளை நல்லவர்களாக –வல்லவர்களாக உருவாக்கும் பொறுப்புப் பெரியவர்கள் கையில்தான் உள்ளது!'' என்று புன்னகைக்கிறார்.

``நான் எந்தப் பள்ளிக்கூடத்தில் போய் நீதியும் நியாயமும் கத்துக்கிட்டேன்? வழிகாட்ட – மெருகூட்ட பெற்றோர்களும் இல்லை. எல்லாம்

அனுபவம்தான். நான் யாருக்கும் துரோகம் பண்ணியதில்லை. நேரே வா! நேரே போதான்!

யாரையும் எதிரியாய் பாவித்ததில்லை. எனக்கு நண்பர்களும் இல்லை. எந்தக் கெட்ட சகவாசமும் வைத்துக் கொள்வதில்லை. அதனால் நோய் நொடி எதுவும் என்னை நெருங்கினதில்லை. எனக்கு நண்பர்ன்னு சொன்னா அது மனசாட்சி, அப்புறம் கடவுள் மட்டும்தான்.

நண்பர்கள் இல்லைன்னு சொன்னா – நான் யார்ட்டயும் நட்பு பாராட்டறதில்லைன்னு அர்த்தமில்லை, நண்பர்கள்ன்னு வரும்போது பொழுதுபோக்கு, விரும்பியோ விரும்பாமலோ அனாவசிய அரட்டை, சுவாரஸ்யத்திற்காக சின்னச் சின்ன தவறுகள், முறைகேடுகள்ன்னு துணை போக வேண்டி வரும். அதனால்

மொத்தமாகவே அதற்கு நான் நேரம் ஒதுக்கிறதில்லை.

ஒதுக்க முடியறதில்லை. அதுக்குக் காரணம் சின்ன வயசிலிருந்தே நான் என் சொந்தக் காலில் நிற்க வேண்டி வந்த சூழ்நிலை, வறுமை, என் தேவைக்கும் குடும்பத்தின் தேவைக்குமாய் உழைப்பதிற்கிடையே நண்பர்கள் –உல்லாசம்னு –யோசிக்கக் கூட அவகாசமில்லை.

அது அப்படியே மனதிலும் இரத்தத்திலும் ஊறிப்போச்சு, உழைக்கணும், முயற்சிக்கணும். வளரணும், ஏதாவது செய்து முன்னுக்கு வரணும்.உயரணும். மத்தவங்களையும் உயர்த்தணும்னு ஆரம்பித்த ஓட்டம் இன்னும் தொடர்கிறது!’’

உதவியாளர் தேநீர் கொண்டு வர ``எடுத்துக்கங்க'' என்கிறார். அது ஏலம் – எலுமிச்சை-கிம்பு –இஞ்சி கலந்த தே(ன்)நீர்!

கஷ்டப்பட்டு முன்னுக்கு வருபவர்களிடம் இரண்டு விதமான மனோபாவங்களைப் பார்க்கலாம். ``நாம் கஷ்டப்பட்டு வளர்ந்தோமே –இவர்கள் எளிதாய் மேலே வந்துவிடுவதா –இவர்களும் கஷ்டப்படட்டுமே' என ஒரு ரகம்.

சந்தர்ப்ப –சூழ்நிலையில் நாம் கஷ்டப்பட வேண்டி வந்தது. அந்தக் கஷ்டம் பிறருக்கு வந்துவிடக் கூடாது –இவர்கள் வளர எல்லா உதவியும் செய்து தர வேண்டும் என்று நினைப்பது அடுத்த ரகம். சீனிவாசன் ஐயா நிச்சயமாய் இரண்டாம் ரகம்தான்.

உலகத்தில் ஜனங்களுக்கு மிகமிக அவசியமாய்த் தேவைப்படுவது கல்வி அறிவுதான் அது இல்லாமல் –கிடைக்காமல்தான் நம் நாட்டில் பெரும்பாலும் கீழ் மட்டத்திலேயே அல்லாடுகிறார்கள். அதுவும் குறிப்பாய்ப் பெண்கள். இந்த பகுதியில் சரியான கல்வி நிறுவனங்கள் இல்லாததால் பெண்களைப் படிக்க வைப்பதென்பதே குறைவாயிருந்தது. டவுனுக்கு அனுப்ப வசதிப் பிரச்சனை! அடுத்தது –வெளியே படிக்க வைப்பது பாதுகாப்பில்லாதது என்கிற எண்ணம்.

இவற்றிற்கு வழிவகுப்பதுதான் இவர்களின் நோக்கம் அந்த நோக்கத்தில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் வறண்ட பகுதியில் இத்தனை கல்வி நிறுவனங்கள் சாத்தியமாகுமா?

ஏறக்குறைய 30 ஆயிரம் மாணவ மாணவியர்! எட்டாயிரத்திற்கும் மேல் விடுதியில்! 150 பஸ்கள்! இவற்றில் பெரும்பாலும் இலவசம்! பஸ்ஸிற்கும், கல்விக்கும் பெரிய அளவில் கட்டணங்கள் கிடையாது! ஏழை மாணவர்களுக்கு ஏகப்பட்ட சலுகைகள்!

இவற்றுடன் தேசிய நெடுஞ்சாலையில் சிறுவாச்சூர் அருகே தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை. அங்கு இலவச சிகிச்சை! பெரம்பலூர் மற்றும் அக்கம் பக்கமிருந்து நோயாளிகல் பயணிக்க வாகனங்கள். அவையும் இலவசம்!.

## பாகம் 2

சீனிவாசனின் சொந்த ஊர், புகுந்த ஊர் எல்லாமே பெரம்பலூர் அருகேதான். இவரது தந்தை அருணாசல ரெட்டியாரின் ஊர் பெரகம்பி எனும் கிராமம். அப்பாவுக்கு மூன்று உடன் பிறப்புகள். அங்குச் சாதாரண விவசாயக் குடும்பம்.

சொந்த ஊரில் பிழைக்க முடியாமல், அப்பா, அருகில் புது நடுவலூர் எனும் கிராமத்திற்குக் குடி பெயர்ந்திருந்தார். அங்கும் விவசாயம் தான்! அங்கும் சொல்லிக் கொள்ளும்படி எதுவுமில்லை!

சீனிவாசனுடன் பிறந்தவர்கள் 5 பேர்கள். இவர் 6 வது கடைசி, மூன்று உடன்பிறப்புகல்

சின்ன வயதிலேயே காலரா நோய் தாக்கி இறந்து போனார்கள்.

இங்கே அவசியம் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

சீனிவாசனின் இன்றைய வளர்ச்சி – எதைத் தொட்டாலும் சிறக்கும் –சிறப்பிக்கும் – வெற்றி பெறச் செய்யும் பாங்கு இவற்றை வைத்து இவர் `அதிர்ஷ்டசாலி' என்று பேசுபவர்கள் உண்டு.

அதிர்ஷ்டம் –துரதிர்ஷ்டம் இவற்றில் இவருக்கு நம்பிக்கையிருந்ததில்லை. இவரது மூலதனம் –உழைப்பு –முயற்சி –போராட்டம் – தன்னம்பிக்கை!

ஊரோடு ஒத்துக் கும்பலாய்ச் செயல்படுதல் –காற்றுள்ள போது தூற்றிக்

கொள்ளுதல் –அவையோடு அடித்துச் செல்லப்படுதல் –ஆற்று நீரோட்டத்தில் கலத்தல் இப்படி எந்தவித `சாமர்த்திய’மும் இவரிடம் இருந்ததில்லை.

வாழ்க்கை முழுக்கவே இவருக்கு எதிர் நீச்சல்தான்! வெள்ளம், கடற்சுழற்சி, சுனாமி என்று எப்படி வர்ணித்தாலும், அவற்றிற்கு எதிராய்ப் போராடி –சோதனைகள் வர வர அவற்றை எதிர்த்து முன்னேற வேண்டும் என்கிற வைராக்கியம்!

அந்தந்தக் காலகட்டத்தில் தோல்விகளும், பிரச்சனைகளும் மனச் சங்கடத்தை ஏற்படுத்தினாலும் கூட அதற்காக இவர் தளர்ந்து போவதில்லை.

எதிர்ப்பு இவருக்கு எழுச்சி தரும். வெகுண்டெழ வைக்கும் உந்து சக்தி! எத்தனை

சிக்கல்கள் வந்தாலும் அவற்றை மீறி வெல்ல வேண்டும். வென்று காட்ட வேண்டும் என்கிற ஊக்க மருந்தாகவே இவர் தடைகளையும், எதிர்ப்புகளையும் எடுத்துக் கொண்டிருந்திருக்கிறார்.

கவனத்தை எந்த நேரத்திலும் வேறு எதிலும் கசிய விடுவதில்லை. ஒரே சிந்தை! ஒரே செயல்! அதனால் இவருக்கு எதிரிகளே கிடையாது. எதிரிகளாக –போட்டியாளராக யாரையும் நினைப்பதுமில்லை. தொழில் போட்டியாக ஆரம்பிப்பவருக்குக் கூட கை கொடுத்துத் தூக்கிவிடுவதுதான் இவரது சுபாவம்.

இங்கே யாரும் யாருக்கும் எதிரியில்லை. போட்டியாளர்கள் இல்லை. அவரவர்களுக்கு உள்ளது அவரவர்க்கு! முதலில் தன்னை உணரனும். தன் பலம் அறியணும். அதற்குக் களம்

அமைத்து அதற்கு ஏற்றபடி செயல்படணும். எந்தத் தருணத்திலும் நாணயம் தவறக்கூடாது நன்றி மறத்தல் கூடாது.

வாழ்க்கையில் பணம் –காசு –சொத்து சுகம் இல்லாமல் இருக்கலாம். நம்பிக்கை – நாணயம் தவறக் கூடாது. அதில் உறுதி காப்பவர்.

இவர் தப்பான வழிக்குச் செல்வதில்லை. கூட இருப்பவர்களும் அப்படி இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார். அறிவுறுத்துவார். அதே போல பொய் பித்தலாட்டம் கூடாது. வாக்குக் காப்பாற்ற வேண்டும்.

ஓரிடத்தில் ஒரு உதவியோ, பணமோ பெற்றால் அதைத் திருப்பிச் செலுத்துகிற மனப்பக்குவம் வேண்டும். அந்த உத்தரவாதமும் பொறுப்பும் இல்லாதபோது பிறரிடம் கைநீட்டவே கூடாது!

இந்த மாதிரி இளம் பருவத்திலேயே இவருக்குள் ஆயிரம் சிந்தனைகள் ஓடுவதுண்டு. ரத்தத்தில் கீதையும், புத்தரும், விவேகானந்தரும் கலந்திருந்தனர்.

எந்த அளவிற்கு அதிர்ஷ்டக்காரரர் – எப்படியெல்லாம் அதிர்ஷ்டமும், ராசியும் அவருக்கு உறுதுணையாயிருந்திருக்கிறது?

சீனிவாசன், பத்து மாத குழந்தையாயிருக்கும்போதே தாய் பெரியம்மாள் இறந்து போனார், அம்மாவிற்கு என்ன நோய் – என்னாயிற்று என்று தெரியாது –திடீரென வயிறு வீங்கி –அக்கம்பக்கம் போதுமான மருத்துவமனையில்லாமல் –டவுனுக்குக் கொண்டு போய்ச் சிகிச்சை கொடுக்க முடியாமல் இறந்து போனார். அம்மா இறந்த அதிர்ச்சி – துக்கத்தில் உழன்று அதிலிருந்து மீள

முடியாமலேயே அடுத்த இரண்டு மாதத்தில் அப்பாவும் இறப்பு.

வீட்டில் கடைசிப் பிள்ளையாய்ப் பிறந்து –பெற்றோர்களின் அடையாளமே தெரியாமல் அவர்களின் முகங்களைக் கூட ஞாபகப் படுத்திக் கொள்ள முடியாத அளவிற்கு `அதிர்ஷ்டசாலி' இவர்.

அடுத்த இரண்டு வருடங்களில் அக்கா ஒருவரும்கூட இறப்பு!

எந்தவித ஆதரவுமின்றி கைக்குழந்தையாயிருந்த இவரை எடுத்து வளர்த்தது பாட்டி! தாய்வழிப் பாட்டி! அவர் கண்ணாப்பாடி எனும் கிராமத்திலிருந்தார். அவரும் தாத்தாவை இழந்து தனி மரமாகு!

அங்கே சமாளிக்கக்கூடிய அளவிற்குக் கொஞ்சம் வசதி இருந்தது. அதன்பிறகு இவரது குடும்பத்திற்கு எல்லாமே பாட்டிதான்! அன்பு – ஆதரவு –நல்லொழுக்கம் –நற்சிந்தனைகளை போதித்தல் – ஊக்கம் –உற்சாகம் தந்து வளர்த்த்தெல்லாம் அவர்தான்.

பாட்டி, தன் பேரப்பசங்கள் எல்லோரையும் ஒரே மாதிரி சீராட்டி, பாராட்டித்தான் வளர்த்தார். ஆனால் இவரது அண்ணன்கள் இருவர் பொறுப்பாய் இல்லை. வீட்டைப் பகைத்துக் கொண்டு எதிர்மறையாய்ச் செயல்பட ஆரம்பித்தனர். வேண்டாத கூட்டுச் சேர்ந்து ஊதாரித்தனம்!

வறுமை ஒரு பக்கம் என்றால், வீட்டிக்ல் அண்ணன்களின் அடாவடித்தனம் இன்னொரு பக்கம், தலைவலி ஏற்படுத்திற்று. சாதாரணமாய்

மூத்தவர்கள் பொறுப்பாய் நடந்து குடும்பத்தையும் இளையவர்களையும் காப்பாற்றுவதுண்டு. இங்கே அவர் விஷயத்தில் எதிர்மறை அப்படி ஒரு `அதிர்ஷ்டம்' இவருக்கு!

இருவரும் கஷ்டநஷ்டத்தை உணர்வதில்லை, உழைப்பதில்லை,உழைக்கத் தயாராகவும் இல்லை. வேண்டாத சிநேகத்தில் – வேண்டாத பழக்கவழக்கங்கள்! எதுவும் எளிதாய்க் கிடைக்க வேண்டும் சொகுசு வேண்டும் –ஊதாரித்தனம்!

உழைக்காமல், சம்பாதிக்காமல் சொகுசு எப்படி வரும்? ஊரில் சோம்பேறிகளாய் எப்போதும் ஒரு கோஷ்டி இருப்பதுண்டு, முச்சந்தியிலும், டீக்கடையிலும் அமர்ந்து அரட்டை, எகத்தாளம், ஊர்வம்பு!

இந்தக் கும்பலில் அண்ணன்களும் சேர்ந்து கெட்டுப்போக ஆரம்பித்தனர். பாட்டியின் பேச்சு அவர்களிடம் எடுபடவில்லை. கண்டித்தால் எகிறுவர்.

வயலில் வந்து வேலை செய்வதில்லை. உதவுவதில்லை.ஆனால் அறுவடை சமயத்தில் வரும் வருமானத்தை எடுத்துக் கொண்டு ஊரை விட்டு ஓடிப்போய் அது தீர்ந்த பின்பு திரும்பி வருவர். அவர்களைத் தட்டிக் கேட்க முடியாது, திருத்த முடியாது. சீனிவாசனுக்கு வெறுத்தப் போகும் எதிர்த்துப் பேசினால் அடிவிழும்.

சின்ன வயதில் அவற்றை எதிர்கொள்ளும் –தாங்கும் உடல்வலிமையும் மனோதிடமும் சீனிவாசனிடம் இருந்ததில்லை. பயம், தயக்கம், ஒரு சமயம் வீட்டிலிருந்து எதுவும் கிடைக்காமல் போகவே, அண்ணன்கள், பாட்டி

வைத்திருந்த நகைகளை திருடிக் கொண்டு ஓடிப் போயினர்.

எல்லாக் கஷ்டத்தையும் இளமையிலேயே சீனிவாசன் தாங்க வேண்டிய கட்டாயம். பாட்டியை நினைத்து அவரும் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டார். அவரது மனதில் எப்போதும் நாம் வளரணும், முன்னேறணும் –என்கிற தீ! பாட்டி கொடுத்த உற்சாகம் –நிச்சயம் வாழ்வில் ஜெயிக்க முடியும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்திற்று.

வீடு –காடு –மாடுகள் எனப்பார்த்துக் கொள்ள வேண்டிய நெருக்கடியில் சீனிவாசனால் பள்ளிக்கும் சரியாய்ப் போக முடியவில்லை. நாலாம் வகுப்புக்குப் பிறகு பார்க்க முடியாத நிலைமை.

அந்த நாட்களில் பள்ளிக் கட்டணமாக நெல் அல்லது வரகு –என்றால் இரு மடங்கு தர வேண்டும். வாத்தியார்களுக்குக் காய்கறி பால்! இப்படி எல்லாம் தரணும். இவற்றைத் தர முடியாமல் போனதும் கூட படிப்பை நிறுத்துவதற்குக் காரணமாயிற்று.

படிப்பு இல்லாவிட்டால் என்ன – வாழ்வில் முன்னுக்கு வந்தவர்களெல்லாம் நிரம்பப் படித்துவிட்டா வந்தார்கள்? நாமும் அவர்களைப் போல முன்னுக்கு வருவோம் எனக் கடுமையாக உழைக்க ஆரம்பித்தார்.

இவருக்கு ஊக்கம் தந்தது ஒரு பக்கம் பாட்டி –மறுபக்கத்தில் எம்.ஜி.ஆரின் படங்கள். அவரது படப்பாடல்கள்! அவரது படத்தில் போதிக்கும் விஷயங்கள் எல்லாம் இவரை வளப்படுத்தின. தன்னம்பிக்கையை ஏற்படுத்தி

நேர்மை –நியாயம் –கடமை –கண்ணியம் – கட்டுப்பாடுப் பாதையில் வழிகாட்டின.

சில வருடங்கள் கஷ்டப்பட்டு ஓரளவிற்கு வயல் வரப்புகளைப் பாதுகாத்து வைத்திருந்த போது ஓடிப்போன அண்ணன்கள் திரும்பி வந்தனர். திருடின நகைகள் விற்று – தீர்ந்திருக்க வேண்டும்.

மறுபடியும் பிரச்சனை. பொறுப்பில்லாமல் நடந்து கொண்டோம் – வீட்டில் திருடினோம் – ஓடிப்போனோம் என்கிற வருத்தமோ –கூச்ச நாச்சமோ கொஞ்சமும் அவர்களிடமில்லை, தங்களின் தவறுகளை மறைக்க வேண்டித் தகராறு பண்ணக் கிளம்பினர்.

இந்த முறை அடித்துக் கொண்டு போக பணமோ, தானியமோ, நகைகளோ கிடைக்காத போது தங்களின் பங்கைப் பிரித்துத் தரும்படி

சண்டைபிடித்தனர். மறுபடியும் மண்டைக் காய்ச்சல்! சம்மதிக்கா விட்டால் வெளியே அசிங்கமாகும். பசி –பட்டினி பரவாயில்லை – தாங்கிக் கொள்ளலாம். மானம் போகும்,ஊர் கேலி பேசும்.

வேறு வழியில்லாமல் இருந்த பவுன்களைச் சகோதரர்களுக்குப் பிரித்து கொடுத்து நிலங்களைப் பிரித்து எழுதினர். ஆனால் அவர்கள், தங்கள் பங்கில் பாடுபடாமல் வெளி நபருக்கு விற்றுவிட்டுக் கிளம்பினர்.

அது சீனிவாசனுக்கு மேலும் வருத்தம் தந்தது. என்ன உடன் பிறப்புகள் இவர்கள்! நம்மை வாழவே விடமாட்டார்கள் போலிருக்கிறதே என நோகடித்தது. ஆனாலும்கூட இவர் மனம் தளரவில்லை.

அப்போது அவருக்கு 14 வயது,

கொஞ்சம் வெளி அனுபவத்தில் துணிவு கொஞ்சம் வந்திருந்தது. எதையும் எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை! தொடர்ந்து செயல்படு எனும் உந்துதல்!

நாம் தப்புச் செய்யாத போது – நேர்மையாய் நடக்கும்போது எதற்காகக் கலங்கணும்? எதற்காகப் பயப்படணும் என்று சமயோகிதம் அறிந்து பயிரிட ஆரம்பித்தார். வெங்காயம், மிளகாய்,நிலக்கடலை என நன்றாகச் சாகுபடியாயிறு. மெல்ல மெல்லப் பணம் சேர்த்து அண்ணன்கள் விற்ற –தங்கள் பூர்வீக நிலங்களைத் திரும்ப வாங்கினார்.

அது இவரது வாழ்வின் முதல் சாதனை. அது –முயன்றால் முடியாததில்லை –இங்கு எதையும் பெறலாம் –என்கிற மனபலத்தைத்

தந்தது. மனம் பலப்படும்போது இயல்பாகவே உடலும் பலப்படுகிறது.

என்னதான் நிலங்கள் இருந்தாலும், விவசாயம் செய்தாலும் கூட மழை -காற்று –வெள்ளம் –வறட்சி –என இயற்கையின் முரண்பாடுகளால் போதுமான அளவில் பலன் கிடைக்காமல் போகும் நிலைமை.

உடன்,மனது வேறு வழிகளிலும் சிந்திக்க ஆரம்பித்தது.

## பாகம் 3

அந்த நாட்களில் அதாவது 1958 வாக்கில் –கிராமங்களில் மின்சாரம் கிடையாது. பாசனத்திற்குப் பம்பு செட்டுகள் இல்லை. அப்போது நீர்ப் பாசனத்திற்கு -மாடு கட்டி – தாம்புக் கயிறு –சாலில் தும்பி கட்டித்தான் இறைப்பார்கள்.

தினமும் இரவு பகலாய்த் தண்ணீர் இறைக்க வேண்டி இருக்கும், இல்லாவிட்டால் பயிர் காய்ந்து விடும். அந்த மாதிரி இறைக்கும் போது ஒரு சமயம் தும்பி கிழிந்துவிட – அண்ணனுக்கு மகாகோபம்.

``பொறுப்பிருக்கா உனக்கு ....? ஏன் தும்பியைக் கிழித்தாய்...? என்று சீனிவாசனைப்

போட்டு அடித்துவிட்டார். அது இவரை ரொம்பவே நோகடித்தது.

``எனக்கா பொறுப்பில்லை! ராத்திரி பகலாய் உழைக்கிறேன் வெயிலும் மழையிலும் அவஸ்தைப்படுகிறேன். உணவு –உடை –பொழுதுபோக்கு –சொகுசு என்று எல்லாம் துறந்து –மறந்து பாடுபடுகிறேன்.

தும்பி பழசாகிக் கிழிந்துவிட்டால் அதுக்கு நானா பொறுப்பு! ஊர் சுற்றியான அண்ணன் எப்படி என்னை அடிக்கலாம்? உழைப்பிற்கும் உண்மைக்கும் கிடைக்கும் பரிசு இதுதானா?

என்னை அடிக்க அல்லது தண்டிக்க அண்ணனுக்கு என்ன தகுதியிருக்கிறது? கட்டபொம்மன் பாணியில் ...! உழுதாயா... நாற்று நட்டாயா –களை பறித்தாயா –நீர் இறைத்தாயா

..வியர்வை சிந்தினாயா ..அடிக்க மட்டும் வந்து விட்டாயே .. நீ யார் என்னைத் தண்டிக்க..' என்று மனது ஆவேசப்பட்டது.

வயதில் மூத்தவன் என்கிறதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாமா?

ஆனாலும் கூட அண்ணன் எதிர்க்கும் -சண்டை பிடிக்கும் தைர்யம் வரவில்லை. முடியவில்லை. விரக்தி, வெறுப்பு, போதும்டா சாமி, இங்கே ஊரில் என்ன செய்தாலும் முன்னுக்கு வர முடியாது என்று தீர்மானித்தார்.

ஊரில் ஒப்பேற்ற முடியாதவர்கள்! பட்டணத்திற்கு ஓடிப் போவது அந்த நாளில் வாடிக்கை! அந்த மாதிரி ஓடிப் போன சிநேகிதர்களின் யோசனைப்படி சீனிவாசனும் ஓட்டம்!

வேறு எது பற்றியும் சிந்திக்கவில்லை.எங்கு –எத்தனை கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. இவர்களுக்கு முன்னில் வளர்ந்து காட்டணும் என்கிற வைராக்கியம். கஷ்டம் தனக்குப் புதிதல்ல.கல் – முள் –வெயில் –மழை ஒரு பொருட்டல்ல. எல்லாம் பார்த்தாயிற்று. பாரம் சுமந்தாயிற்று. இதற்கு மேல் என்ன கஷ்டம் வந்துவிடப்போகிறது?.

சின்ன வயதிலேயே இதற்கு முன்பும் சீனிவாசன் சென்னைக்குப் போயிருக்கிறார். நண்பர் ஒருவர் இவரை வால்டாக்ஸ் ரோடில் ஒத்தக்கடை தியேட்டரில் வேலைக்குச் சேர்த்து விட்டிருந்தார்.

அங்கு எடுப்பு வேலை, நாற்காலி தூக்கணும், துடைத்துச் சுத்தம் செய்யணும்.

காலையில் 1 பணம், இரவு 1 பணம் கூலி கிடைக்கும்.

அதையே கை மேல் பலனாய் நினைப்பார். கையில் காசு பார்க்கும் சந்தோஷம். உழைப்பின் ஊதியம்! சின்னதோ பெரிதோ பலன் உடன் கிடைக்கிறது. வருமானம் கண்முன் தெரிகிறது.

விவசாயத்தில் உடனே எதையும் எதிர்பார்க்க முடியாது. நிலம் சுத்தம் பண்ணி – உழுது –பயிரிட்டு –களை பறித்து –மருந்தடித்து – உரமிட்டு –மழை –இயற்கை சீற்றத்துக்குப் போராடி –ஈடு கொடுத்து –இரவு பகலாய்ப் பாடுபட்டாலும் –மூன்று மாதமோ –ஆறு மாதமோ கழித்துத்தான் பலன் தெரியும்.

தானியம் வீட்டுக்கு வந்தாலும்கூட விற்கும்போது உரிய விலை கிடைக்காது. தூக்கிச்

சுமந்து கொண்டு போய்ப் போன விலைக்குத் தள்ள வேண்டும்!

ஆனால் –அங்கே –மதிப்பு மரியாதையில்லாவிட்டாலும் உடனே காசு கிடைக்கிறது! சொத்து சுகமில்லாவிட்டாலும் எங்கே வேண்டுமானாலும் போய்ப் பிழைக்கலாம் என்கிற தன்னம்பிக்கை அவருக்கு அப்போது வந்திருந்தது.

அந்தத் துணிச்சல் காரணமாய் –வானமே எல்லை –பூமியில் எதுவும் இல்லாமலில்லை –ஒரே வானம் –ஒரே பூமி –எல்லாம் நமதே என்று பொள்ளாச்சிக்கு ஓட்டம்!

ஆழியாறு டேமில் கல் தூக்கினார். அங்கு ஒருவாரம் பத்து நாட்கள் சம்பாதித்துச் சென்னைக்குப் பயணம்!

வால்டாக்ஸ் ரோட்டில் சுந்தர் லாட்ஜில் தங்கி அங்கு இரவு கடையில் மாலை 4 முதல் 11 வரை எடுபிடி. 60 ரூபாய் சம்பளம், கூட வேலை பார்த்தவர்கள் பகலில் தூங்கி அல்லது ஊர் சுற்றிப் பொழுதைக் கழிக்க, சீனிவாசனுக்கு அப்படி வெட்டியாய்ச் சுற்றித் திரிய மனமில்லை.

சும்மா சுற்றுவதற்குப் பதில் பகலிலும் ஏதாவது வேலை செய்யலாமே என்று வேலை தேடினார். எக்மோர் சந்திரபவனில் கிடைத்தது. காலை 8 முதல் மதியம் 1 மணி வரை –அங்கும் 60 ரூபாய் சம்பளம்.

இரண்டு இடத்திலும் தொடர்ந்து வேலை. ஓய்வு கிடையாது. லீவ் எடுப்பதில்லை. எந்த ஒரு காரியத்திலும் ஆத்மார்த்தமாய், மனம் ஒன்றி ஈடுபட்டால் உடல் சோர்வதில்லை.

ஓய்வும் தேடுவதில்லை, உற்சாகமாய்ச் செயல்பட முடியும்.

முடிந்தது!

இதற்கிடையில் பாட்டிக்கு உடம்பு முடியாமல் போக – சீனிவாசனைத் தேடியிருக்கிறார்கள். ஆறு மாதத்திற்கு பிறகு எப்படியோ தகவல் பெற்று அண்ணன் இவரைத் தேடி வந்து விட்டார், கண்டுபிடித்து -``வா ஊருக்குப் போகலாம் –பாட்டி உன் நினைப்பில் வாடுகிறது ''என்று அழைத்தார். உடன் இவரது மனதும் கரைந்து போயிற்று, பாட்டி நினைப்பு எடுக்க -``சரி போய் ஒரு எட்டு பார்த்து வருவோம்'' என்று கிளம்பினார்.

## பாகம் 4

விவசாயம் என்பது இன்று மட்டுமில்லை அன்றும்கூட லாபகரமானதாய் இல்லை. விவசாய நாடு என்கிறோம். விவசாயிதான் நாட்டின் முதுகெலும்பு என்போம். ஆனால் அவனுக்கு இருக்கும் பிரச்சனைகளை எவரும் கண்டுகொள்ள மாட்டோம்.

தண்ணீர், மின்சாரம் தட்டுப்பாடு, உரத்தட்டுப்பாடு, கூலிக்கு ஆள் கிடைப்பதில்லை. கௌரவம் பார்த்துக் கொண்டு ஆட்கள் நகரத்திற்கு படையெடுத்தல்! பட்டணம் என்றால் சொகுசு வேலை – சொகுசாய் இருக்கலாம் என்கிற கனவு.

கஷ்டப்பட்டுப் பயிர்களை வளர்த்தாலும் நோய்த் தாக்குதல், பூச்சி, அரிப்பு! மருந்தடித்து மாள்வதில்லை. தேவைக்கு மழை இல்லாமல் அறுவடை சமயம் வந்து அழித்தல்!

முன்பெல்லாம் ஆடு, மாடுகள் கிராமங்களில் பெருத்திருக்கும். மாடுகள் –வண்டி –ஏர்- அவற்றிற்குத் தீவனம் –அவற்றின் மூலம் பால் -எரு என இயற்கையோடு ஒன்றி – செயல்பட்ட காலத்திலும் கூட நஷ்டம்.

என்னதான் முனைந்து பாடுபட்டாலும்,எதிர்ப்பார்க்கிற பலன் விவசாயிக்குப் போய்ச் சேர்வதில்லை. எல்லாப் பிரச்சனைகளையும் மீறி மகசூல் எடுத்தாலும் கூட உரிய விலை கிடைப்பதில்லை.

ஆகையால் விவசாயத்தை மட்டும் நம்பியிருந்து பிரயோஜனமில்லை என்பது

சீனிவாசனுக்குப் புரிந்தது. இளம் ரத்தம். உள்ளுக்குள் வேகம் –உடலில் தெம்பு! மனதில் மமதை! நம்மால் முடியும் –முடியாதது எதுவுமில்லை என்கிர வெறி.

ஊரில் வானம் பார்த்த பூமி ஆறு மாதத்திற்கு மட்டுமே வேலை. மற்ற நாட்களில் வெட்டியாய்ப் பொழுது போக்குவரத்து இவருக்குப் பிடிப்பதில்லை. உருப்படியாய் எதுவும் செய்யாமல் –வாழ்வை வீண்டிக்கிறோம் என்கிற உறுத்தல்.

வேலையில்லை –சும்மாயிருக்கிறோம் என்பதற்காக ஊரை விட்டுப் போக முடியாது! விவசாயப் பணிகள் இல்லாவிட்டாலும் கூட மாடுகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும். வயிலிலும் சின்னச்சின்ன வளப்படுத்தும் வேலைகளையும் செய்தாகணும்.

நிலங்களையும் கவனித்துக் கொண்டு, அதிகப்படி வருமானத்திற்கு என்ன செய்யலாம் என்கிற யோசனை போயிற்று.அப்போது உதித்தது மளிகைக்கடை! அத்துடன் டீ ஸ்டால்! அப்புறம் சைக்கிள் கடை!

கடை என்று ஆரம்பித்த பின்பு – பலருடனும் பழகும் வாய்ப்பு! செல்வாக்கு! அத்துடன் கொஞ்சம் செருக்கும் தோன்றும். எப்போதும் எதிலாவது உடலைச் செலுத்தும் போது திருப்தி. மனதும் செழிக்கும், உடலும் வளப்படும், நம்மால் எதையும் செய்யமுடியும் என்கிற தன்னம்பிக்கையும் வளர ஆரம்பித்தது.

புது நடுவலூரில் கடை வளர்ந்து வந்த போது சீனிவாசனின் அண்ணன் ஒருவர் இறந்து போனார், கடைக்கும், வயலுக்கும் ஆள் தேவைப்பட்டது.

அப்போது 1959.

இன்னொரு அண்ணன் எல்லாவற்றையும் அழித்துவிட்டு ஆதரவில்லாமல் இருக்கவே சீனிவாசன் அவரை அழைத்து வந்து தன்னுடன் வைத்துக் கொண்டார்.

அதுவரைப் பட்ட கஷ்டமெல்லாம் போய்ச் செல்வாக்குடன் அவர் முன்னுக்கு வரும்போது கண்படுகிற மாதிரி சிக்கல் ஒன்று இவரது கதவைத் தட்டிற்று.

ஆக்கல் என்பது கடினம், அழிப்பது ரொம்ப எளிது. கிராமத்தில் அடிமட்டத்தில் கிடந்த ஒருவன் –அதுவும் சிறுவன் வேகமாய் முன்னுக்கு வருகிறான் என்பதைப் பலராலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இவனை எங்கே தட்டலாம் –எப்படிக் குழி பறிக்கலாம் என்று பலரும் பார்த்திருந்தனர். சீனிவாசன் எதைப்பற்றியும் கவலைப்படாமல் எந்த பிரச்சனைக்கும் இடம் தராமல் காரியமே கண்ணாய் இருந்தார்.

அங்கு ஊரில் அப்போது ராஜ் ரெட்டியார் என்பவர் மிகவும் செல்வாக்குடன் இருந்தார். வசதி –மிடுக்கு –செருக்கு என எல்லாமும் கொண்டவர். அவருக்கு ஒரு மகள்.

அவள் கடைக்கு வரப்போக –சும்மா திரிவதைச் சிலர் திரித்துவிட்டனர். தீ கொளுத்திப் போட்டனர்.

சீனிவாசனுக்கும் அவளுக்கும் காதல்
என்றும் –இருவரும் ரகசியமாய்ச்
சந்திருக்கிறார்கள் –ஓடிப்போய் கல்யாணம்

செய்து கொள்ளப் போகிறார்கள் என்றும் வதந்தி பரவிற்று.

சீனிவாசனுக்கு அந்த மாதிரி எந்த எண்ணமும் அவளிடம் இல்லை. ஆனால் ரெட்டியார் அதை நம்பவில்லை. பாரம்பர்யப் பணக்காரரான அவருக்குக் கௌரவப் பிரச்சனை.

நேற்று முளைத்தவனுக்குத் தன் மகள் கேட்கிறதா என்று கோபம் ஆவேசம், அதைச், சுற்றியுள்ள சோம்பேறி வட்டமும் ஏற்றிவிட்டது அவர் மகள் மறுப்பதையோ, சீனிவாசன் கெஞ்சுவதையோ பொருட்படுத்தவில்லை.

அக்கம் பக்கம் ரெங்கநாதபுரம், பாளையம் , தம்பிரான்பட்டி போன்ற இடங்களிலிருந்து ஆட்களை வரவழைத்துக் கடையை அடித்து நொறுக்கினார். சீனிவாசன்

குடியிருந்த வீடும் இருந்த இடம் தெரியாமல் சேதப்படுத்தப்பட்டது –எரிந்து சாம்பலாயிற்று.

பாடுபட்டு வளர்த்த்தெல்லாம் ஒரே நாளில் போயிற்று. வாக்குத் தவறாதவன் என்கிற பெயரும், நாணயமும் கெட்டுப் போனது, உடமைகள் போனது மட்டுமின்றி அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலைமை.

சீனிவாசனுக்கு எதிராய் மக்களைத் திரட்டினார். ஊரில் யாரும் இவருடன் பழகக்கூடாது எனக் கட்டளை. மீறினால் அவர்களுக்கும் மண்டகப்படி! சீனிவாசனுக்கு சைக்கிள் தரக்கூடாது, கடைகளில் சாமான்கள் தரக்கூடாது என இவரை ஒதுக்கி வைத்தனர். அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழியில்லாத நிலைமை!

எத்தனை நாள் தான் பட்டினியாய் இருக்க முடியும்? பாட்டிதான் இவருக்கு அப்போது ஆறுதல், ``எதுக்கும் கவலைப்படாதே. மனம் தளராதே! எல்லாம் கூடிய சீக்கிரம் சரியாகும் அமைதியாயிரு!'' என்று தேற்றுவார்.

எப்படி....? எப்படிப் பாட்டி முடியும்? நான் யாருக்கு என்ன கெடுதல் பண்ணினேன்? எதுக்காக எனக்கு இந்தத் தண்டனை? அந்தப் பொண்ணை நான் நினைச்சுக்கூட பார்த்ததில்லை. செய்யாத தப்புக்கு எதுக்காக நான் அடிபடணும்?

முன்பு வசதியில்லாதப்போ –இல்லாத கொடுமையைப் பொறுத்துக்க முடிஞ்சது. கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சு, ஓரளவுக்கு வளர்ந்தபின்பு சம்பந்தமேயில்லாமல் அழிந்து போவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை அவரால்.

பாட்டிக்கு அவரது வருத்தம் புரிந்தது. சீனிவாசன் அங்கே இருக்கும் வரை பிரச்சனைதான். ராஜ் ரெட்டியாருக்கு அவரைப் பார்க்கப் பார்க்க கோபம்தான் எழும். தான் இத்தனை மிரட்டியும்கூட ஊரிலேயே இருக்கிறானே என்கிற ஆத்திரம் எழும். அவருக்கும் கௌரவப் பிரச்சனை.

எல்லாம் இழந்தபின்பு அங்கே இருப்பதில் அர்த்தமில்லை. எந்தப் பிரயோஜனமும் இல்லை. அங்கே இருக்கும் தோறும் பிரச்சனைதான். இரண்டு பக்கமும் புகைச்சல், வைராக்கியம் எழும்.

ராஜ் ரெட்டி யார்க்குப் பணபலம், ஆள் பலம் இருக்கிறது. பேரனுக்கு அவை இல்லாவிட்டாலும் கூட இளம் ரத்தம் சட்டென ஆவேசப்பட்டு மடத்தனமாய் ஏதாவது

செய்துவிடக் கூடாது. காலம் வலிது, காலம், காயத்தை ஆற்றும், இரண்டு பக்கமும் கோபத்தைத் தணித்து இயல்புக்குக் கொண்டு வரும். அதற்கு முதல் தேவை – சீனிவாசன் ஊரைவிட்டுப் போவதுதான் எனப் பாட்டி முடிவெடுத்தார்.

சீனிவாசனைப் பக்கத்துக் கிராமமான பெரகம்பிக்கு அவரது பெரியம்மா வீட்டுக்கு அனுப்பினார். சீனிவாசன் அவர்கள் வீட்டில் இருந்து கொண்டு அங்கு வியாபாரம் பார்த்தார். ஆனாலும் கூட சுழி விடவில்லை. மனது அங்கே லயிக்கவில்லை.

எத்தனை சமாதானப்படுத்தினாலும் கூட மனது ஆறவில்லை. பழையதை மறக்க முடியவில்லை. காலம் காயத்தை ஆற்றவில்லை.

தீயை அணைக்கவில்லை. அதற்குப் பதில் அதிகரிக்கவே செய்தது.

அவர்கள் வசதி படைத்திருக்கலாம். பலம் பெற்றிருக்கலாம், இதெல்லாம் இவர்கள் மூதாதையர்கள் சம்பாதித்தது. இதில் அவர்கள் பங்கு என்ன? தண்டச்சோறுகள்! உழைப்பில்லை. கஷ்டப்படலை, சொகுசை அனுபவிப்பவர்களுக்குப் பிறர் கஷ்டம் புரியாது, தெரியாது.

நான் உண்டு என் தொழில் உண்டு என்றிருக்கிறேன். ராஜ் ரெட்டியாரே.... உன்னிடம் வந்தேனா? உன் விஷயத்தில் தலையிட்டேனா?

என் மேல் கைவைக்க உனக்கென்ன அதிகாரம்? உரிமை? எளியவன் என்பதாலும் கேட்க ஆளில்லை –நாதியில்லை என்பதாலும் நீ

என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? செய்வாயா?

ஊரில் நீ மட்டும்தான் வாழணுமா? உனக்கு மட்டும் ஊர் சொந்தமா? பணம் இருந்தால் அதை உன் வீட்டில் வைத்துக் கொள். உன் பணத்தால் யாருக்கும் எந்தப் பிரயோஜனமுமில்லை. காலணா அடுத்தவர்களுக்குக் கொடுக்காத உனக்கு எதற்காகச் செல்வாக்கு? ஊர் எதற்கு உனக்குப் பயப்பட வேண்டும்?

உள்ள செல்வம் –செல்வாக்கை வைத்து ஊருக்கு நல்லது செய்ய வேண்டும். ஆக்கத்திற்குப் பாடுபடவேண்டும். அதைவிடுத்து அழிக்கக் கிளம்புகிறாயே நீ மனிதனா?

நான் வளர்கிறேன் என்றால் நேர்மையாய் உழைக்கிறேன். செயல்படுகிறேன், அது உனக்குப்

பொறுக்கவில்லை. யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு பெற்ற மகளையே சந்தேகிக்கிறாய். நீ சரியாயிருந்தால் மகள் எப்படி உன்னை மீறுவாள்? அவளும் அடங்கித்தான் கிடக்கிறாள். எனக்குத் தேவை என்றால் –நான் விரும்பினால் உன் மகளைத் தூக்கிக் கொண்டு போக எவ்வளவு நேரமாகும்?

தூக்கிப் போய் தாலி கட்டிவிட்டால் அப்புறம் என் கௌரவம் என்னாகும்? என்னை நீ தண்டிக்கலாம், அப்புறம் அதன்பின் என் மகளின் எதிர்காலம் என்னாகும்?

நான் நிஜமாலும் உனக்குப் போட்டி என்றால் நேருக்கு நேர் நின்றுபார்!

நான் உன்னைப் போட்டியாக நினைக்கவில்லை. எனக்குப் போட்டி என்று எவருமில்லை. அப்படி நினைக்க வேண்டிய

அவசியமும் அவகாசமும் இல்லை. வசதியிலோ – வயதிலோ –அனுபவத்திலோ உன் அளவிற்கு இல்லாத என்னைப் பார்த்து எப்படிப் பொறாமைப் படலாம்? வயிறு எரியலாம்?

போட்டிக்கு ஒரு தகுதி வேண்டும். போட்டியாளருக்கு நாகரிகம் இருக்கவேண்டும். அது இல்லாத போது என் செல்வாக்குக்கு என்ன அர்த்தம்? என்ன விலை?

சீனிவாசனின் மனது உழவ ஆரம்பித்தது. என்னைக் கட்டுப்படுத்தவும், ஒதுக்கி வைக்கவும் அவர் யார்? நான் ஏன் அவருக்கு அடங்க வேண்டும்?

நெஞ்சு எகிறிற்று, ரத்தம் சூடேறிற்று. யாருக்கோ பயந்து ஏன் ஊரைவிட்டு வெளியேற வேண்டும்? என் பயம் கடவுளிடம் மட்டும்தான். நியாயமாய் நடக்கும்வரை கடவுள் எனக்குத்

துணையிருப்பார். நான் அவர் முன்னிலேயே வளர்வேன். இனி என்ன வந்தாலும் சரி, பயப்படப் போவதில்லை. போராடு! மறுபடியும் குறுக்கே வந்தால்....

வந்தால்....

சீனிவாசன் வெகுண்டெழுந்தார்.

ஏதோ ஒரு வேகம் எழ –சீனி சும்மா கிடந்த பெரகம்பிக் கோயில் நிலத்தை ஏலத்தில் குத்தகைக்கு எடுத்தார். அப்போது வைகாசி மாசம், காற்றடி நாள், வறட்சி. இருந்த தண்ணீரை வைத்து நஞ்சை பயிரிடக் கிளம்பினார்.

## பாகம் 5

நஞ்சை, மழைக்காலத்தில்தான் பயிரிட முடியும். அதற்கு வேண்டிய தண்ணீரும் சீதோஷ்ண நிலையும் அப்போதுதான் கிடைக்கும். இதெல்லாம் சீனிவாசனுக்குத் தெரியாமலில்லை. தெரியும். ஆனாலும்கூட ஆவேசம்! உள்ளுக்குள் ஒரு வேகம் சரியாய் நடக்கும் என்கிற தைரியம்.

ஊர்க்காரர்களேல்லாம் அவரை ஏளனம் பேசினார்! கண்ணாபாடியானுக்கு புத்தி மழுங்கிப் போச்சு! லூஸ் என்றனர். சொத்து – பத்து போனதில் மரை கழன்று போச்சு –இல்லாட்டி இப்போ போய் தஞ்சை ஓட்டுவானா என்று காது படவே நகையாடினர்.

ஆனால் அவர் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. செயல்படு! எல்லாம் நல்லபடியே நடக்கும் என்கிற நம்பிக்கை. பாஸிடிவ் திங்கிங்! நல்லது நினைத்தால் – நல்லதை நம்பினால் –நல்ல விதம் முயன்றால் – நன்றாக உழைத்தால் இயற்கையும் துணை இருக்கும், நல்லதே நடக்கும் என அவர் நம்பினார்.

அதன்படியே – அப்போது நல்ல மழை பெய்தது. யாரும் அதை எதிர்ப்பார்க்கவில்லை. அவர் எதிர்பார்த்தார். ஏளனம் செய்த வாய் அடைத்துப் போயிற்று அன்று.

நெல்லும் கரும்பும் பயிரிட்டு அமோக மகசூல்! அதற்கு நல்ல விலையும் கூட கிடைத்தது. அது சீனிவாசனுக்கு உற்சாகம் தந்தது. தெம்பு! துணிவு. யாருக்கும் நாம் பயப்பட

வேண்டியதில்லை. யாரும் இனி என்னை வீழ்த்த முடியாது. எதுவும் நம்மால் முடியும்.

இனியும் கோழையாக இருக்கக்கூடாது. இருக்க மாட்டேன். என் வழியில் யார் குறுக்கீடும் இனிக் கூடாது குறுக்கே வந்தால் எதிர்பேன், விரட்டுவேன்! வருவது வரட்டும். வரும்போது பார்த்துக் கொள்ளலாம். அடங்கிக் கிடந்து போதும்.

என்னதான் உழைத்தாலும் கஷ்டப்பட்டாலும் கிராமப் பகுதிகளில் வளர்ச்சி என்பது சிறிய அளவில்தான் முடியும் யோசித்துப் பார்க்கும் போது தன் முயற்சியும் உழைப்பும் வீணாகிறதோ என்கிற எண்ணம் அவருக்கு எழுந்தது. இதே உழைப்பை டவுனில் செய்தால் இன்னும் அதிக வருமானம் பார்க்கலாம்.

வேகமாய் முன்னேறலாம் என்பது அவருக்கு மெல்லப் புரிய ஆரம்பித்தது.

டவுன் எனும் போது சுற்றுப்பக்கம் முழுக்க வருவர். வியாபாரம் தொடங்கினால் பெரிதாக்கலாம் என ஆராய்ந்த போது பெரம்பலூர் பரவாயில்லை என்று தோன்றிற்று. அவருக்கு அருகிலுள்ள –தெரிந்த ஒரே நகரம் பெரம்பலூர் தான்!

1961 அவருக்குத் திருப்பம் தந்த வருடம்.

பெரம்பலூரில் தெப்பக்குளம் அருகே இடம் பார்த்து டீக்கடை ஆரம்பித்தார். அது நன்றாக வளர ஆரம்பித்தது. அதற்குத் தேவையான பால் வெளியே வாங்கும்போது – போதுமான தரத்தில் இல்லை. வேண்டிய நேரத்திற்கும் கிடைப்பதில்லை. அதனால் –ஏன்

நாமே பால் பண்ணை நடத்தக்கூடாது என்று யோசனை போயிற்று.

அதற்கு முன்பே கிராமத்தில் மாடுகள் வளர்த்து பால் கறந்து விற்ற அனுபவம் அதற்குக் கைகொடுத்தது.

வெள்ளாரிபட்டு எனும் ஊரில் பால் டெண்டர் எடுத்தார். 1963 -68 வரை 5 வருடங்கள் இவர் பட்ட கஷ்டம் அதிகம். விடியற்காலையில் சைக்கிளில் போய் பால் கறந்து 30 கி.மீ. சைக்கிள் மிதித்து பெரம்பலூருக்கு வருவார். இங்கே பாலை 5 மணிக்குள் பைசல் பண்ணிவிட்டு டீக்கடை வேலை!

மதியம் திரும்ப சைக்கிள் மிதித்து போய் பால் எடுத்து வருவார். இப்படி தினம் 4 முறை சைக்கிள் பயணம்! ஒரு நாளைக்கு 120 கி.மீ சைக்கிள் மிதிக்கணும்! தூக்கம் கெடும்.

அலுப்பாகும். ஆனாலும் கூட தளர்வதில்லை. தன் முன்னேற்றத்திற்கு இறைவன் ஒவ்வொரு வழியாகக் காட்டும்போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் உஷாராக இருப்பார்.

வாய்ப்புகள்!

ஆங்காங்கே கொட்டிக் கிடக்கின்றன. அவற்றை நாம்தான் தேடிப் போக வேண்டும். எது நமக்கு உகந்ததோ அதைத் தேர்வு செய்து களத்தில் இறங்க வேண்டும். நமக்கு உகந்தது கிடைக்காவிட்டால் –கிடைப்பதை உகந்ததாக்கிக் கொள்ள வேண்டும்.

அதுதான் புத்திசாலித்தனம். வெற்றிக்கு முதல்படி.

டீக்கடை எதிர்பார்த்தபடியே வளர ஆரம்பித்தது. அப்புறம் –டீயுடன் டிபன், சாப்பாடு, என ஹோட்டலாக மாறிற்று. அங்கு மொத்தம் 8 பேர்கள் வேலை செய்தனர்.

சீனிவாசன் –முதலில் எழுந்து பால் கறந்து வந்து, கடையைச் சுத்தம் பண்ணி டீ போட்டுத் தந்துதான் ஆட்களை எழுப்புவார். வேலைக்காக அவர் அஞ்சுவதில்லை. வேலைக்காரந்தானே என்று ஊழியர்களை அலட்சியப்படுத்துவதில்லை.

அன்று முதல் இன்றுவரை மனிதாபிமானம் இவரைக் காக்கிறது. உயர்த்துகிறது, உயரத்தில் வைத்திருக்கிறது.

டீக்கடை ஓரளவிற்கு நிலைத்தும் அடுத்து உரக்கடை, புண்ணாக்குக் கடை எனத் திட்டமிட்டார்.

சீனிவாசனின் வெளியூர் வளர்ச்சியும் கூட எதிரிகளுக்குக் குறிப்பாய் அந்த ராஜ் ரெட்டியார், ராமசாமி ரெட்டியார் போன்றோர்களுக்குப் பொறுக்கவில்லை. உள்ளூரில் வாழ விடாமல் பண்ணினது பத்தாது என்று பெரம்பலூரிலும் இடைஞ்சல் பண்ண ஆரம்பித்தனர்.

``விட்டால் இவன் எங்கோ போய்விடுவான் போலிருக்கே –நம்மைவிட பெரிய ஆளாயிருவானே'' என்கிற ஆதங்கம் ஆற்றாமை!

சீனிவாசன், கடைகள் ஆரம்பிக்க இடம் தேடும்போது –சம்பந்தப்பட்டவர்களிடம் போய் கட்டடம் கொடுக்கக்கூடாது என்று மிரட்டுவார். அவர்களுக்குப் பயந்து கொண்டு ஒதுங்கினவர்களும் உண்டு.

## பாகம் 6

பெரம்பலூரில் கடை ஆரம்பிக்க இடம் பார்த்தால் அவர்களுக்கு மூக்கில் வியர்த்து விடும். உடனே வந்து இடம் தந்தவர்களை மிரட்டுவார்கள். அவர்களும் பயந்து கொண்டு பின் வாங்குவர்.

சீனிவாசன் பிறகு வேறு இடம் பார்ப்பார். அங்கும் வருவார்கள். இப்படியே எதிர்ப்பிலேயே வளர ஆரம்பித்தார். யோசிக்கும் போது எதிர்க்க எதிர்க்க இவருக்குப் பலம் கிடைத்து மென்மேலும் ஜெயிக்க வேண்டும் என்கிற உந்துதல் கிடைத்ததை உணர முடிந்தது.

சீனிவாசன் பொதுவாக யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்வதில்லை. செய்ய

நினைப்பதுமில்லை. அவனவன் வினையை அவனே அனுபவிப்பான். ஆண்டவன் பார்த்துக் கொள்வான் என்று விட்டுவிடுவார்.

ஆனால் அந்த ராஜ் ரெட்டியாரின் விஷயத்தில் அன்று செய்யவிருந்த குற்றத்தைப் பற்றி சீனிவாசன் நினைவு கூர்கிறார்.

ஊரில் எந்த வகையிலும் ராஜ் ரெட்டியார் அவரை வாழவிடாமல் செய்த சமயம் –

சீனிவாசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் உனக்குப் போட்டியில்லை. எதிரியில்லை –உன் அளவிற்கு வயசோ – அனுபவமோ –வசதியோ –ஆள் பலமோ இல்லாதவன் -என்னை விட்டுவிடு என்று கெஞ்சியும் கூட விடாமல் துரத்தவே வெறுத்துப் போனார்.

இந்தாள் உள்ளவரை நமக்கு நிம்மிதியில்லை –வாழ முடியாது. இவரைத் தீர்த்துக் கட்டினால் தான் வாழ்வு என்கிற முடிவுக்கு வந்தார், இளம் ரத்தம், விரக்தியின் விளிம்பிலிருந்த மனது அவரைக் கொலை செய்யும் வரை போயிற்று.

கொலை செய்தால் அவர் இறக்கலாம். ஆனால் அதற்குப் பிறகு சந்திக்க வேண்டிய பிரச்சனைகளைப் பற்றி அவர் யோசிக்கவில்லை. யோசிக்கத் தயாராக இல்லை. அவரைத் தீர்த்துக்கட்ட கத்தி வைத்துக் கொண்டு சீனிவாசன் தருணம் பார்த்திருந்தார்.

ஒரு நாள் ராஜ் ரெட்டியார் வெளியூர் போய்விட்டு இருட்டினபிறகு ஊர் திரும்பப் போவது தெரிந்தது. அவர் சைக்கிளில் சோளக் கொல்லை வழியாகத்தான் வந்தாக வேண்டும்.

வழியில் வைத்து ஒரே குத்து! ஆள் அங்கேயே ரத்தம் பொங்கிச் சாக வேண்டும்! சீனிவாசன் ஒரு முடிவுக்கு வந்தார்.

தனது திட்டம் பிசிறாமல் தடையில்லாமல் நிறைவேற வேண்டும் என்பதற்காக அன்று மாலை களப்படச்சாய் சாமி கோயிலிற்குச் சென்றார். எந்த ஒரு காரியத்தில் இறங்குமுன்பு அவர் அங்கே போய் வரம் கேட்பதுண்டு. அதுமாதிரி அன்றும்! கையில் பிச்சுவாக்கத்தி; மனதில் கொலை வெறி!

சூடம் ஏற்றிச் சாமி கும்பிடலாம் என்று பார்த்தால் சூடம் எரியவேயில்லை. ஒரு தீப்பெட்டி –அதுவும் புதிது –குச்சிகள் பற்ற வைத்து பற்ற வைத்துச் சூடம் ஏற்றினாலும் எரியவில்லை. இத்தனைக்கும் காற்றுக் கூட இல்லை. அப்படியும் அணைந்து போயிற்று.

அவருக்கு எதுவும் புரியவில்லை. கோபம்.அந்தச் சாமி மேலும்! இந்தச் சாமியும் கூட தனக்கு எதிராய்ச் செயல்படுகிறேதே –வேணாம் –நீ வரம் தரவேணாம் –எதுவானாலும் நான் பார்த்துக் கொள்கிறேன், இனி பின்வாங்குவதாயில்லை என்று சோளக்காட்டுக்கு விரைந்தார்.

மாலை மறைந்தது. இருள் பரவியது, மேய்ச்சலுக்குப் போன ஆடு, மாடுகளெல்லாம் திரும்பின. சீனிவாசன் சோளக்காட்டில் காத்திருந்தார்.

சோளக்காடு செழித்துத் தட்டை தட்டையாய் வளர்ந்திருந்தது. அதனால் கதிர்கள் காற்றில் படபடத்தன. வெளியே தென்றல் ஆனால் உடலில் புழுக்கம்.

காத்திருந்தார்.

கத்தியை எடுத்துக் குறி பார்த்துக் கொண்டார். அந்நாள் அங்கே வருவான் –வரப்பை கடக்கும் போது பின்னாலிருந்து ஒரே குத்து! அவன் அலறிக் கொண்டு விழுவான் –நாம் ஒரே ஓட்டம்!

எல்லாவற்றிற்கும் தயார்! ஒத்திகை பார்த்தாயிற்று, புல்வெளியில் அமர்ந்திருக்கப் பொறுமையில்லை. எறும்பு கடித்தது, வெட்டுக்கிளைகள் பறந்தன. கொசுக்களின் மொய்ப்பு!

இன்னும் அந்நாளைக் காணவில்லையே.... எங்கே போய் ஒழிந்தான்?

நேரம் ஆக ஆக அவருக்குப் பதறிற்று, எவ்வளவோ கஷ்டப்பட்டோம். உழைக்கிறோம். முயற்சியுடன் பாடுபட உடலிலும் மனதிலும் தெம்பு இருக்கும் போது இது தேவையா?

பிரச்சனைக்குக் கொலை ஒன்றுதான் தீர்வா – என்று யோசனை ஓடிற்று.

அதைக் கஷ்டப்பட்டு அடக்கி வைத்தார். முடிவெடுத்தாயிற்று. இனி எக்காரணம் கொண்டும் அதிலிருந்து பின் வாங்கக் கூடாது!

அப்போது ஒத்தையடிப்பாதையில் சலசலப்புக் கேட்டது. அவன்தான்! இதோ வருகிறான்! வந்துவிட்டான் ! சைக்கிள் வரப்பைக் கடக்கிறது.

ஒரே பாய்ச்சல்!

கத்தியை ஓங்கிக் கொண்டு பாயப் போன போது –

சைக்கிளின் முன் பகுதியில் யாரோ அமர்ந்திருப்பது தெரிந்தது. அவருடன் ராஜ் ரெட்டியார் பேசிக் கொண்டு வர –

சீனிவாசனுக்கு வெறுப்பாயிற்று. இந்நாள் தனியாய் வருவான் என்று பார்த்தால் – துணைக்கு ஆள்!

முன்பக்கம் அமர்ந்திருந்தது வேறுயாருமில்லை. அந்த ஊர் முன்சீப் நொச்சியம் கந்தசாமி உடையார்! ரொம்ப நல்ல மனிதர் சீனிவாசனுக்கு மிகவும் பிடித்தவர்.

அவரை வைத்துக் கொண்டு கொலை செய்யத் துணிவு வரவில்லை. சட்டெனப் பின்வாங்குகிறார். முன்சீப் தன்னைப் பார்த்துவிடக் கூடாது எனப் பதுங்கினார். ராஜ் ரெட்டியார் சைக்கிள் மிதித்த கவனத்தில் இவரைப் பார்க்கவில்லை. ஆனால் முன்சீப் பார்த்துவிட்டார்!

சீனிவாசனுக்கு வெலவெலத்துப் போயிற்று, காரியமும் நடக்கவில்லை,

தேவையில்லாமல் அவர் வேறு பார்த்துவிட்டார் என வெறுத்துப் போய்த் திரும்பினார். தோல்வி!

அந்தத் தோல்வியை அவரால் ஏற்க முடியவில்லை. சீரணிக்க முடியவில்லை. அதைப் போக்கிக் கொள்ளவும் சமாதானம் தேடவும் மறுபடியும் களப்படச்சாய் சாமி கோயிலுக்குப் போனார். சே! என்ன இப்படிப் பண்ணிவிட்டாய்! சாமியே... நான் எது செஞ்சாலும் உன்னிடம் வரம் பெற்றுத்தானே செய்வேன்!

எல்லாக் காரியத்திலும் துணையிருக்கும் நீ –இதில் காலை வாரி விட்டாயே –இது நியாயமா?

கோபத்துடன் பாக்கி இருந்த தீக்குச்சியை உரசிப் பற்ற வைக்க என்ன ஆச்சர்யம்!

சூடம் இப்போது நன்றாக எரிந்தது. அந்த வெளிச்சத்தில் சாமி அவரைப் பார்த்துப் புன்னமைப்பது போலிருந்தது. இத்தனைக்கும் அப்போது பயங்கரக் காற்று! இருந்தாலும்கூட சூடம் அவரை ஏளனம் செய்கிற மாதிரி எரிந்து கொண்டிருந்தது.

சாமிக்கே தன் செயல் பிடிக்கவில்லை என்பது அவருக்கு விளங்க ஆரம்பித்தது. தன் நல்ல செயல்களுக்கெல்லாம் துணையிருந்த சாமி – தீய செயலுக்குத் துணை வராமல்–பழி–பாவத்திலிருந்து காப்பாற்றியிருப்பது அப்போது அவருக்குப் புரிந்தது.

## பாகம் 7

சீனிவாசன் பயந்தது போலவே முன்சீப் நொச்சியம் கந்தசாமி மறுநாள் அவரைப் பிடித்துக் கொண்டார். தனியாய் அவரை அழைத்துப் போய் ``நேற்று நீ செய்யவிருந்த காரியத்தின் வீரியத்தை உணருவாயா...?''

``வேறு என்னங்க செய்வது? என்னை துரத்தித் துரத்தி அடிக்கிறார். வாழவிடமாட்டார் போலிருக்கு.''

``அதுக்காக? கொலை செய்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்? அந்த நேரத்திற்கு உனக்கு அது சரியாய் படலாம். அதன் பின் விளைவுகள் பற்றி சிந்தித்தாயா? அவர் செத்திருந்தால் விசாரணை வரும். முன்சீப் என்கிற

முறையில் நான் பதில் சொல்லியாகணும். நான் என்ன சொல்ல? பார்த்ததைச் சொல்ல? பார்த்ததைச் சொன்னால் உனக்குப் பிரச்சனை. சொல்லாவிட்டால் என் மனசாட்சி என்னைக் கொல்லும்.''

``அதுதான் காரியத்தைக் கெடுத்துட்டீங்க. அந்நாளும் தப்பிச்சுட்டானே! அப்புறம் என்னவாம்?''

``தப்பிச்சுட்டார். ஒரு வேளை நீ அவரைக் குத்தியிருந்தாலும் - ஆள் பிழைத்துக் கொண்டாலும் உனக்கும் பிரச்சனை, எதுக்கு இதெல்லாம்? உன் மேல் எனக்கு அலாதிப் பிரியம் உண்டு. மதிப்பு உண்டு. சின்ன வயதிலேயே குடும்பத்தைச் சுமக்கிறாய். கடுமையாய் உழைக்கிறாய். அது மட்டும் போதாது மனிதனாகவும் நீ மாற வேண்டும்!''

``இப்போ மட்டும் என்ன மிருகமாக இருக்கேன்?''

யோசிச்சுப் பார்! ஏறக்குறைய அதே நிலைமைதான் உனக்கு. உழைக்கிறேன் – கஷ்டப்படறேன் என்கிறாய். மாடு கூடத்தான் உழைக்கிறது. கஷ்டப்படுகிறது. கோபம் வந்தால் எதுவும் யோசிக்காமல் சீறிப்பாய்கிறது. முட்ட வருகிறது. நீயும் அதுவும் ஒன்றா? ஒன்றுதானா – யோசி! கோபம் வரணும். வரலாம். தீயதைக் கண்டு ஆவேசப்படலாம். ஆனால் நிலை தடுமாறக் கூடாது! மனதை ஆளக் கற்றுக் கொள்ள வேண்டும். அடக்கணும்.

வன்முறையும், கொலையும் எதற்கும் தீர்வல்ல, ஆழ்ந்து யோசித்தால் இதற்கு ஒரு தீர்வு கிடைக்கும். பேசித் தீர்த்துக் கொள்ளலாம்!''

``பேசியாயிற்று, பிரயோஜனமில்லை. இனித் தீர்க்க வேண்டியதுதான் பாக்கி!''

``சீனிவாசா! உன் கோபம் இன்னும் அடங்கவில்லைன்னு தெரியுது''

``அடங்காதுங்கய்யா!''

``````அடங்கணும். உனக்கு நானிருக்கேன். என் மேல் உனக்கு நம்பிக்கை இருக்கா இல்லையா?''

``இருக்கு.''

``அப்போ என் பேச்சைக் கேளு. நான் ராஜ் ரெட்டியாரிடம் பேசிச் சரி பண்றேன். அவர் உன் வழில குறுக்கிடாம இருந்தாப் போதுமில்லே!''

``அது போதும். ஆனால் என் இழப்புக்கு யார்
``````

பொறுப்பு? அந்தாள் திரும்ப எல்லாத்தையும் தருவானா? என் கடை –உடைமைகள்?''

``அதையெல்லாம் மறந்திடு. பழசை நினைச்சுக்கிட்டிருந்தா நிம்மதி போகும். பகை ஆக்கத்திற்கு எதிரி. நான் அவரிடம் பேசுகிறேன்!''

முன்சீப்பின் முயற்சி கை கொடுக்கவில்லை. ராஜ் ரெட்டியார் எதற்கும் மசிவதாய்த் தெரியவில்லை. முன்சீப்பையும் மதிக்கவில்லை. ``வெளியூர்க்காரன் நீ உன் வேலையைப் பார்த்துட்டுப் போ'' என்று விரட்டினார்.

அவராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

சீனிவாசன், ``இப்போ என்ன சொல்றீங்க... என் முடிவு சரிதானே?''

``இல்லை. இப்பவும் சொல்கிறேன். அந்தாளின் நடத்தை சரியில்லைதான். திமிராத்தான் இருக்கான். ஆனா –அதே திமிர் உன்னிடத்திலும் தெரியுது. அப்புறம் அவருக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்?''

``நான் இப்போ என்னதான் செய்யணுங்கிறீங்க? ஊரில் பசியோடு கிடக்கணுமா?''

``வேணாம். இங்கிருந்தால் தானே உனக்குப் பிரச்சனை! கொஞ்ச நாட்களுக்கு வெளியே போ. மனம் அடங்கும். ஆறுதல் கிடைக்கும். மாற்றுவழி பிறக்கும்'' என்று சீனிவாசனைத் தன் ஊருக்கு அழைத்துப் போனார். பெரம்பலூருக்கு அழைத்துப் போய், ``பார்! வெளி உலகத்தைப் பார்! இங்கே யாருக்குப் பிரச்சனையில்லை? யாருக்குக் இருக்கிறார்கள்.

அதுக்காகக் கத்தியை தூக்கிக் கொண்டா திரிகிறார்கள். நீ வாழ வேண்டியவன்—உன் வாழ்வு மலரணும்'' என்று போதித்து நொச்சியம் கந்தசாமி இவரின் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தினார்.

அவரது வழிகாட்டுதலில் சீனிவாசனின் மனம் பக்குவப்பட்டிருந்தது. அதன்பிறகு கவனத்தை வேறு எந்த பக்கமும் சிதறவிடாமல் உழைத்ததில் நல்ல முன்னேற்றம்! வளர்ச்சி!

கடைகள் பல! தொழில்கள் பல! கை வைப்பதிலெல்லாம் வெற்றி கிடைத்தது. அதுவே அவரது உள்ளத்தில் விஷம் விதைப்பதாக அமைந்தது. இறுமாப்பு! அவ்வப்போது திமிர் பற்றும், பற்றிப் படரும் அதை நண்பர்களும் ஊதி விடுவர்.

இன்று நான் பெரியவன் –பணம் இருக்கிறது. தொழில்! ஆட்கள்! நான் ஏன் பயப்பட வேண்டும்?

அந்த ராஜ் ரெட்டியாரின் மேலிருந்த வன்மம் அவ்வப்போது தலை தூக்கும். அவர் பெண்ணிற்கு அந்த நேரம் திருமணம் ஏற்பாடாகியிருந்தது.

கூட இருந்தவர்கள் தூண்டிவிட்டனர். ``உன்னைப் பலி போட்டுவிட்டு அந்தாள் எப்படி வேற மாப்பிள்ளை பார்க்கலாம்? விடாதே! போய் அதே பெண்ணை உனக்கு கேள்!''

``எனக்கு அவ வேணாம். அந்தாள் சகவாசமே வேணாம்!''

``ஏய்... நீ கோழையா...?

``` ``இல்லை''

``கடவுளா?''

````இல்லை.''

``ஆங்! ரோஷம் வருதில்லே! இது! இது அங்கேயும் வரணும்! மனுஷன்னா—மான ரோஷம் வேணும். எந்த சந்தர்ப்பத்துலயாவது அதைக் காட்டணும்!''

``காட்டி என்ன பண்ணப் போறேன்!''

``எதுவும் சாதிக்கறதுக்காக இல்லை. நீயும் மனுஷன்! உன்னாலயும் கெடுதல் பண்ண முடியும்கிறதைக் காட்டுவதற்காக –காட்டணும்! செயல்படணும். அந்தாளுக்கும் வலிக்கணும். எளியோரின் வலியை உணர்த்தனும்!''

``அதுக்கு என்ன பண்ணணுங்கிறீங்க?''

``அப்படிவா —வழிக்கு! அந்த கல்யாணத்தை நிறுத்தணும்!''

``அவன் செய்த தவறுக்கு அந்தப் பெண் ஏன் தண்டனை அனுபவிக்கணும்?''

``ஒரு தப்புமே செய்யாத நீ அனுபவிக்கும் போது —அவளைச் சொல்லி உன்னை வீழ்த்தினானே! அப்பனின் சொத்து சுகம் —நகை நட்டை அனுபவிப்பவள் அவனது பாவத்தையும் சேர்த்துத்தான் அனுபவிக்கணும், அனுபவிக்கட்டும்!''

சீனிவாசனுக்கு விர்ரென்று திமிர் ஏறிற்று, ஆமாம் ஒரு சந்தர்ப்பத்திலாவது நாம் ஆள், ஆண் என்று நிரூபிக்க வேண்டும் என்கிற வைராக்கியம்!

ஆள் வைத்துக் கல்யாணத்திற்கு அவர்களை அனுப்பித் தகராறு செய்ய வைத்து அந்தக் கல்யாணத்தை நிறுத்தினார்.

அதன்பிறகு ராஜ் ரெட்டியார் –வழிக்கு வந்தார். அவரிடம் வந்து கெஞ்சாத குறை. தன் தவறுகளுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டார். சீனிவாசனுக்கு அப்போதுதான் சமாதானமாயிற்று. எனக்கு இது போதும் என்று ஒதுங்கிக் கொடுத்து –அப்புறம் அப்பெண்ணிற்குத் திருமணம் நடந்தது.

## பாகம் 8

அந்தச் சம்பவங்களை அசை போட்ட ஐயா... மெல்லச் சிரித்துக் கொண்டார். ``எல்லாம் காலத்தின் கோலம், அனுபவமின்மை –இளம் ரத்தத்தின் உணர்ச்சிக் கொப்பளிப்பு. இப்போது நினைத்துப் பார்க்கும்போது என் செயல் பைத்தியக்காரத்தனமாய்படுகிறது.

பகை –புகை எல்லாம் வெறும் மாயை. இங்கே யாரும் யாரையும் அழித்துவிட முடியாது. ஒன்று அழிந்தால் இன்னொன்று பிறக்கும். வேறு ஒன்றாக அது வளரும்.

பழி வாங்குவது –எதிரியைக் கவிழ்ப்பது என்பதெல்லாம் வேண்டாத வேலை. சிறுபிள்ளைத்தனம். நம் சக்தியை அந்தப் பக்கம்

திருப்பாமல் –அதை ஆக்கத்திற்குப் பயன்படுத்தினால் நாமும் வளரலாம். நாடும் வளரும். சமூகமும், வளம் பெறும். இது அந்தந்தக் கால கட்டத்தில் நமக்குப் புரிவதில்லை... தெரிவதில்லை.

சின்னச் சின்ன காயங்கள், இழப்புகளைப் பெரிதாய் நினைக்கிறோம். அதிலேயே கிடந்து உழல்கிறோம். ஒத்துவராததைத் தூக்கி எறிய வேண்டும். அந்த ராஜ் ரெட்டியாரைப் பழிவாங்க வேண்டும் என்று நான் கொதித்தபோது நானும் கூட நிம்மதியாய் இல்லை. கல்யாணத்தை நிறுத்தின பின்பு மனது சந்தோஷிப்பதற்குப் பதில் வருத்தப்படவே செய்தது.

உறுத்தல் –

குற்ற உணர்வு. குற்ற உணர்வுக்கு முன்னில் சந்தோஷமும் இறுமாப்பும் அடிபட்டுப் போயிற்று. அதுதான் உண்மை அதுதான் யதார்த்தம். நம் காரியங்கள் பிறருக்கு நன்மை பயப்பதாய் அமைய வேண்டும். முடியாத பட்சத்தில் கேடு விளைவிக்காத வகையிலாவது பார்த்துக் கொள்ள வேண்டும்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நான் எந்தவிதத் தப்பான சிந்தனைக்கும் மனதில் இடம் தருவதில்லை. ``இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்'' என்பதை கடைப்பிடிக்க ஆரம்பித்தேன்.

பிறகு சில வருடங்களில் அதே ராஜ் ரெட்டியார் மனம் திருந்தி –வருந்தி படுக்கையில் வீழ்ந்த போது –உதவிக்கு ஆளில்லாத போது நான் தான் உதவினேன். அவர் இறந்த போதும்கூட

காரியங்களைச் செய்து முடிக்க முதல் ஆளாய்ப் போய் நின்றதும்கூட நான்தான்.

அந்தக் திருப்தி –வேறு எதிலும் எனக்குக் கிடைத்ததில்லை’’ என்று நெகிழ்கிறார்.

அந்தக் காலகட்டத்தில் ராமசாமி ரெட்டியார் என்பவரும் ஊரில் இவருக்கு இடைஞ்சல்கள் செய்து கொண்டிருந்தவர். அவர் இறந்த போதும் எல்லாவற்றையும் மறந்து உதவி செய்த பெருமை இவருக்குண்டு.

அன்று என்றில்லை –இடைஞ்சல் செய்தவர்களுக்கு உதவுகிற அந்தக் குணம் சீனிவாசனிடம் இப்போது தொடர்ந்து கொண்டிருக்கிறது. தொழிலில் போட்டியாளர்கள், போட்டிக் கல்வி நிறுவனங்கள் என்று அனைவருக்கும் இவர் தோள் கொடுத்து வருகிறார்.

சீனிவாசன் அவரது 6 முதல் 18 வயது வரை மிகவும் கஷ்டப்பட்டார். அதன்பிறகு அவருக்கு வளர்ச்சிப்படிகள்தான். ஏணி! ஏற்றம்!.

கடைகள் ஒவ்வொன்றாய் வளர்ந்து வந்தன. அந்தச் சமயம் பணத்தைப் பெருக்க `பைனான்ஸ்' ஆரம்பித்தார். அதில் பணப்புழக்கம் அதிகம்!

எவ்வளவுதான் உழைத்தாலும், முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும் நேரம் நன்றாக இருந்தால்தான் எல்லாம் சரியாய் அமையும் என்பார்கள். சீனிவாசனுக்கு அந்த நேரமும் ராசியும் மனைவி தனலட்சுமி மூலம் கிடைத்தது. (1967).

தனலட்சுமி பெரம்பலூரிலுள்ள துறைமங்கலம் பகுதியை சேர்ந்தவர் அவரை மணமுடித்த பின்பு சீனிவாசனின் சுமை

குறைந்தது. கணவருக்கு அவர் தெம்பாய் – ஊக்கமயிருந்து பிசினஸ் பொறுப்புகளையும் பகிர்ந்து கொண்டார்.

ஆலோசனைகள் வழங்கி, கணவரின் வேகத்தைக் கட்டுப்படுத்தி விவேகத்தைக் கடைப்பிடிக்க உதவியாயிருந்தார்.

அந்த நேரம் –அவர்கள் `தென்னகம் தேநீர் நிலையம்' என ஹோட்டல் ஒன்று ஆரம்பித்தனர். சீனிவாசன் பெரிதாய்ப் படிக்காவிட்டாலும் –படிக்கமுடியாவிட்டாலும் கூட அவருக்குத் தமிழ்ப் பற்று அதிகம், ஊர்ப்பற்று, சமூகப்பற்று அதிகம். நம் ஊர் –நம் மாவட்டம் -நம் மாநிலம் –நம் நாடு என்கிற பரந்த சிந்தனையும் தேசிய பற்றும் அவருக்குள் ஊறியிருந்தன. அதன் விளைவே ஹோட்டலுக்குத் தமிழ்ப்பெயர் சூட்ட வைத்தது.

அந்த நாட்களில் உணவு விடுதிகளுக்கு எத்தனையோ `பவன்’கள் இருந்தன. வாடிக்கையாளர்களைக் கவர –பழகின -பரிச்சயப்பட்ட பெயர்கள் எப்போதும் தேவை. புதிதாய் ஹோட்டல் ஆரம்பிப்பவர்கள்கூட – ஏற்கனவே பிரபலமாயிருக்கும் ஹோட்டல் பெயர்களைச் சூட்டி ஆரம்பிப்பதுண்டு.

ஆனால், ஏற்கனவே பல ஆண்டுகள் சொந்த முயற்சியில் டீக்கடை வெற்றிகரமாய் நடத்தின சீனிவாசன் –கடைக்குப் புதிதாய் – புதுமையாய் –அதே சமயம் தமிழில் பெயர் வேண்டும் என்று சூட்டியது எல்லோரையும் கவர்ந்தது.

என்னதான் உழைத்து நேர்மையாய் முன்னேறினாலும் ஊர்க்காரர்களுக்கு, குறிப்பாய் அந்தந்தப் பகுதிகளில் இருப்பவர்களுக்குப்

பொறாமை ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

இவருக்கும் பல வகைகளில் – ஏற்கனவே `பணக்காரர்’களாய் செல்வந்தர்களாய் இருந்தவர்கள் மூலம் பலவிதப் பிரச்சனைகள் எழும்பின. அவற்றையெல்லாம் சீனிவாசன் சுமூகமாய் நேரிட்டு வந்தார். அந்தப் பக்குவம் அவருக்கு அப்போதே வந்திருந்தது.

எதிர்ப்பவர்களை இவர் வெறுப்பதில்லை. அவர்களுக்குத் தெரிந்தது. அவ்ளோதான் –அவர்களின் தரப்பில் –அவர்களின் கண்ணோட்டத்தில் அது சரியாய் இருக்கலாம். எந்தக் காரியத்திற்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும்.

நம் பக்கம் –ஒன்று என்றால் மறுபக்கம் எதிராளியைக் கவரக்கூடும். அந்த மாதிரிச்

சந்தர்ப்பங்களில் அவர்களை அழைத்துப் பேசி – அரவணைத்துப் போவது இவரது பழக்கம்.

## பாகம் 9

வாழ்க்கையில் எப்போதுமே திருப்புமுனைகள் அவசியம். அவை இல்லாவிட்டால் சுவாரஸ்யமில்லாமல் போய்விடும். தடைகள் வரவேண்டும். அவற்றை மீறி –கடந்து செல்ல வேண்டும். வெல்ல வேண்டும்.

இல்லாவிட்டால் செக்குமாடு போல ஒரே இடத்தில் உழன்று கொண்டிருப்போம். மாற்றுவழி –வேறு மார்க்கம் பற்றிச் சிந்திக்கத் தோன்றாது. இங்கு எதுவும் யாரும் நிரந்தரமல்ல. கால ஓட்டம் –சூழ்நிலை-சந்தர்ப்பத்திற்கு ஏற்பத் தொழில் மாற்ற வேண்டும் -நாமும் மாறணும்.

ஒன்று ஒத்து வரவில்லையென்றால் – அதைவிட்டு விலகணும். வேறு பாதை யோசிக்கணும். அதற்காக ஆரம்பித்து ஆரம்பித்து விட்டுவிட்டுப் போகலாம் என அர்த்தமில்லை. எந்த ஒரு காரியமும் நிரந்தரமாக வெற்றி பெற கால அவகாசம் தேவைப்படும். திடீர் வெற்றியும் திடீர் லாபமும் நிரந்தரமில்ல.

எவ்வளவு வேகமாய் லாபம் வருகிறதோ அவ்வளவு வேகமாய் நஷ்டத்திற்கும் வீழ்ச்சிக்கும்கூட வாய்ப்புண்டு. ஆகையால் – தொட்ட காரியத்தை வெற்றி பெறச் செய்ய என்னென்ன வழிகள் உள்ளனவோ அவற்றையெல்லாம் முயலவேண்டும். எல்லாம் செய்து பார்த்தும் சரிவரவில்லையென்றால் தூக்கி எறிந்துவிட்டு வேறு வேலையைப் பார்க்கப் போய்விட வேண்டும்.

ஐயோ –இதில் இவ்ளோ முதலீடு போட்டுவிட்டோமே.... கடை வாடகை –ஆட்கள் கூலி –தொழிலை விட்டால் அக்கம் பக்கம் கேலி பேசுவார்களே –என்று அதிலேயே உழலுபவர்கள் அதிகம். `முதலாளி' `மோகம்' அந்தத் தாகம் –தாக்கம் –வரட்டுக் கௌரவம் –வரட்டுப் புகழின் காரணமாய் நஷ்டத்தையே வெளிக்காட்டாமல் –மறைந்து- மறைத்து –ஒரு நிலைமையில் அது பெரிதாகி –தாங்க முடியாமல் போவதுண்டு. இந்தப் போலித்தனம் –வறட்டுக் கௌரவம் பலரின் தோல்விக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாய் அமைவதுண்டு.

சமுதாயத்தையும்–அக்கம் பக்கத்தினரையும் பார்த்து நிச்சயம் நாம் பயப்பட வேண்டும் –அது தவறான வழியில் போகும் போது மட்டும்! நேர்வழியில் சுய உழைப்பில்

செயல்படும்போது எதற்காக பிறருக்காகப் பயப்படணும்?.

வாழ்க்கை நமது –நமக்காக நாம் வாழணும். பிறரைப் பார்த்து –பிறருக்காக எனக் கிளம்பினால் நிம்மதி போகும். ஒரு தொழில் ஆரம்பிக்கிறோம். அதற்கு முதலீடு செய்வது நாம். நம் பணம்! நம் முயற்சி! நம் உழைப்பு! இதில் அடுத்தவர்களுக்கு என்ன பங்கு? என்ன பொறுப்பு அவர்களுக்கு....?

லாபமோ –நஷ்டமோ நம் உடமை, பாதிக்கப்போது நம்மை மட்டும்! இதில் பிறர் தலையீடு கூடாது. பொருட்படுத்தக் கூடாது. வாழ்ந்தால் புகழ்வார்கள். வீழ்ந்தால் ஏசுவார்கள். அவற்றைத் தவிர்க்க முடியாது. அதற்காக அவர்களுக்காக நாம் இயங்க முடியாது.

எந்த ஒரு துறையிலும் சின்ன தவறு அல்லது சின்ன சறுக்கல் –சிக்கல் காணும் போது அவற்றைச் சரி பண்ணுவது எளிது. சரி பண்ணிவிட வேண்டும். இல்லையென்றால் அது பெரிதாகி நம்மையே மிரட்டும். விழுங்கிவிடும்.

சீனிவாசனுக்கும் அந்த மாதிரி சறுக்கல்கள் –சோதனைகள் அவ்வப்போது வந்ததுண்டு. வருவதுண்டு.

எமர்ஜென்ஸி நேரம் ஏகப்பட்ட கெடுபிடி. பைனான்ஸ் –வட்டிக் கடை கூடாது என்றனர். பைனாஸ் கடைகளை இவரிடமிருந்து பறிமுதல் செய்தனர். உடன் அவர் தளர்ந்துவிடவில்லை.

ஓரளவிற்கு வளர்ந்தாயிற்று –கல்யாணம் –குடும்பம் –குழந்தைகள் என வட்டம் பெரிதாகி –வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்ட பின்பு

அவற்றிலிருந்து கீழே இறங்க முடியாது. சில செலவுகள் –சொகுசுக்குப் பழகிவிட்டால் அதிலிருந்து நாம் மீள முடியாமல் போவதுண்டு.

வசதி –வருமானத்தை வைத்து நம் தேவைகளை அதிகப்படுத்திக் கொள்கிறோம். சௌகர்யங்களைப் பெருக்கிக் கொள்கிறோம். திடீரென அவற்றைச் சுருக்கிக் கொள்வது இயலாது.

அவற்றை நிலைநிறுத்த –செலவுகளைச் சமாளிக்க –வேறுவழி தேட வேண்டும். சீனிவாசனும், பைனான்ஸ் போனால் போகட்டும் என்று சீட்டுக் கம்பெனி நடத்த ஆரம்பித்தார்.

சீனிவாசன் –தனலட்சுமி தம்பதிக்கு அடுத்தடுத்து மூன்று பெண்கள் பிறந்தனர். பெண்ணாகப் பிறக்கப் பிறக்க –சம்பாத்தியத்தின் தேவை அதிகமாயிற்று. எந்தெந்தத் தொழிலுக்கு

பெரம்பலூரில் வாய்ப்புகள் உண்டோ அவற்றிலெல்லாம் கூட்டாக முதலீடு செய்தார்.

பஸ், சரக்குப் போக்குவரத்து, மதுக்கடை, ஹோட்டல், லாட்ஜ் ரிக் எனப் பலவற்றிலும் இறங்கினார். ஓட்டம்! உயரணும் என்கிற வெறி! அந்த உயர்வு எப்படி –எதுவரை – எந்த அளவு வரை என்கிற குறிக்கோளில்லா ஓட்டம்!

எதற்கும் எல்லாவற்றிற்கும் ஒரு உத்தி – எல்லை உண்டே! இவருக்கும் அந்த எல்லை – ஆண் வாரிசு (மகன் கதிரவன்) பிறந்ததும் உருவாயிற்று.

சீட்டு –பைனான்ஸ் என்று நடத்தும் போது பணத் தேவை உள்ளவர்கள் ஓடிவந்து கெஞ்சுவார்கள். உதவணும் என்பார்கள். பணம் பெற்று வாழ்த்திச் செல்பவர்கள் வட்டியும்

அசலும் திருப்பித் தரும் போது சங்கடப்படுவர். சபிப்பர். மனம் நொந்து வட்டி தரும் போது பிரச்சனை.

இனி வட்டித் தொழிலே வேணாம் என இவர்களை முடிவெடுக்க வைத்தது. பிறரின் நம் வாரிசுகளைப் பாதிக்கும் என யோசித்தனர்.

இனிக் கூட்டு தொழில் வேணாம். சொந்தத் தொழில் போதும் –லாபமோ நஷ்டமோ சின்ன அளவிலேயே இருக்கட்டும் என முடிவு செய்து பணப் பட்டுவாடாக்களைப் பைசல் செய்தார்.

நொச்சியம் கந்தசாமி உடையார் நட்பு கிடைத்தபின், இவரும் அவரைப் போல் முருகபக்தராக மாறினார். அதன் பிறகு எந்த ஒரு காரியம் ஆரம்பிக்கும் முன்பும் அருகிலுள்ள செட்டிக்குளம் முருகன் கோயிலுக்குச் சென்று

வழிபடுவது –வரம் கேட்பது இவரது வழக்கமாயிற்று.

செட்டிக்குளம் –பெரம்பலூர் –திருச்சி சுற்று வட்டத்தில் பிரபலம் –பழனி போல மலை மேல் முருகன்! பண்டிகை –விசேஷங்களில் இங்குக் கூட்டம் அள்ளும்!

பைனான்ஸ் விட்ட பின்பு வேறு என்ன தொழில் செய்யலாம் என்று யோசித்த போது –சினிமா தியெட்டர் ஆரம்பிக்கலாம் –பால் பண்ணை நடத்தலாம் என இரு வழிகள் தோன்றின.

இரண்டில் எதைத் தேர்வு செய்வது என்கிற குழப்பம். வழக்கம் போல செட்டிக்குளம் முருகனிடம் சீட்டு எழுதிப்போட –பால் பண்ணை ஆரம்பிக்கும்படி உத்தரவு வந்தது.

பெரம்பலூரைச் சுற்றின கிராமங்களில் – குறிப்பாய் புதுநடுவலூர், ஆலம்பாடி, ரெங்கநாதபுரம் பகுதிகளில் – வசதியில்லாமலிருந்த விவசாயிகளுக்கு மாடு வாங்கப் பணம் கொடுத்தார். வட்டியில்லாக் கடன் என்பதால் பலரும் அதற்கு ஆர்வம் காட்டினார்.

மாடு வளர்த்தவர்களிடம் –இவரே பால் கொள்முதல் செய்ய ஆரம்பித்தார். அதுவும் – சொசைட்டியைவிட அதிக விலை கொடுத்து! அதனால் ஊர் மக்களுக்கும் மகிழ்ச்சி. வருவாய் வருவதில் அவர்களும் வளர்ந்தனர்.

இதுதவிர –இவரும் மாட்டுப் பண்ணை ஆரம்பித்து இன்றுவரை நடத்தி வருகிறார். அதில் 250 மாடுகள், ஆட்கள் என அந்தத் துறையும் தொடர்கிறது.

பால் பண்ணையில் இப்போது இவருக்கு அவ்வளவு லாபம் இல்லை. ஆனாலும்கூட தங்களை வளர்த்த –வளர்ச்சிக்கு உதவின அந்தத் தொழிலை விட்டுவிடக் கூடாது எனச் செய்கின்றார்.

எப்படியும் கல்லூரிக்கும் – ஹோட்டலுக்கும் பால் பெரிய அளவில் தேவை. அவற்றை வெளியே வாங்கும்போது தரமானதாய்க் கிடைப்பதில்லை. தரமான பால் நம் பண்ணையிலிருந்தே வரட்டுமே என்பதும் கூட பால் பண்ணை நடத்துவதற்கு இன்னொரு காரணம்.

சீனிவாசன், மகன் மகள்கள், மருமகன்கள் எல்லோரும் இப்போதும் கூட்டுக்குடும்பம்தான். எந்த முடிவு அல்லது புதுத் தொழிலில் இறங்கினாலும் வீட்டில் அனைவரிடமும் விவாதித்துதான் செயல்படுவார்.

ஒரு முடிவு எடுத்துவிட்டால் பிறகு அதிலிருந்து பின் வாங்குவதில்லை. அதை வெற்றி பெற வைக்காமல் விடுவதில்லை.

வீட்டில் மகள்கள், மகனின் திருமணத்திற்குப் பிறகு குடும்பத்தில் தன்னிறைவு ஏற்பட்டிருந்தது. முன்பு ஆரம்ப காலங்களில் இவர் மட்டும் தனி, எல்லாவற்றையும் தனியாகச் சுமக்க வேண்டும்.

இப்போது பிள்ளைகளெல்லாம் ஆளாகிவிட்டதால் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் சூழ்நிலை, அதனால் அடுத்தடுத்து

என்ன தொழில் ஆரம்பிக்கலாம் என்கிற சிந்தனை எழுந்தது.

பெரம்பலூரில் குறிப்பிடும்படி தங்குவதற்கு லாட்ஜ்கள் இல்லாமலிருந்தன. நல்ல வசதியுடன்கூடிய லாட்ஜ் கட்டலாமா என் யோசனை ஓடிற்று. அந்தச் சமயம் நண்பர்கள் பலரும் –பெரம்பலூர் பகுதியில் நல்ல பள்ளி – கல்லூரிகள் இல்லை. புதிதாய்த் துவங்குங்களேன் எனத் தூண்டினர்.

அது ஐயாவுக்கும் சரியெனப்பட்டது.

நாம்தான் படிக்க முடியலை. வசதி வாய்ப்பு இல்லாமல் என்னை மாதிரிப் படிக்க முடியாதவர்கள் இந்தப் பகுதியில் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் உதவக்கூடாது என்று நினைத்தார்.

கல்வித்துறை நமக்கு வேண்டாம் என் வீட்டுக்குள்ளே எதிர்ப்புக் கிளம்பிற்று. வீட்டில் யாரும் கல்வி பெற்றவர்கள் இல்லாத போது அவற்றை நிர்வாகிப்பது யார்? பெரும் முதலீடு போட்டு அடுத்தவர்களை நம்பி ஆரம்பிக்க வேண்டாம். தெரிந்த தொழில் இறங்குகள் என்றனர்.

யோசித்துப் பார்க்கும்போது ஆரம்பம் முதலே சீனிவாசன் தனக்குத் தெரிந்த தொழில் என்று எதிலும் இறங்கினதில்லை. விவசாயம் முதல், சைக்கிள் கடை, டீக்கடை, பஸ், மதுக்கடை, பைனான்ஸ், சீட்டு, பால் பண்ணை என்று அவற்றில் இறங்கின பின்புதான் கற்றுக் கொண்டிருக்கிறார்.

முயன்றால் இந்த உலகில் முடியாதது எதுவுமில்லை. முயற்சி இருந்தால் எதையும்

சாதிக்கலாம். எந்தத் தொழில் என்றாலும் அதற்கு ஏற்ற –திறமையான –விசுவாசமான –தகுதியுள்ள நபர்களைப் பொறுப்பில் அமர்த்திவிட்டால் சிறப்பாகச் செய்யமுடியும் என இவர் நம்பினார்.

நல்ல ஆலோசகர்களை அருகில் வைத்துக் கொண்டால் நிர்வாகம் சிறப்பாக நடக்கும் –நடத்தலாம் என்பது இவரது அனுபவம்.

கல்வித் துறைக்கும் வீட்டில் எதிர்ப்பு வர வர -இவருக்கு அதில் இறங்க வேண்டும் என்கிற உத்வேகம் எழுந்தது. படிப்பு இல்லை என்கிற தாழ்வு மனப்பான்மை எதற்கு? படித்தா இத்தனை துறைகளில் வென்றேன்? படிப்பு இல்லை என்று சொல்லி ஏன் என் திறமையைக் குறைந்து மதிப்பிட வேண்டும்?.

முடியும் –என்னால் முடியும் –சாதிக்கணும் –சாதித்துக் காட்டணும் –காட்டுவேன்!

கல்வி என்பது களவு போகாதது. வெள்ளம் –புயல் –மழை –வறட்சி –காற்று –தீ என்று எதுவும் அழிக்க முடியாதது. மனிதனை முழுமையாக்குவது. பணம் –காசு –உணவு –உடை –வீடு –வயல் –வரப்பு –சொத்து சுகங்கள் வரும்-போகும். இவை எல்லாம் அழிந்து போகக் கூடியவை.

இவ்வுலகில் அழியாத ஒரே செல்வம் கல்விதான்! அதற்கு நாம் பாடுபடுவோம் என்று களத்தில் இறங்கினார்.

அதற்கு எஜீகேஷன் டைரக்டராக இருந்த திரு.சுந்தர் ஐயர் ``தைர்யமாய் களத்தில் இறங்குங்க, பள்ளி ஆரம்பிக்க வேண்டிய

ஏற்பாடெல்லாம் நான் செய்து தரேன்'' என்று துணையாக இருந்தார்.

புத்தனாம்பட்டி பள்ளியில் தலைமையாசிரியராக இருந்து ஒய்வுபெற்ற திரு.சி.வெங்கடாஜலமும், புதுக்கோட்டை திரு.பி.எஸ் கருப்பையாவும் ஊக்கம் தந்து செயல்பட வைத்தனர்.

பள்ளி ஆரம்பிக்க –அனுமதிக்க வேண்டி ரூ.500 சலான் மதுரை அலுவலகத்தில் கட்ட வேண்டும் என்றனர். பள்ளி ஆர்மபிக்க வேண்டும் என்கிர ஆர்வம் இருந்ததே தவிர, அதற்கு என்னென்ன செய்ய வேண்டும், யாரைப் போய் – எப்படிப் பார்க்க வேண்டும் என்பதெல்லாம் சீனிவாசனுக்குத் தெரியாது.

அடிமட்டத்திலிருந்து எதிர்ப்பை மீறி வளர்ந்து வந்தாயிற்று ஓரளவிற்கு வசதி

பெற்றாயிற்று. இனி எதற்காகப் பயப்படணும்? யாருக்கும் நாம் அடிமையில்லை. அடிபணிய வேண்டியதில்லை நேராய் போ! நேராய் வா! எதையும் சொந்தமாய்ச் செய்ய முடியும் என்கிற தன்னம்பிக்கை சற்று இறுமாப்பையும் தந்திருந்தது.

ஒவ்வொரு ஆங்கிலப் புத்தாண்டுக்கும் சீனிவாசன் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குச் சென்று தரிசிப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தார்.

அந்த சமயமும் டிசம்பர் 31 குடும்பத்தினருடன் காரில் கிளம்பினார். வழியில் பள்ளி –கல்வித் துறையில் அப்ளிகேஷனைக் கொடுத்து விடுங்கள் என்று மனுவை நிரப்பி புதுக்கோட்டை கருப்பையா கொடுத்துவிட்டார்.

``ஐயோ... நான் எதுக்கு? நீங்களே போய் மனுவைக் கொடுக்கலாமே!''

``இல்லை. பள்ளி ஆரம்பிக்கிறவர்தான் நேரில் போய் மனு தரணும். நீங்களே போங்க!''

``எனக்கு அங்கு யாரையும் –எதையும் தெரியாதே!''

``தெரியாட்டி என்ன –அதிகாரியிடம் நான் ஏற்கனவே எல்லாம் பேசிவிட்டேன். நீங்கள் போய் கொடுத்தாப் போதும்!''

சீனிவாசன் சரியென்று குடும்பத்துடன் காரில் கிளம்பினார்.

மதுரை.

அந்த அலுவலகத்தில் காரைச் செலுத்தி நிறுத்த –செக்யூரிட்டி வந்து ``யார் சார்... என்ன வேணும் உங்களுக்கு?'' என்று விரட்ட இவரது

தன்மானம் வெகுண்டெழுந்த்து. இவன் யார் என்னை விரட்ட என்று ``போய் அதிகாரியை அழைத்து வா’’என்று உத்தரவிட்டார்.

இவர் ஏதோ பெரிய அதிகாரி என நினைத்து –பயந்து அவன் ஓடினான். சீனிவாசன் பொறுமையில்லாமல் ஹாரனடித்து அவசரப்படுத்தவே –சம்பந்தப்பட்ட அதிகாரியும் மாடியிலிருந்து அரக்கப்பரக்க ஓடிவந்தார்.

காலம் கெட்டுக் கிடக்கிறது. எந்தப் புத்தில் எந்தப் பாம்பு இருக்கும் என்று சொல்ல முடியாது. நமக்கேன் வம்பு! இவர் யாரோ – எவரோ! ஆளுங்கட்சிப் பெரிய புள்ளியாய் இருக்கலாம். அரசியல்வாதி! மந்திரிக்கு வேண்டியவரோ என்னவோ?

யோசனையுடன் அவர் காரிடம் வர,``இங்கே பள்ளி கல்வித்துறை அதிகாரி யார்...?'' என்று சீனிவாசன் அதட்டினார்.

*``நான்தான் சார்!...*

*``இந்தா இதுல அப்ளிகேஷன் இருக்கு. வாங்கிவிட்டு வேண்டியதைச் சீக்கிரம் செஞ்சு முடி!''*

*``ஐயா ...நீங்க!''*

*``நானா? கருப்பையா சார்! சொல்லலியா...? இல்லை மறந்து போச்சா? பெரம்பலூரில் புதிதாய்ப் பள்ளி ஆரம்பிக்கணும்னு சொல்லியிருந்தாரில்லே – சீனிவாசன்! அது நான் தான். இந்தா பிடி! எனக்கு நேரமாகுது''* என்று சொல்லிவிட்டுக் காரை

எடுத்துக் கொண்டு விருட்டென்று பறந்து போனார்.

அந்த அதிகாரிக்கு மகா கோபம்! எரிச்சல்! இந்தாள் என்ன மனுஷன் அனுமதி கேட்க வந்தவனுக்கு இத்தனை அதிகாரமா.... எப்படி நடந்துக்கணும் ...அதிகாரிட்ட எப்படிப் பேசணும்னு தெரியலை –சரியான காட்டானாயிருப்பான் போலிருக்கே! இந்தாளெல்லாம் பள்ளி ஆரம்பிச்சா வாழுமா? வெளங்குமா....

அந்த அதிகாரி திரும்ப –நாலுவார்த்தை திட்டலாம் என்று சுதாகரிப்பதற்குள் இவர் காம்பவுண்டை கடந்திருந்தார்.

அதிகாரியிடம் பணிவு காட்ட வேண்டும்! கூழைக் கும்பிடு! அவரவர்கள் அப்பாயிண்ட்மென்ட் கேட்டுச் சந்திப்பிற்குக்

காத்திருக்கும்போது தான் இப்படி நடந்து கொண்டோமே –என்று சீனிவாசனுக்கு அப்போது தப்பாகப் படவில்லை.

இப்போது அந்த `அப்பாவி’அறியாமையை நினைத்துச் சிரிக்கிறார். ``அதெல்லாம் ஒரு காலம்! பருவம்! வெளி உலகே தெரியாத –பக்குமின்மை!’’

நமக்கு ஆர்வம் தாங்கவில்லை. ``எல்லாம் சரி இத்தனைக்குப் பிறகும் எப்படிப் பள்ளி ஆரம்பிக்க பர்மிஷன் கிடைத்தது.

``வேறு யாரோன்னா –உடனே பழிவாங்கி –இழுத்தடித்து- அனுமதி கொடுத்திருக்க மாட்டாங்க. அவர் அந்தக் கருப்பையா சாருக்கு வேண்டியவர்ங்கிறதால உடனே அவருக்கு போன்

போட்டிருக்கார். ``என்ன சார் இது –ஒரு மரியாதை தெரிய வேணாம் –இவருக்கெப்படி நான் அனுமதி தருவதுன்னு'' கேட்டிருக்கார்.

அவரும் எனக்காக வருத்தம் தெரிவித்து, ``சீனிவாசன் நல்லவர். விபரமில்லாம அப்படி நடந்துகிட்டிருப்பார். அதைப் பெரிதாய் எடுத்துக்க வேணாம்''ணு சொல்லிவிட்டு என்னிடம் `கிளாஸ்' எடுக்க ஆரம்பித்து விட்டார்.

சரி, அனுமதி கிடைக்கப் போவதில்லை. படிப்பறிவில்லாததின் காரணமாய் ஆரம்பமே சரியில்லை போலிருக்கிறதுன்னு நினைச்சேன் ஆனால் பயந்தபடியில்லாம பர்மிஷன் கிடைச்சது.

எனக்குள் ஒரு உறுத்தல். அவரிடம் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாதுன்னு உணர்ந்தேன். ஆனாலும் கூட! `இந்தாள் எங்கே பள்ளி ஆரம்பிக்கப் போறான் –எப்படி நடத்தப்

போறான் ' என்கிற அவரது அவநம்பிக்கையைப் போக்கணும் –ஆரம்பிச்சுக் காட்டணும்னு வேகத்தோட வேலைகளைக் கவனிச்சோம், வெற்றியும் கண்டோம்!'' என்று மெய் சிலிர்க்கிறார் சீனிவாசன்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் இவருக்கு எப்போதும் எதிர்மறையான உந்துசக்தி வாய்த்திருக்கிறது. நேராய்த் தட்டிக் கொடுத்து ஊக்கம் கிடைப்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் -`இவன் என்னத்தைக் கிழிக்கப் போகிறான்' என்கிற ஏளன –ஏச்சு –பேச்சு – இவருக்கு அதிக ஊட்டச்சத்து கொடுத்திருக்கிறது.

இதில் என்ன விஷேசம் என்றால்-

1994 –இல் முதன் முதலில் பள்ளி துவங்கும்போது –சீனிவாசன் அந்த

*சம்பந்தப்பட்ட அதிகாரியை அழைத்து வந்தார். துவக்க விழாவை நடத்தினதே அவர்தான்!*

*பெரம்பலூரில், அதுவும் வறட்சியான – பொருளாதாரத்தின் பின்தங்கிய- கல்வி அறிவில்லாப் பகுதியில் –ஆரம்பித்த தினத்தன்றே 320 பிள்ளைகள் சேர்ந்திருந்த விவரம் அந்த அதிகாரியை வியப்படைய வைத்தது.*

## பாகம் 10

அந்த மெட்ரிக்குலேஷன் பள்ளி ஐயாவின் வீட்டுக்கு எதிரிலேயே இருக்கிறது. வீட்டை விட்டு வெளியே வந்தால் பள்ளியில் பிள்ளைகள் படிப்பதும் விளையாடுவதும் தெரியும்.

அதை ஐயா அப்படியே பார்த்துக் கொண்டு நிற்பார். பிள்ளைகளைப் பார்க்கப் பார்க்க அவருக்குச் சந்தோஷமாயிருக்கும். மேலும் மேலும் கல்விக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற ஊக்கம் அவருக்குக் கிடைக்கும்.

பள்ளியிலும் சரி, கல்லூரிகளிலும் சரி, தகுதியான ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு

நல்ல சம்பளம் வழங்குவது இவரது சிறப்பு. அதே சமயம் மாணவர்களிடம் டொனேஷன் பெறுவதில்லை கல்விக் கட்டணமும் குறைவாகத்தான் பெறுகிறார்கள்.

பேராசைப்படாமலிருந்தால் சீராக வளரலாம் என்பது இவரது அசைக்க முடியாத அனுபவப்பூர்வ நம்பிக்கை.

அதன்பிறகு படிப்படியாய் ஆரம்பித்து இன்று தன்லட்சுமி சீனிவாசன் குழுமத்தில் 17 நிறுவனங்கள்!

இடைப்பட்ட காலத்தில் வெடிமருந்துத் தொழில் நல்ல லாபம் கிடைக்கிறது எனக் கேள்விப்பட்டு உரிமம் பெற்றார். அந்த நேரம் அவருக்கு ஒரு வெறி. தன்னால் எந்தத் தொழிலையும் செய்ய முடியும் என்கிற மமதை இருந்த நேரம் அது.

வெடிமருந்திற்காகப் பெரும் செலவில் கொடவுன் கட்டினார். ஆனால் அதன்பிறகு – வெடிமருந்து என்பது –அழிக்கும் உபகரணம். எத்தனை லாபம் வந்தாலும் சரி அந்தத் தொழில் நமக்கு வேணாம் என்று அதிலிருந்து பின்வாங்கினார். அதற்காக செய்த செலவு மெனக்கெடு –உழைப்பைப்பற்றி அவர் கவலைப்படவில்லை.

அதே சமயம் –எந்த ஒரு நல்ல காரியத்தில் இறங்கினாலும் அதிலிருந்து பின்வாங்குவதில்லை. தொட்ட காரியத்தை முடிக்காமல் இவருக்குத் தூக்கம் வராது. சதா அதே நினைவு! அதே கனவு!

அதை எப்படிச் செயல்படுத்தலாம் – எப்படி வளர்க்கலாம் –அதன் தேவைகளை எப்படியெல்லாம் பூர்த்தி செய்யலாம்.

அதன்மூலம் சமூகத்திற்கு எப்படி நன்மை செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே இருப்பார்.

ஐயா எதற்கும் அஞ்சுவதில்லை. போட்டியில் பின்வாங்குவதில்லை. தயவு தாட்சண்யம் பார்த்து மனமுருகி விட்டாலொழிய போட்டி பற்றிக் கவலைப்படுவதில்லை. அநாவசியமாய் வேண்டாத காரியங்களில் மூக்கை நுழைப்பதில்லை. வேண்டாததைச் சிந்திப்பதில்லை. தேவையானதைத் தேர்ந்தெடுத்து முழுக் கவனத்தையும் அதிலேயே செலுத்துவார். எந்த ஒரு காரியத்திலும் பிறரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிந்து –யோசிக்க அவகாசம் கொடுத்து முடிவெடுக்க வைப்பார். இவரது வெற்றிக்கு இன்னொரு காரணம் –மகள் –மருமகன்களையும் தன் எண்ண ஓட்டத்தில்

வளர்த்து ஒரே பாதையில் பயணம் செய்ய வைத்திருப்பது.

## பாகம் 11

தனலட்சுமி சீனிவாசன் பெண்கள் கல்லூரி ஆரம்பித்தது முதல் நிர்வாகத்தில் இருந்து சிறப்பாகச் செயல்பட்டு வரும் டாக்டர் ராம மீனாட்சி, ஐயா பற்றி நிறையக் குறிப்பிடுகிறார். டாக்டர் ராம மீனாட்சி அவர்கள் பெண்கள் கல்லூரியின் ஆலோசகரும் கூட.

ஐயா அவர்கள் திருக்குறள் பலவற்றிற்கு இலக்கணமாய்த் திகழ்பவர். குறளிற்குப் பொழிப்புரை –விளக்கவுரை வேறு எதுவும் தேவையில்லை. இவரைக் கவனித்தாலே போது.

தோன்றின் புகழொடு தோன்றுக் அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று.

நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்

தேரினும் அஃதே துணை.

(நல்ல வழியில் செயல்பட்டு அருளுடைய செயல்களைச் செய்வதே உயிருக்குத் துணையாக அமையும்.)

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்.

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்

உள்ளத்தின் உள்ளக் கெடும்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு.

இப்படி நூற்றக்கணக்காக குறள்களைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகிறார் ஐயா. இவற்றையெல்லாம் அவர் பள்ளியில் படிக்க வாய்ப்பில்லை.படிக்கவில்லை அனுபத்தில் இவர் கடைப்பிடிக்கும் நெறிமுறைகள் குறளோடு ஒத்துப் போகிறது என்பதுதான் உண்மை.

இராமாயணம், மஹாபாரதம், கீதை,குறள்,பைபிள், குரான் இப்படி அவற்றைப்

படித்து அதன்படி நடக்க வேண்டும் என்று அவர் செயல்படவில்லை. எல்லா நல்ல விஷயங்களும் அவரது உள்ளத்தில் ஊறி –இயல்பாகவே நடைமுறையில் கடைப்பிடித்து வருவதுதான் விசேஷம்

ஐயாவின் வாழ்க்கை அர்த்தமுள்ளது. உயர்ந்த குறிக்கோளை நோக்கிப் பயணிக்கிறது. இவருக்கு எப்போதும் தொலைநோக்குப் பார்வை! ஒரு காரியத்தைப் பற்றி யோசிக்கும் போது அதன் – நீண்டகாலப் பலாபலன்களை நன்மை தீமைகளை ஆராய்ந்து –ஆலோசித்தே முடிவெடுப்பார்.

எண்ணித்துணிக கருமம் என்பதுபோல, எந்தச் செயலையும் தொடங்கும் முன்பு நன்கு பரிசீலிப்பார். அதன் சாதக பாதகங்களை அலசி – துவங்கலாம் என்று முடிவெடுத்த பின்பு –

துவங்கிய பின்பு அதிலிருந்து பின்வாங்கு வதில்லை. அதை வெற்றி பெற வைக்கும் வரை இவருக்குத் தூக்கம் வராது.

ஐயாவிற்கு எப்போதும் தொலைநோக்குப் பார்வை உண்டு. உயர்ந்த குறிக்கோளுடன் அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருப்பவர். எந்த ஒரு காரியத்தையும் இடம் பொருள் ஏவல் அறிந்து, ஆராய்ந்து செய்யும் பண்புடையவர்.

இவரது மூலதனம் தன்னம்பிக்கை! உழைப்பு! விடாமுயற்சி! சிறந்த சிந்தனையோடு – தெளிந்த அறிவு பெற்றவ்ர், அதுவும் நன்கு பக்குவப்பட்ட அனுபவ அறிவு! படிக்க முடியாமல் போனாலும் கூட –ஒரு நூலக அளவிற்கு இவரிடம் உள்ள அறிவு ஆச்சர்யப்பட

வைக்கும். எந்த விஷயத்திலும் சரியான முடிவு எடுப்பது இவரது சிறப்பு.

எதில் இறங்கினாலும் –வெற்றி பெறுவோம் என நம்பிக்கை வைத்துப் பயணத்தைத் தொடர்வார். வெற்றி பெறவும் வைப்பார். எதுவுமே எளிதாய்க் கிடைத்துவிட்டால் அதன் அருமை தெரியாது. எந்தக் காரியமானாலும் நிச்சயம் தடைகள் வரும். தடங்கல்கள்! அவற்றைக் கண்டு சோர்ந்து போகாமல் தடைக்கற்களைப் படிக்கற்களாய் மாற்றுவார். தன்னுடன் உள்ளவர்களையும் சோர்வடையாமல் ஊக்குவிப்பார்.

எடுத்த லட்சியத்தில் தவறு நடக்கிறது என்றால் –அது ஏன் எப்படி –எதனால்-எங்கே என அலசி ஆராய்ந்து தவறைச் சரி பண்ணி வெற்றி பெற வைப்பார்.

ஐயாவிற்கு இயல்பிலேயே இரக்கருணம். மனிதாபிமானம்! பரோபகாரம்! பெருந்தன்மையுடன் –உதவி தேவைப்படுபவர்களுக்குத் தாராளமாய்ச் செய்வார். அது ஆத்மார்த்தமாய் வாழ்த்தி – செய்யும் உதவி சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலனளிக்கிறமாதிரி பார்த்துக் கொள்வார்.

இயற்கையிலேயே இவரிடம் நிர்வாகத் திறமை அமைந்துள்ளது. ஆட்களையும் விஷயங்களையும் சரியாய் எடை போடுவதில் இவர் கைதேர்ந்தவர். மாணவர்கள் மட்டுமின்றி- அலுவலர்கள் –கற்பிப்பவர்கள் அனைவரையும் ஐயா –தொடர்ந்து கவனித்து வருவார். நிர்வாகம் – சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில் கண்டிப்புடன் இருப்பார். அதே சமயம் திறமைக்கு மதிப்பளிப்பார். அவற்றை உற்சாகப்படுத்துவார்.

பெற்றோர்கள் இங்கே விரும்புவது, கட்டுப்பாடு! கட்டுக்கோப்புடன் கூடிய பாதுகாப்பு! படிப்புடன் ஒழுக்கம் பேணப்படுவதில் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி. இங்குப் பிள்ளைகளைச் சேர்த்து விட்டு விட்டால் –அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் கற்று –ஒரு முழு மனிதனாய் – வெளியே வருவார்கள் என்கிற அசைக்கமுடியாத நம்பிக்கையைப் பெற்றோர்களிடம் இந்தக் குழுமம் ஏற்படுத்தியிருக்கிறது.

பிள்ளைகளை இங்குச் சேர்த்துவிட்டபின் பெற்றோர்களுக்கு நிம்மதி. பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி எந்தவிதக் கவலையுமின்றி தங்கள் அலுவல்களைக் கவனிக்கிறார்கள்.

ஏற்கெனவே கூட்டு வியாபாரம் செய்ததில் பங்குதாரர்கள் மூலம் எழுந்த பிரச்சனைகளால் சீனிவாசன் நிறைப் பாடம் கற்றுக் கொண்டுள்ளார். அதனால் கூட்டு வியாபாரத்திற்குப் போவதில்லை. எதையும் சொந்தமாகத்தான் ஆரம்பித்திருக்கிறார்.

சொந்தமாய் முடியக்கூடியதை மட்டுமே சிந்திக்கிறார்.

இவரது ஒரே மகன் திரு.கதிரவன் நிர்வாகத்தின் துணை சேர்மனாக (வைஸ் சேர்மனாக) இருக்கிறார். கம்ப்யூட்டர் என்ஜினீயர். சர்க்கரை ஆலை ஆரம்பித்து நடத்த வேண்டும் என்பது இவரது நீண்ட நாள் விருப்பம்.

அதற்கு ஐயா –உடனே சம்மதித்து விடவில்லை. ``எதற்கு மாற்றுப்பாதை? கல்விப் பயணம் போதுமே என்றிருந்தார். உள்ளதைக்

கவனித்தால் போதாதா? இன்னொரு துறைக்குப் போய் அங்கு அடிமட்டத்திலிருந்து கற்று – ஆரம்பித்து –எதற்கு உனக்கு கஷ்டம்? நான் நிறையகச் சம்பாதித்து வைத்திருக்கிறேன். இவற்றைப் பார்த்துக் கொள்ளலாமே!'' என்று முதலில் விருப்பமில்லாமலிருந்தார்.

ஆனால் கதிரவனோ விடவில்லை. தந்தைக்குத் தப்பாமல் பிறந்த பிள்ளை! ``அப்பா – நீங்கள் நிறைய கஷ்டப்பட்டீர்கள் –நிறையவே சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள். மறுக்கவில்லை. செல்வம் மட்டுமின்றிப் புண்ணியமும் நிறையவே. இவையெல்லாம் எனக்கப்புறம் உள்ள தலைமுறைகளுக்கும்கூட போதும். ஆனால்-

என்னதான் நான் நிர்வாகம் பார்த்தாலும் –இவை எல்லாம் நீங்கள் உருவாக்கியவை. இதை

நான் நிர்வகிப்பதில் எனக்குப் பெருமைதான். அந்த நாளில் எந்த வசதியும் –எந்தவிதப் பக்க பலமுமேயில்லாத நீங்கள் இந்த அளவிற்குச் சாதித்திருக்கும் போது.

எல்லா வசதிகளையும் பெற்றிருக்கிற –செல்வம் –படிப்பு-பதவி பெற்றுள்ள நான் ஏதாவது புதிதாய்ச் செய்து சாதிக்க வேண்டும் –வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுவதில் என்ன தவறு...? என் திருப்திக்கு –என் விருப்பத்திற்கு மதிப்பளியுங்கள் –உங்கள் பிள்ளை நிச்சயம் தோல்விடைய மாட்டேன்!'' என்கிர கதிரவனின் நியாயமான விருப்பத்திற்கு ஐயா சம்மதித்தார்.

பிள்ளைகள் வளர்ந்த பின்பும் அவர்களை நம் கட்டுப்பாடிலேயே வைத்திருக்கக் கூடாது. அவர்களையும் சுகந்திரமாய்ச் செயல்பட

*விடணும், பொறுப்புகளைப் பிரித்துக் கொடுத்து – நிர்வகிக்கச் சொல்ல வேண்டும்.*

*பெரம்பலூர் அருகே உடும்பியம் எனும் இடத்தில் தனலட்சுமி சீனிவாசன் சுகர் –பவர் – டிஸ்டிலரி மில் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கே சர்க்கரை மட்டுமின்றி 23 மெகாவாட் மின் உற்பத்தியுடன் 60 ஆயிரம் லிட்டர் டிஸ்டிலரியும் தயாரித்து அரசுக்கு வழங்கும் வண்ணம் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.*

*ஐயாவின் அலுவல்கள் அதிகாலையிலேயே ஆரம்பித்து விடுகின்றன. தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து விடுகிறார் 4.45 –க்கு இவரது இஷ்ட தெய்வமான முருகனை நினைத்துப் பிரார்த்தனை 5 மணிக்குத் தேநீர். ஒரு மணி நேரம் செய்தித்தாள்கள்!*

பிறகு பார்வையாளர்கள் சந்திப்பு.

உடற்பயிற்சி, குளித்து, தயாராகி 8.30 க்குப் பள்ளிக்குச் சென்று பிரேயரில் கலந்து கொள்கிறார். அங்கு டீச்சர்கள் –மாணவர்களிடம் நலம் விசாரிப்பு!

பிறகு காலைச் சிற்றுண்டி முடித்து கல்லூரிக்குப் பயணம். அங்கே நிர்வாகத்தைக் கவனித்தால். அனாவசியமாய் இவர் எதிலும் தலையிடுவதில்லை. பொறுப்புகள் சரியாய்க் கையாளப்படுகிறதா எனப் பார்ப்பார்.

மாதம் ஒரு முறை பிரின்ஸ்பால்,வைஸ் பிரின்ஸ்பாலுடன் மீட்டிங்! குறைகள் கேட்பார். அவற்றைச் சரி பண்ண நடவடிக்கை எடுப்பார்,ஹாஸ்டல் உணவு இவருக்குக் கேரியரில் வந்துவிடும். இவற்றைப்

பரிசோதிப்பார். குறைகள் இருப்பின் நிவர்த்தி செய்ய வைப்பார்.

மாலையில் காம்பஸிற்குள்ளேயே நடப்பார். வழியில் மாணவர்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து செயல்படுத்துவர்.

எப்போதும் நேர்மை- நேர் வழி இவரது கொள்கை. நல்லதையே நினைத்துச் செயல்பட்டால் நல்லதே நடக்கும் எனபது இவரது நம்பிக்கை!

இந்தக் குழுமத்தில் அனைத்துவிதக் கல்வி –பல மொழிகளில் கற்பிக்கப்பட்டாலும் கூட தமிழ்மேல் இவருக்கு அலாதி மரியாதையும் பற்றும் உண்டு.

தமிழ் மீடியத்தில் படிக்கும் மாணவர்களுக்குப் பஸ் இலவசம். 50 கி.மீட்டருக்குள் இருந்து வந்து போகும் மாணவிகளுக்குப் பஸ் இலவசம். இந்தக் கல்வி நிறுவனங்களில் மொத்தம் 150 பஸ்களுக்கு மேல் இயங்குகின்றன.

மாணவ –மாணவிகளிடம் வசூலிக்கப்படும் கட்டணங்கள் குறைவு என்றாலும் கூட ஸ்டாஃப்களுக்குத் தாராளமாய் ஊதியம் வழங்கப்படுகிறது. தகுதியான ஆசிரியர்கள் நியமனம்! இங்கே தகுதியில்லாமல் சிபாரிசுக்கு இடமில்லை!

சுதந்திர தினம், குடியரசு தினத்தில் கொடியேற்றும் போது –இங்குள்ள மாணவர்களே உருவாக்கின விமானத்தைப் பறக்க விடுவதுண்டு.

பொதுவாய்த் தமிழ் மீடியத்தில் பள்ளியில் படித்தவர் கல்லூரிக்கு வந்ததும் ஆங்கில மீடியம் என்றதும் தடுமாறிப் போவர், அவர்களால் பாடங்களைச் சரியாய்ப் புரிந்து கொள்ள முடியாமல் போகும் அதைத் தவிர்ப்பதற்காக இங்கு Bridge Course-15 நாட்கள் நடத்துகிறார்கள். இதன் மூலம் புதிய மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் மேம்படுத்தப்படுகிறது. அதன்பிறகு அவர்களின் தாழ்வுமனப்பான்மை போய் பாடங்களில் ஆர்வமுடன் கவனம் செலுத்தவும் முடிகிறது.

பெண்கள் கல்லூரியில் 3500 மாணவிகள் படிக்கின்றனர்.அதில் பாதிக்கு மேல் விடுதியில் தங்கியுள்ளனர். விடுதி என்றால் சும்மா பெயருக்கு இல்லை. ஐந்து நட்சத்திர ஹோட்டல் அளவிற்கு வசதிகள்! நீச்சல் குளம்! அடுக்கு மாடி அறைகள்!

லிஃப்ட்! ஹைடெக் கிட்சன்! போன், கம்ப்யூட்டர், ஈமெயில், பொழுதுபோக்கு வசதிகள்.

இங்குக் கேரளா, ஆந்திரா, சிக்கம், மணிப்பூரிலிருந்தும் கூட வந்து படிக்கிறார்கள். பொருளாதார அளவில் பின்தங்கியுள்ள குடும்பத்துப் பிள்ளைகளுக்குக் கட்டணத்தில் சலுகையும், உதவித் தொகையும் வழங்கிப் படிக்க உதவுகிறார்கள். இங்கே பட்டப்படிப்பு முடித்து –முதுகலைப் பட்டம் படிக்க வருபவர்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

எப்போதும் 60 –க்கும் குறையாமல் யுனிவர்சிட்டி முதன்மை ரேங்க்குகள் பெறுகிறார்கள். மாணவர்கள் –டாப் ரேங்க் பெற்றால் –அதற்குப் பாடுபட்ட ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகை அளித்துக் கௌரவிக்கிறார்கள்.

ஸ்டாஃப்கள் பாட நூல் எழுதினால் அவர்களுக்கு விருது! பணமுடிப்பு! அவர்கள் பிஹெச்.டி செய்வதால் ஊக்கத்தொகை உண்டு! ஸ்டாஃப்களின் மேற்படிப்பை நிர்வாகம் உற்சாகப்படுத்துகிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருகிறது.

பொதுவாக மாணவ –மாணவியர் விடுதிகளில் ஒரே தரம் உணவுதான் வழங்கப்படும். இங்கே அப்படியில்லை. கேரளத்தவர்களுக்கு அவர்களின் ரசனைப்படி கேரள வகை உணவுகள்! ஆந்திர மாணவர்களுக்கு உணவு! எல்லோருக்கும் தனித்தனி உணவகங்கள்! ஸ்டாஃப்களுக்குத் தனி உணவகம்! தீபாவளிக்கு ஊருக்குச் செல்லாமல் இங்கு இருக்கும் மாணவர்களுக்கு நிர்வாகமே பட்டாசுகள் வாங்கிவந்து –அவர்களின் குறை போக்குகிறது.

பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்ஜான், ஹோலி, ஓணம் எனப் பண்டிகைகளை இங்கேயே கொண்டாட வைக்கிறார்கள்.

பெண்கள் கல்லூரியில் பட்டம் முடித்து வெளியே செல்லும் மாணவிகளுக்கு –நமது கலாசாரம் –பண்பாட்டை நினைவூட்டும் வகையில் குத்து விளக்குக் கொடுத்தனுப்புவது இவர்களின் வழக்கம். அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது.

தொழிற் கல்வியாளர்களுக்கு இந்தக் கல்லூரி மூலம் உடனடி வேலைக்கு நல்ல வாய்ப்புகல் ஏற்படுத்தித் தருகிறார்கள். இதற்காக வருடந்தோறும் நூற்றுக்கணக்காக நிறுவனங்கள் – வந்து கேம்பஸ் இண்டர்வியூ நடத்துகின்றன. பொதுவாக, பிற கல்லூரிகளில் ஆங்கங்குப்

படிக்கும் மாணவர்களை மட்டுமே கேம்பஸ் இண்டர்வியூவிற்கு அனுமதிப்பர்.

ஆனால் இவர்களோ –அப்படிக் குறுகிய அளவில் சிந்திப்பதில்லை.

வேறு இடங்களில் படித்த மாணவர்களும்கூட இங்கு நடக்கும் கேம்பஸ் இண்டர்வியூவில் கலந்து கொள்ள அனுமதிக்கிறார்கள். அதற்கான வசதிகளுடன் மாணவர்கள் வந்து செல்ல இலவச பஸ் வசதியும் செய்து தருகிறார்கள்.

## பாகம் 12

ஐயா தனது இளமைப் பருவத்திலும் ஆரம்ப காலகட்டத்திலும் தனியாகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. சொந்த உடன் பிறப்புகளே உதறித் தள்ளின பிறகும் தனி மரமாக வேர் விட்டு வளர்ந்தார்.

பொதுவாக, தனி மரம் தோப்பு ஆகாது என்பர். இவர் தோப்பாக மாற மனைவி திருமதி தனலட்சுமி அவர்கள் ஒரு கருவியாக –பாலமாக – பலமாக –தெம்பு தந்திருக்கிறார்.

பெரம்லூர் துறைமங்கலத்தைச் சேர்ந்த தனலட்சுமி அம்மாளின் குடும்பமும் கூட வசதி பெற்றிருக்கவில்லை. வீட்டில் தனலட்சுமியையும்

சேர்த்து 5 பெண் பிள்ளைகள் –இவர்களுக்குக் கீழ் 2 தம்பிகள்.

அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற சொந்த வழியுமில்லாமல் சொந்தமும் உதவும் சூழல் இல்லாத போது ஐயா அவர்கள் கை கொடுத்தார்கள். குடும்பத்தில் கடன் சுமை, மாமனாருக்கு வயதாகிக் குடும்பத்தைத் தாங்க முடியாத நிலைமையில் மருமகனான சீனிவாசனிடம் ``நீ எவ்வளவோ கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்திருக்கிறாய். எவ்வளவோ பேர்களுக்கு உதவியிருக்கிறாய். உன் நல்ல மனதிற்கு –நல்ல குணத்திற்கு கடவுள் எப்போதும் துணையிருப்பார். பெண் கொடுத்த நான் உனக்கு உதவியாக இருக்க வேண்டும் பொருள் – செல்வம் கொடுத்தால் அது உன் தொழிலுக்கும் உதவியாக இருக்கும். ஆனால் அதற்குப் பதில் உனக்கு தொந்தரவுதான் கொடுக்கிறேன். எனக்கு வேறு

வழியில்லை. என் குடும்பத்தையும் சேர்த்து நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

சீனிவாசன் அதை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டு –மாமனாரின் குடும்பத்தை-தனதாகத் தத்து எடுத்துக் கொண்டார் என்றே சொல்லலாம். மாமனாரின் மகள்களுக்கெல்லாம் இவர்தான் திருமணம் செய்து வைத்தார். தனலட்சுமியின் தம்பிகள் இருவரையும் தன்னுடன் வைத்து அவர்களையும் தொழிலில் கூட வைத்துக் கொண்டார்.

தன் மகள்களை மனைவியின் தம்பிகள் திரு.நீல்ராஜ், திரு.மணி இருவருக்கும் கல்யாணம் செய்து கொடுத்து எல்லோரும் கூட்டுக் குடும்பமாக ஒன்றாகச் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

மருமகன்களும் சொந்த மகன்கள் போல இவரிடம் தொழில் –நேர்மை-நாணயம் –கற்று ஆத்மார்த்தமாய்த் தோள் கொடுத்துச் செயல்படுவதால் சீனிவாசன் எனும் ஆலமரம் இன்று பெருந்தோப்பாக வளர்ந்திருக்கிறது.

கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் அவற்றின் செயலாளராக திரு. நீல்ராஜ் பொறுப்பேற்றுத் திறம்படக் கவனித்து வருகிறார். ஐயாவின் அதே சிந்தனை ஓட்டத்தில் –சீர்குணத்தில் –அடக்கத்தில் –ஆற்றலில் இவரது நிர்வாகத்திறமையும் அடங்கியிருக்கிறது.

அடக்கம் –எளிமை –வேகம்- விவேகம்! அசராமை! துணிவு –கனிவு –மனிதாபிமானம் –என ஐயாவிடம் கற்றுக் கொண்ட அனுபவம் இவருக்கு நிர்வாகத்தில் கைகொடுக்கிறது.

ஐயாவைக் கூட இருந்து பார்த்து –பழகி – வளர்ந்து வந்தவர் என்கிற முறையில் திரு.நீல்ராஜ் அவர்களிடம் ஐயா பற்றியும் –கல்வி நிறுவனங்களில் தோற்றம் –வளர்ச்சி பற்றியும் கலந்து பேசினோம்.

``சின்ன வயதிலிருந்தே நாங்கள் ஐயாவின் நிழலில் அவரது பராமரிப்பில் தான் வளர்ந்தோம் . எங்கள் குடும்பத்தின் கஷ்டமான சூழ்நிலையில் நானும் தம்பியும்கூட பள்ளி மேல்படிப்புக்கு மேல் தாண்ட முடியவில்லை.

ஐயா தனியாகக் கஷ்டப்படுகிறார் என்று அவருக்குத் துணையாக அவரது தொழிலில் நாங்களும் ஐக்கியமானோம்.

அப்போது டீக்கடை, ஹோட்டல் நடந்து கொண்டிருந்தது. பக்கத்து ஊரில் பால் பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தினமும்

அதிகாலை 3 மணி, மாலை 4 மணி எனப் பால் கறந்து வந்து கடைக்கு ஊற்ற வேண்டும்.

அப்போது பஸ் வசதியில்லை. சைக்கிள்தான், மோசமான மண்ரோடு, குண்டும் குழியும் மிரட்டும். மழை பெய்து விட்டால் சகதியில் சைக்கிள் செல்லாது. பால் கேன்களைக் கேரியரில் கட்டி –சைக்கிளையும் சேர்த்துத் தோளில் சுமந்து செல்ல வேண்டியிருக்கும். அதற்காக நாங்கள் அஞ்சுவதில்லை.

ஐயாவின் தன்னம்பிக்கை –துணிச்சல் எல்லாம் அவரைப் பார்த்து வளர்ந்ததில் எங்களுக்கும் வந்திருந்தது.

பால் பண்ணையைத் தரத்துடனும் – உரிய நேரத்துடனும் நடத்தி வந்தால் எங்களுக்கு நிறைய ஆதரவு கிடைத்தது. வாடிக்கையாளர்களும் அதிகமாயினர்.

பொதுமக்களுக்குப் பால் மாடு வாங்க வட்டியில்லாமல் கடன் கொடுத்துப் பால் பண்ணை மென்மேலும் வளர ஆரம்பித்தது.

எங்களைக் கஷ்டத்தில் காப்பாற்றின பால் பண்ணையை விட்டு விடாமல் இன்னும் தொடர்ந்து நடத்தி வருகிறோம். இப்போது தினசரி 3500 லிட்டருக்குக் குறையாமல் பால் விநியோகம் செய்கிறோ.

## *பாகம் 13*

*1980–இல் மதுபானக் கடைகளை அரசு ஏலம் விட்ட போது ஏன் அந்தத் தொழிலில் இறங்கக்கூடாது என்று தோன்றிற்று. ஆனால் அதற்குப் பெரிய அளவில் முதலீடு தேவைப்பட்டது.*

*மதுக்கடை வேணுமா- இந்த தொழில் தேவையா என்கிற மன உளைச்சல் இருந்தாலும் – நாம் என்ன முறைகேடாகவா போகிறோம்? அரசே நடத்தும் போது –நாம் ஏன் அந்தத் தொழில் செய்யக்கூடாது என்று மனச் சமாதானம்.*

*மதுக்கடைகளைப் போட்டியில் தனியாய் ஏலம் எடுக்க முடியாது என்பதாலும் அந்தத் தொழிலில் அனுபவம் இல்லாததாலும்*

கூட்டுச் சேர்ந்து எடுத்தோம். அதற்குக்கூட கையில் பணமில்லாததால் ஊரில் இருந்த 4 ஏக்கர் நிலத்தை விற்றார்கள். மதுக்கடையில் வருமானம் வருமா-வராதா என்கிற சந்தேகத்தில் வாழ்வா – சாவா என களத்தில் இறங்கினோம்.

ஏற்கனவே மனசாட்சியின் உறுத்தல், அத்துடன் கள்ளச்சாராயப் பேர்வழிகள் முதல் பலரிடமும் கடுமையான எதிர்ப்பு வேறு. எல்லாவற்றையும் சமாளித்து வெற்றிகரமாய் நடத்தி ஓரளவிற்கு லாபமும் கிடைத்தது.

இருந்தாலும் மதுபானக் கடைகள் நிரந்தரமல்ல. அடுத்த முறை போட்டி அதிகமாகும். ஏலம் வேறு யாருக்காவது போகலாம் என்பதால் வெவ்வேறு தொழில்கள் பற்றி யோசனை போயிற்று.

அப்போது ஐயாவின் நண்பரும், ஆசிரியருமான திரு.வெங்கட்ராஜ் லாரி, பஸ்கள் வாங்கத் தூண்டினார். அப்போது ஆரம்பிக்கப்பட்ட தனலட்சுமி லாரி பார்சல் சர்வீஸ் இன்றும் உள்ளது.

பிறகு பஸ்கள், அங்காளம்மன் ராசி, தீனதயாளன் என வாங்கி 4 ரூட் பஸ்களும், மினி பஸ்கள் 9 ம் இயங்க ஆரம்பித்தன.

ஐயா, நாணயம் தவறக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருப்பார் செய்கிற தொழிலில் நேர்மை வேண்டும். சுத்தம் வேண்டும் லாபத்திற்காக யாரையும் ஏமாற்றக்கூடாது. கொள்ளை லாபம் கூடாது என்பதில் உறுதி காப்பவர். கடையில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பார்.

ஒரு சமயம் –எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது –எனது கவனக்குறைவால் கடையில் சிறு தவறு நடந்துவிட்டது. அது தெரிந்ததும் ஐயா கொதித்துப் போனார். ``இனித் தவறு ஏற்படாது'' என்று நான் சொல்லியும்கூட அவர் விடவில்லை.

சும்மா வாயால் சொன்னால் போதாது. `இனித் தவறு ஏற்படாது'ன்னு 5000 முறை எழுது என்று எழுத வைத்தார். இம்போசிஷன்! அதன்பிறகு தவறு அங்கு நடக்குமா? அந்த உணர்வு அடி மனத்தின் ஆழத்தில் பதிந்து இன்றும் எச்சரிக்கையாய்ச் செயல்பட வைக்கிறது.

பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுவதால் குடும்பத்தில் எல்லோருக்கும் ஆத்மார்த்தமும், பயமும் ஏற்படும். தத்தம் துறைகளை நன்கு

கவனிக்க வேண்டும்-வளர்க்கணும் –வளரணும் – ஐயாவிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்கிற உந்துதல் எழும். அது வேகமாய்ச் செயல் பட வைக்கும் வைக்கிறது.

எனது மகனுக்கு 5 வயது ஆன போது ஒரு திருப்பம் என்று கூட சொல்லலாம். நாம் தான் படிக்க முடியலை.அன்று கஷ்டமான் சூழ்நிலை. இப்போது அந்தத் கஷ்டம் இல்லை. ஒரளவிற்கு வசதி பெற்றிருக்கிறோம். பையனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும்.

நம் அருகில் இருந்தால் படிப்புக் கெடலாம். என்பதால் –குன்னூரில் கிறிஸ்தவப் பள்ளியில் கொண்டு போய்ச் சேர்த்தோம்.

அந்தச் சமயம் திருச்சியில் –ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.சி.வெங்கடாஜலபதி எனபவரின் நட்பு எங்களுக்குக் கிடைத்திருந்தது.

அவர், ``உங்கள் பிள்ளையை எதற்குத் தள்ளிப் போய்ச் சேர்க்கிறீர்கள் பேசாமல் நீங்களே பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாமே?'''''' என்றார்.

``மற்றத் தொழில்கள் பரவாயில்லை. மேற்கல்வி பெற்றவர்கள் யாரும் இல்லாமல் எப்படி ஆரம்பித்து நடத்த முடியும் என்கிற சந்தேகமும் பயமும் இருந்தது.

``உங்களால் நிச்சயம் முடியும். அதற்கான நிர்வாகத் திறமை இருக்கிறது. யோசியுங்கள் ''என்று ஐயாவை விடாமல் அவர் தூண்டினார். அதன்பிறகு ஐயாவிற்கும் ஏன் கூடாது என் தோன்ற ஆரம்பித்தது. ரத்தத்தில் ஊறிப் போயிருந்த தன்னம்பிக்கை –நம்மால் முடியும் என்று தெம்பு தந்தது.

மற்ற தொழில்களில் வெற்றி என்பது லாபம் – பணம் இவற்றைப் பொருத்தே

அமையும். அவற்றின் பலன் பணமாக வெளிப்படும். ஆனால் கல்வியின் வெற்றி என்பது சம்பாத்தியத்திற்கும் அப்பாற்பட்டு தொண்டு – சேவை –எனப் படர்ந்து விரிந்து ஆத்மதிருப்தியும் தரக்கூடியது. நாம் கற்க முடியாததைப் பிறருக்குத் தருவோம். சுற்றுப்பக்க மக்களுக்குப் போதுமான கல்விக் கூடங்கள் இங்கு இல்லை. அந்த வசதியை நாம் ஏற்படுத்தித் தருவோம். பிறருக்கு உதவுவோம் என ஐயா முடிவெடுத்தார்கள்.

1994 –இல் மதுரை திரு. ராமகிருஷ்ணன் திறந்து வைக்க மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்த முதல் வருடத்திலேயே 320 பிள்ளைகள் சேர்ந்தது. ஆச்சர்யமான, அதே சமயம் எங்களுக்கு சந்தோஷமான செய்தி, `இது நன்றாய் வளரும்.

பல்கலைக் கழகமாய் உருவெடுக்கும்'' என்று அவர் வாழ்த்தினார்.

அது எங்களுக்கு உற்சாகம் தந்தது. இந்தப் பகுதி மக்கள் நம்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எதைச் செய்தாலும் சிறப்பாய்ச் செய்வோம் என எதிர்பார்க்கிறார்கள். அந்த நம்பிக்கை பொய்க்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று, கடுமையாக ஐயாவின் வழிகாட்டுதலில் உழைத்தோம்.

அதன்பிறகு இந்தக் கல்வி நிறுவனஙகளுக்கு ஏணிதான்!

1995 –இல் 9 மற்றும் 10 ஆம் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மூன்றே வருடங்களில் 1300 பேர்கள் சேர்ந்தனர்! எங்களது பொறுப்பு அதிகமாயிற்று.

அந்த சமயம் அருகில் பாய் மிக ஆரம்பிக்கலாம் என்று 5 ஏக்கர் நிலம் வாங்கிப் போட்டிருந்தோம். ஆனால் மில்லிற்கான வசதியும் செக்யூரிட்டியும் அங்கு இல்லை. என்று லோன் தர மறுத்துவிட்டனர். பணத்தை வீணாக – நிலத்தில் போட்டு சும்மா வைத்திருக்கிறோமே என்கிற கவலையில் இருந்தபோது.

பாய் மில் இல்லாவிட்டால் என்ன –அந்த இடத்தில் என் உயர்கல்வி ஆரம்பித்து நடக்க்க் கூடாது என்கிற சிந்தை ஐயாவிற்கு எழுந்தது. பாய் மில்லிற்கு லோன் கிடைக்காதது கூட நன்மைக்கே என்று தோன்றிற்று.

எப்போதுமே எந்த ஒரு தோல்வியும் – தடங்கலுமே ஐயாவைப் பாதித்ததில்லை. தோல்வியை மறந்து –வெற்றி பெற வைக்க வேறு

மாதிரி யோசிப்பார். அதில் வெற்றியும் காணுவார்.

பெரம்பலூர் சுற்றுப் பகுதிகளில் அப்போது மகளிர் கல்லூரி இல்லை. பெண்கள் படிக்க வேண்டும் என்றால் திருச்சிக்குத்தான் செல்ல வேண்டும். அங்கு போட்டாப் போட்டி, இடம் கிடைப்பதும் அரிது. தினம் போய் வர முடியாது. விடுதியில் சேர்க்க வேண்டும் அதற்கு அதிகச் செலவாகும்.

இதையெல்லாம் யோசித்துக் கிராமப்புற மக்கள் பெண்களைக் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பாமல் இருந்தனர். அருகில் கல்லூரி என்றால் எல்லோரும் படிக்க வைப்பர்.

பெண்களுக்குக் கல்வி முக்கியம். வேலைக்குப் போகிறார்களோ இல்லையோ – அவர்கள் பெறும் கல்வி –நாளை குடும்பத்தை –

பிள்ளைகளை வழி நடத்த உதவும். அவர்களின் அறிவு வளரும்போது –உலகம் புரியும். அது கணவனுக்கும் பலனுள்ளதாக இருக்கும். அதனால் பெண் கல்வி அவசியம். அதற்கு நம் பங்காக இருக்கட்டும் என்று ஐயா 1995 –இல் பெண்கள் கல்லூரிக்கு மனு போட்டார்.

அந்த மனு –காரணமில்லாக் காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

சளைக்காமல் மறு வருடமும் மனு செய்தார். அதிகாரிகள் ஆய்வுக்கு வந்து –மகளிர் கல்லூரி ஆரம்பிக்க அங்குப் போதுமான வசதிகள் உள்ளன என அறிக்கை சமர்ப்பித்தனர். இருந்தும்கூட எந்தத் தகவலும் இல்லை. இரண்டு மாதங்கள் அந்த ஃபைல்கள் அலுவலகத்தில் தூங்கின. இவர்களும் அங்குப் போய் தவமாய்த் தவமிருந்தனர்.

மேலதிகாரியை அணுகிய போது ``பெரம்பலூர் மிகவும் பின் தங்கிய பகுதி. அங்குக் கல்லூரி, அதுவும் பெண்கள் கல்லூரி ஆரம்பித்து நடத்துவது என்பது இயலாத காரியம். மாணவிகள் கிடைப்பதும் சிரமம்'' என்றார்.

``இல்லை. மாணவிகள் இந்தப் பகுதியில் போதுமான அளவில் உள்ளனர். நிச்சயம் சேருவார்கள்.

``அப்படியே சேர்ந்தாலும் கல்லூரிக் கட்டணம் செலுத்தக்கூடிய அளவில் கிராம மக்கள் இருக்கிறார்களா? விஷப்பரீட்சை வேண்டாம். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். வீணாக ஆரம்பித்து நஷ்டப்படாதீர்கள். உங்கள் உழைப்பு –முயற்சி – பணம் விரயமாகிவிடக்கூடாது.

``பரவாயில்லை. உங்கள் அன்புக்கு நன்றி. நஷ்டம் வராமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அப்படியே வந்தாலும் கவலையில்லை. மகளிர் கல்லூரி ஆரம்பிக்கிற முடிவில் எந்த மாற்றமும் இல்லை. அனுமதி தாருங்கள்!''

``அனுமதி தருகிறேன். ஆனால் நன்றாக யோசியுங்கள். திருச்சி, சமயபுரம் போன்ற பகுதியில் ஆரம்பிக்கலாமே. உங்களுக்கும் ரிஸ்க் குறைவு. நஷ்டம் வராது.''

``நஷ்டத்தைப் பற்றி கவலை இல்லை. எனக்கு ஊர்ப் பற்று அதிகம். எல்லோரும் டவுன் பக்கமே போய்விட்டால் கிராமங்கள் வளர்வது எப்போதும்? எப்படி வளரும்? கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்கிறோம். ஆனால் அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தால்

எப்படி? என்னவானாலும் சரி –என் சொத்தை விற்றாவது கல்லூரி நடத்துவோம்! மகளிர் கல்லூரி எண்ணம் வந்ததே –இந்தப் பகுதி மக்கள் பலனடைய வேண்டும் என்பதற்காகத்தான் – பணம் சம்பாதிப்பதற்காக அல்ல!''

``சரி! உங்கள் இஷ்டம், நஷ்டம் உங்களுக்குக் கவலையில்லாம லிருக்கலாம். ஏதாவது காரணத்தால் கல்லூரியை மூடினீர்கள் என்றால் மாணவிகளின் படிப்பு என்னாவது? பெற்றோர்கள் போராடுவார்கள். அரசுக்கு கெட்ட பெயர் வரும்!''என்று அவர் எதிர்மறையாகவே பேசிக் கொண்டிருந்தார்.

அனுமதி தருவதாகத் தெரியவில்லை. ஐயாவுக்கு வைராக்கியம் அதிகமாயிற்று. அதிகாரிக்கு வேண்டிய ஒருவரைப் பிடித்து அவர் மூலமும் கட்டாயப்படுத்திப் பார்த்தார்.

பலனில்லை.அவர் பிடி கொடுக்காமல் தட்டிக்கழித்துக் கொண்டிருந்தார்.

அப்புறம் விடாமல் அவரது அலுவலகத்திற்குப் படையெடுத்ததால் ``இவர்களுக்குப் பெரம்பலூரில் கல்லூரி ஆரம்பிக்க அனுமதி தரலாம் –ஆனால் நடத்த இயலாமல் போனால் எக்காரணம் கொண்டும் அரசாங்க எடுத்து நடத்தாது'' என்று பரிந்துரைத்தார்.

அதன்பின் அந்தக் கண்டிஷனுடன் அனுமதி கிடைத்தது. 1996 –இல் மகளிர் கல்லூரி ஆரம்பித்தபோது முதல் வருடம் 42 பேர்கள்தான் சேர்ந்தனர்.

கிராமப் பகுதிகளில் மாணவிகளைச் சேர்ப்பது என்பது சாதாரண விஷயமல்ல. படிப்பே வேண்டாம் –கல்யாணம் பண்ணிக்

கொடுத்துவிட வேண்டும். கடமை முடிந்தது என்று இருப்பவர்களை –கல்லூரிப் படிப்புக்கு அனுப்பச் செய்வது சிரமமாகத் தானிருந்தது. கல்லூரிக்கு அனுப்பினால் பெண்கள் கெட்டுப்போவார்கள். கர்வம் வந்து விடும். மூன்று நான்கு வருடம் கல்யாணம் தள்ளிப்போய் விடும் என்று பயந்தனர்.

இதெல்லாம் ஐயா எதிர்ப்பார்த்துதான், பெண்கள்ப் படிக்க வைப்பது சவாலான காரியம்தான் அது தெரியும்-அதையெல்லாம் தாண்டி வெற்றி பெறணும். சோர்ந்து போகக்கூடாது. அதிகாரியிடம் போராடி அனுமதி பெற்றிருக்கிறோம். பின்வாங்கக் கூடாது என வைராக்கியமாயிற்று.

பெரம்பலூரைச் சுற்றியுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போய் தலைமை ஆசிரியரைச்

சந்தித்து ஆதரவு கேட்டோம். இறுதிப் பரீட்சை முடியும் தருணத்தில் –அவர்களும் ஆதரவுக் கரம் நீட்டினர். டவுனில் இடம் கிடைப்பது கஷ்டம். செலவும் அதிகம். இங்கே நன்கொடை கிடையாது. கட்டணமும் குறைவு. பயணமும் எளிது நல்ல ஆசிரியர்களை வைத்து அதிகக் கவனிப்பு கிடைக்கும் என்பதை எடுத்துச் சொன்னோம்.

அதன் பலனாய் அடுத்த வருடம் 235 மாணவிகள் சேர்ந்தனர். அது படிப்படியாய் வளர்ந்து இன்று 3500 பெண்களாயிற்று! அடுத்து தனிப் பல்கலைக்கழகத்திற்கு மனு கொடுத்திருக்கிறோம்.

அடுத்த கட்டமாக,

கணினி, எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பாலிடெக்னிக் கல்லூரிகள் ஆரம்பிக்கும் திட்டம்

எழுந்தது. மத்திய அரசிடம் ஐயா விண்ணப்பித்தார்.

டெல்லிக்கு நேர்காணலுக்கு அழைப்பு வந்தது.

டெல்லிக்கு அதுவரை நாங்கள் யாரும் போனதில்லை. மொழி பிரச்சினை வேறு. அதனால் ஐயாவின் நண்பரும் ஓய்வுபெற்ற புரபசருமான திரு.ரங்கராஜன் அவர்களைத் துணைக்கு அழைத்துப் போனோம். அவர் எங்களுக்கும் அதிகாரிக்குமிடையே மொழி பெயர்த்துப் பேசினார். எங்கள் கருத்துகளை எடுத்துரைத்தார்.

ஆனால் அவர்கள் எதிர்மறையாகவே பேசிக் கொண்டிருந்தனர். வாக்கு வாதம் முற்றியதில் அவர்கள் கோபப்பட்டிருக்க

வேண்டும். எங்களுக்கு எதுவும் விளங்கவில்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

முடிவாக அவர்கள், நீங்கள் கேட்ட எல்லாவற்றிற்கும் அனுமதி தரமுடியாது. பாலிடெக்னிக்கிற்கு மட்டும் தருகிறோம் என்றனர்.சரி, ஒருவிதத்தில் அதுவும்கூட நல்லதுதான். இந்தப் பகுதி மாணவர்களுக்குத் தொழிற்கல்வி அவசியமான ஒன்று. வேலைவாய்ப்பிற்கு அது உதவும் என்று சம்மதித்தோம்.

பாலிடெக்னிக் ஆரம்பிக்க அனுமதி கிடைத்தது.

இன்ஸ்பெக்ஷனுக்கு வந்த அதிகாரிகள், வழக்கம் போல ஏதாவது குறை சொல்வார்கள், குழப்பம் பண்ணுவார்கள் என்கிற பதற்றம் இருந்தது.

*ஆனால் அவர்களோ, பள்ளி, கல்லூரி இடங்கள், கட்டடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இத்தனை வசதிகள் வைத்துள்ள நீங்கள் ஏன் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கக் கூடாது என்று கேட்டனர்.*

*என்ன ஒரு வினோதம்! மேலே உள்ளவர்கள் என்னென்னவோ சொல்லி மறுக்கிறார்கள். வசதிகள் பற்றி எடுத்துச் சொன்னாலும் இவர்களுக்குப் புரிவதில்லை.அவர்களின் பிடிவாதத்திலிருந்து கீழே இறங்குவதில்லை!*

*சரி, இப்போதைக்கு பாலிடெக்னிக்கை ஆரம்பித்து இதை வளர்ப்போம். பிறகு பொறியியல் கல்லூரிக்கு மோதுவோம் என்று 1998 –இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்திலேயே 240 மாணவர்கள்.*

கடுமையான கண்காணிப்பிலும் ஆசிரியர்களின் திறமையாலும் ஒரே வருடத்தில் – உள்ள 150 கல்லூரிகளில் தனலட்சுமி சீனிவாசன் பாலிடெக்னிக் 14 வது இடத்தைப் பிடித்தது. அதன்பிறகு தொடர்ந்து அபார வளர்ச்சி.

இங்கே பாலிடெக்னிக்கில் டிப்ளமா படித்து வெளியே வருபவர்கள். என்ஜினியரிங் இருந்தால் சேர்த்து படிக்கலாம் என விருப்பப்பட்டனர்.

பலரும் அதற்காகத் தூண்டவே, திரும்பப் பொறியியல் கல்லூரிக்கு மனு போடப்பட்டது. அதற்கான கட்டடங்கள் வேகமாய் ரெடியாகின.

இதற்கிடையில் வளர்ச்சியின் வேகம் தாங்காமலோ, என்னவோ குடும்பத்தில் பெரிய

துக்கம் ஒன்று சம்பவித்தது. ஐயாவின் மனைவி திருமதி. தனலட்சுமி அவர்கள் மரணம்!

அது குடும்ப அங்கத்தினர்கள் அனைவரையும் பாதித்தது. குடும்பப் பொறுப்பு மட்டுமின்றி ஐயாவுக்குச் சிறந்த ஆலோசகராகவும் இருந்து வந்த அவரின் இழப்பிலிருந்து மீள நீண்ட நாட்கள் பிடித்தன.

2000 –ஆம் ஆண்டின் பரிசோதனைக்கு வந்த குழு, சின்னச் சின்ன குறைகளைச் சொல்லி என்ஜினியரிங் கல்லூரிக்கு அனுமதி தர மறுத்தது. இத்தனைக்கும் சட்டப்படியான எந்தக் குறைகளும் அப்போது இல்லை. என்ன செய்வது! இதுமாதிரி விஷயங்கள் நிர்வாகித்தினருக்கு பழகிப் போயிருந்தது.

அந்தக் குறிப்பிட்ட குறைகளை நிவர்த்தி செய்து மறுபடியும் மனு போட, 2001 –இல்

அனுமதி கிடைத்து பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஏரோநாடிக்கல் முதல் அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பம் முதலே வெற்றிகரமாய்ச் செயல்பட்டு வருகின்றன.

அடுத்த முயற்சியாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மனுபோட, தொடர்ந்து ஐந்து வருடங்கள் நிராகரித்தனர். இவர்களுடன் சேர்த்து மனுபோட்ட 43 நிறுவனங்களும் சேர்த்து வழக்குத் தொடர்ந்ததின் விளைவாய்ப் பிறகு அனுமதி கிடைத்தது. பி.எட்., கல்லூரியும் இன்று மிகப்பெரிய அளவில் நடக்கிறது.

## பாகம் 14

பொறியியல் கல்லூரி ஆரம்பித்த சமயம் லோன் அப்ளை செய்துபட்ட அவதிகளை திரு.நீல்ராஜ் நினைவு கூர்ந்தார். இவர்களுக்கு ஏற்கெனவே வங்கியில் லோன் இருந்தது. முறைப்படி அவற்றைத் திருப்பிச் செலுத்தவும் செய்தனர்.

இருந்தாலும்கூட பெரிய தொகை என்பதால் லோக்கல் வங்கி இவர்களின் மனுவைத் தலைமை அலுவலகத்திற்கு சிபாரிசு செய்திருந்தது. அங்கிருந்து இவர்களுக்கு அழைப்பு வரவே –கரூர் சென்று ஒரு நாள் முழுக்க அந்த வங்கியில் தேவுடு காத்திருந்தனர். அதில் ஐயாவும் அடக்கம்.

இந்தா அழைப்பார்கள், இப்போது கூப்பிட்டு விடுவார்கள் என சாப்பிடக்கூடப் போகாமல் காத்திருந்து பயங்கர விரக்தியில் இருந்தனர். இத்தனை கல்வி நிறுவனங்களை வெற்றிகரமாய் நடத்தி வருபவர்களுக்கும் இப்படி மரியாதையின்மை.

கடன் கேட்க வருபவர்கள் கடன்காரர்களா? வங்கிக்கு அடிமைகளா? தகுதிம் கேரண்டி கொடுத்தபின்புதான் பணம் தர்ப்போகிறார்கள். அப்படியிருக்கும் போது ஏன் இந்த அசட்டை? வங்கியின் வருமானம் கடன் கொடுத்து வாங்குவதில் இருக்கும்போது எதற்காக இப்படி நடத்துகிறார்கள் என்று வெறுப்பு.

கடைசியாக மாலை ஏழு மணிக்கு இவர்களை அழைத்தனர்.

பேப்பர்களையெல்லாம் பார்த்த ஜெனரல் மானேஜர், ``எதை நம்பி எந்த அடிப்படையில் உங்களுக்கு லோன் தருவது?'' என்றார்.

ஐயாவுக்கு பயங்கரக் கோபம் –அடக்கிக் கொண்டார்.

பின்தங்கிய பகுதிகளை முன்னேற்ற வேண்டும் –தொழில் தொடங்கி முன்னேற்ற வேண்டும் என்று ஒரு பக்கம் அரசாங்கம் பாடுபடுகிறது, மறுபக்கம் –வங்கிகள் இந்த மாதிரி1

``லோன் தருவதற்கு உங்களுக்குப் பொறுமானமாக என்னென்ன தேவையோ அவற்றைச் சமர்ப்பிக்கிறோம். போதுமா.....?''

``அதில் பிரச்சனை இல்லை. என்ஜினியரிங் கல்லூரிகள் ஏற்கனவே நிறைய

ஆயிற்று. மேற்கொண்டு நீங்கள் தொடங்கினால் அதை நடத்துவது சிரமம் அதனால் புதிதாய் பொறியியல் கல்லூரி தேவையில்லை!''

அதைக் கேட்டதும் அதுவரை கட்டுப்படுத்தி வைத்திருந்த கோபம் ஐயாவிடமிருந்து கொப்பளிக்க ஆரம்பித்தது.

``லோன் வேண்டுமானால் தரமுடியாது என்று சொல்லுங்கள், கல்லூரி தேவையில்லை என்று சொல்லும் அதிகாரம் உங்களுக்கில்லை. ஏற்கெனவே முறைப்படி அனுமதி பெற்றுத்தான் உங்களிடம் வந்துள்ளோம். இந்த மாதிரிப் பேசுவதற்கு வங்கிக்கு ஜெனரல் மானேஜர் தேவையா...?''

``இல்லை நான் உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்''

``எது நன்மை? வளர்ச்சியில்லாப் பகுதியில் பாடுபட்டு உளப்பூர்வமாகச் சேவை செய்ய வேண்டித் தொடங்கும்போது அதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரணுமே தவிர டிஸ்கரேஜ் பண்ணக்கூடாது!''

ஏறக்குறைய சண்டைப்பிடித்து விட்டு வெளியே வந்தனர். லோன் நிச்சயம் கிடைக்காது என்றே அவர்கள் நினைத்தனர்.

ஆனால் அந்த வங்கியிலிருந்து கேட்டதில் பாதி அளவிற்குக் கடன் தந்தனர்.

கட்டணம் குறைவில் –தரமான கல்வி – கலாசாரத்துடன் கூடிய கட்டுப்பாடு – நல்லொழுக்கம் –மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளை என இந்த நிறுவனங்கள் பெற்றோர்களிடம் பெரும் மதிப்பு பெற்றிருக்கின்றன. இங்குச் சேர்த்தால் தங்கள்

பிள்ளைகள் நல்ல மாணவனாக –மனிதனாக வெளியே வருவான் என்கிற நம்பிக்கையையும் இது ஏற்படுத்தியிருக்கிறது.

இங்கு 17 கல்வி நிறுவனங்கள்! ஏறக்குறைய 30 ஆயிரம் மாணவர்கள்! மாணவர்களுக்கு 4 மாணவிகளுக்கு 4 என தனித்தனியாய் விடுதிகள்! எட்டு மாடிக் கட்டடம்! லிஃப்ட் வசதியுடன் விடுதிகள்! நீச்சல் குளம்! ஏஸி லைப்ரரி. இங்கே கிடைக்காத நூல்கள் கிடையாது.

ஏஸியுடன் கூடிய ஆடிட்டோரியம்.

விளையாட்டு, விஞ்ஞானம், கலை, இலக்கியம், பாட்டு, நடனம் என அத்தனை துறைகளுக்கும் வசதிகள்! செய்து தந்துள்ளனர்! அறைக்கு அறை தொலைபேசி இணைப்புகள்! இண்டர்நெட்! விடுதியில் செல்போன்களுக்கு அனுமதி! உடற்பயிற்சிக்கு ஜிம்!

மனம் குளிரவும், மகிழவும் எங்கும் பசுமை பரப்பிச் செடி கொடி மரங்கள் எனப் பராமரிக்கிறார்கள். வீட்டுக் கஷ்டம் படிப்பைப் பாதிக்காமலிருக்க சிங்கப்பூர் அட்மாஸ்பியர் இங்கே!

விடுதியில் தரமான உணவு. புதுப்புது உபகரணங்கள் வரவழைத்து வேகமான விநியோகம்.

1 மணி நேரத்தில் 2000 சப்பாத்திகள் சூடாக –சுவையாக தயாரிக்க மெஷின்!

1 மணி நேரத்தில் 400 தோசைகள் தரும் மெஷின்கள்!

சுத்தமான –சுவையான சத்தான உணவு இங்கே வழங்கப்படுகிறது.எல்லோருக்கும் மினரல் வாட்டர்!

இங்கே நல்லொழுக்கத்திற்கு முக்கியத்துவம் தருகிறார்கள்.

நியாயமான தேவைகளுக்கு வேண்டியதையெல்லாம் செய்து தருகிறார்கள். படிப்போடு –கடமை –கண்ணியம் –கட்டுப்பாட்டுடன் –நாளைய பாரதத்திற்கு இங்கே இளைஞர்கள் தயாரிக்கப்படுகிறார்கள்.

அதே மாதிரிப் பிரச்சனையில்லாத –பெண்கள் கல்லூரி.

1996 –இல் முதன் முதலில் பெண்கள் கல்லூரி ஆரம்பித்த போது இதை வழி நடத்த சரியான பிரின்ஸ்பால் வேண்டும் என்று தேடினபோது காரைக்குடியில் ரிடையராகியிருந்த டாக்டர் ராமமீனாட்சி பற்றித் தகவல் வந்தது.

உடன் அவர்களைப் போய் அணுகினர். விவரம் சொல்ல –அவர் உடனே ஒப்புக் கொள்ளவில்லை. ``நான் வந்து உங்கள் நிறுவனங்களைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்'' என்றார்.

அதே மாதிரி வந்து பார்த்து-பிடித்துப் போய், ``உங்களின் சீரிய நோக்கம் -லட்சியத்திற்காக–உங்களின் கஷ்டநஷ்டத்திலும் பங்கேற்கத் தயாராய் இருக்கிறேன்'' என்று எந்த வித கண்டிஷன்கள் –டிமான்ட்களும் இல்லாமல் அவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அன்று முதல் பெண்கள் கல்லூரியின் வளர்ச்சியில் இவரது பங்கு அதிகம்.

இங்குக் கண்டிப்பான –தரமான – பாதுகாப்பான நிர்வாகத்தை ஏற்படுத்தித் தரமான

மாணவிகளை இந்த நிறுவனம் உற்பத்தி செய்யப் பெருந்தூணாய் அவர் நிற்கிறார்!

இவர்களின் சேவையும் சாதனையும் மக்கள் மத்தியில் மட்டுமல்ல அரசாங்கம் – அலுவலர்கள் மத்தியிலும் நன்கு பதிந்திருக்கிறது. இந்தப் பகுதியில் கரும்புச் சாகுபடி செய்பவர்கள் –கரும்பு வெட்டக் குறித்த காலத்தில் ஆர்டர்கள் கிடைக்காமல் மனம் வெந்து நெருப்பு வைத்துக் கொளுத்தும் நிலை ஏற்பட்டது.

அதைப் பார்த்ததும் ஏன் சர்க்கரை ஆலை ஆரம்பித்து விவசாயிகளின் துயர் துடைக்கக் கூடாது எனச் சர்க்கரை ஆலைக்கு மனு போட்டனர். உடன் கிடைத்தது.

500 பேர்களுக்கு வேலை தரும் வண்ணம் –சர்க்கரை, டிஸ்டிலரி, மின்சாரம்

*உற்பத்தி செய்யும் இந்த ஆலை 21.2.2010 –இல் சிறப்பாக குறித்தபடி ஆரம்பிக்கப்பட்டது.*

## பாகம் 15

*1994 –இல் இவர்கள் முதலில் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கலிருந்த சமயம்-எஸ்.எஸ். ராஜகோபால் எனும் பெரிய கல்வியாளர் இந்தப் பகுதியில் மருத்துவமனையும் மருத்துவக்கல்லூரியும் ஆரம்பியுங்கள் என்று ஆலோசனை தெரிவித்தார்.அது ஜனங்களுக்கு நல்ல சேவையாக இருக்கும் என்று தூண்டினார்.*

*சேவை என்பதில் நாட்டமிருந்தாலும்கூட கிராமப்பகுதியில் மருத்துவமனை கட்டினால் பணிபுரிய*

டாக்டர்கள் வரமாட்டார்கள் என்கிற தயக்கம் அப்போது இருந்தது. இவர்களுக்கு.

டாக்டர்களை நான் ஏற்பாடு செய்து தருகிறேன் என்று அவர் முன் வந்தார். ஆனாலும் கூட ஐயாவிற்கு அப்போது அதைச் செயல்படுத்த முடியவில்லை.

இருந்தாலும் அன்றிலிருந்தே மருத்துவச் சேவை எண்ணம் அவரது மனத்தில் ஓடிக் கொண்டிருந்தது. அதற்கான சூழ்நிலை தருணத்திற்காகக் காத்திருந்தார்.

அது இப்போது சேர்ந்து அமைந்துள்ளது.

மருத்துவமும் கல்வி போல மக்களுக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று. கிராம மக்கள் வசதியின்மை –சரியான வழிகாட்டுதலில்லாமல்

நோய்க்கான சிகிச்சை பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். கல்வியைப் போலவே இந்தப் பகுதியில் மருத்துவப் புரட்சியும் ஏற்படுத்த வேண்டும் என்று ஐயா விரும்பினார்கள்.

அதன் செயல் வடிவம் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சிறுவாச்சூர் எனும் ஊரின் அருகே இவரின் மருத்துவமனைக் கனவு நனவாகியிருக்கிறது.

தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் தற்போது 100 டாக்டர்கள் பணிபுரிகிறார்கள். இரவு –பகல் எப்போதும் சேவை, இதில் என்ன விசேஷம் என்றால் மக்களுக்கு இலவசமாகவும் மிக்க குறைந்த கட்டணத்திலும் மருத்துவ சேவை.

அரசாங்கம் இலவச மருத்துவமனையை நடத்தச் சிரமப்படும் காலத்தில் இந்த மருத்துவமனை சிறப்பாக இயங்குகிறது. இங்கே தினம் 1000 பேர்களுக்கு மேல் வந்து சிகிச்சை பெறுகிறார்கள்.

மத்திய அமைச்சர் திரு.இராசா திறந்து வைத்த இந்த மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்து போக தனலட்சுமி சீனிவாசன் நிர்வாகம் பெரம்பலூர் பஸ் ஸ்டாண்டு மற்றும் முக்கியப் பகுதிகளிலிருந்து பஸ்களை இயக்குகிறது.

அதுவும் கூட இலவசம்.

ஐயாவின் சேவைக்கு மகுடம் சூட்டுவதாக இம்மருத்துவமனை அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையை ஏழைகளுக்கு மட்டுமின்றி –வெளி நாட்டினரும் இங்கு வந்து சிகிச்சை பெறும்படி உலகத்

தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்பது ஐயாவின் லட்சியம்.

நிச்சயம் உயரும். உயர்த்துவார்.

இந்த வளாகத்தில் இவர்களின் மருத்துவக் கல்லூரியும் உருவாகிவருகிறது. 2011 – இல் இது நிறைவடைந்து திறக்கப்படும்.

மனதிருந்தால் மார்க்கமுண்டு என்பதற்கு சீனிவாசன் அவர்கள் ஒரு முன் உதாரணம். எந்தக் காரியத்திலும் முழு ஈடுபாடு கொண்டு ஜெயிக்கணும் என்கிற முனைப்போடும் தன்னம்பிக்கையோடும் விடாமுயற்சி-துணிவு – நாணயம் தவறாமை –தரம் பேணல் –சேவை மனப்பான்மை போன்றவற்றை அடிப்படையாய் வைத்து இவரும் குழுவினரும் செயல்பட்டதால்.

அந்தந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் –கஷ்டங்கள் –பிரச்சனைகளையும் எதிர்கொண்டு வெற்றி பெற முடிந்திருக்கிறது

யோசித்துப் பார்க்கும் போது மலைப்பாக இருக்கிறது. கதையிலும் சினிமாவிலும் சட்சட்டென வளர்ச்சியை வித்தை காட்டுவார்கள். இது பொய்யல்ல. நிஜம்.

சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்ட ஒரு பாமரர் இன்று 17 கல்வி நிறுவனங்களின் நிறுவனர் –தலைவர்! இங்கே 1300 ஆசிரியர்கள்! 800 இதர பணியாளர்கள்!

இந்தக் கல்வி நிறுவனம் விரைவில் பல்கலைக் கழகமாக ஆக விருக்கிறது. இன்னும் 5 ஆண்டுகளில் 50 ஆயிரம் மாணவர்களை உள்ளடக்க இருக்கிறது!

இவ்வளவு வளர்ச்சி கண்ட சீனிவாசன் கூட்டுக் குடும்பமாய் வசிக்கிறார். அதே பழைய வீடு. இவர்களுக்கென்று தனியாய் இடம் ஃப்ளாட் கிடையாது. சொகுசு –சௌகர்யம் தேடாமல் தங்கள் மூச்சு –பேச்சு –சிந்தை –செயல் எல்லாவற்றையும் மக்கள் சேவைக்காக அர்ப்பணித்திருக்கிறார்கள்.

## பாகம் 16

திரு. என். வெங்கட்ராஜீ அவர்கள் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர், 30 வருடங்களாக திரு.அ.சீனிவாசன் அவர்களுடன் நெருங்கிய நட்புடன் இருப்பவர்.

எந்த ஒரு வீட்டு –வெளி விசேஷங்களுக்கும் ஐயாவுக்கு இவர் துணை.

திரு. அ.சீனிவாசன் அவர்களின் குணநலன்கள் –சேவை பற்றி இவர் சிலாகித்து மகிழ்ந்து பல விஷயங்களை விளம்புகிறார்.

``ஐயா புறத்தூய்மை –மனத்தூய்மை மலையளவு பெற்றவர் –தன் வாரிசுகளுடன் தன் குடும்பத்தில் மைத்துனர்கள், மைத்துனிகள் அனைவரையும் ஒரே குடும்பமாய் வைத்து –

அனைவருக்கும் தானே முன்னின்று திருமணங்கள் செய்வித்து அவர்களும் சிறப்பாகப் பொருளீட்ட உதவிவருபவர்.

எந்தக் காரியமாகட்டும் சிந்தித்து –வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெற்று நேர்த்தியாக –நியாயமாகச் செய்வது இவரது பண்பாடு.

தங்கள் நிறுவனங்களில் பணிபுரிவோரிடம் அவரவர்களின் திறமை –தகுதிக்கேற்ப பொறுப்புகள் கொடுத்து –வேலை வாங்கி –அவர்களின் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்பவர்.

அரசாங்க அலுவலர்களை எளிமையாய் –முறையாய் அணுகி சேவைகள் ஜனங்களுக்கு போய் சேரும்படி பார்த்துக் கொள்கிறார்.

சொந்தச் செலவில் கோயில் கட்டியிருப்பதுடன் –சுற்றுப்பக்கக் கோயில்களுக்குப் பொருளுதவி செய்து அவற்றையும் மேம்படுத்த உதவுகிறார்.

பெரம்பலூர் அரசாங்க மேல்நிலைப்பள்ளிக்குச் சுற்றுச்சுவர்; எய்ட்ஸ் நிறுவனங்களுக்கு நிதி உதவி; தீபாவளி, பொங்கல் பண்டிகைக் காலங்களில் தன்னைக் காண வரும் ஏழை எளியவர்களுக்குப் பண – பொருள்–ஆடைகள் உதவி;

சுனாமி வந்த போது லட்சக்கணக்கில் உடனடி உதவி; இதைமட்டும் அல்லாமல் தன் ஊழியர்கள், மாணவர்களையும் சிதம்பரத்திற்கு அனுப்பிச் சேவை செய்ய வைத்தார்.

தனது புது நடுவலூர் கிராமத்தில் 75 வீடுகளுக்கு இடம் கொடுத்து, அங்குக் குடிநீர்

கிணறு வெட்டி –பைப் லைன் போட்டு விநியோகிக்கிறார். அந்த நல்ல காரியத்திற்கும் சில இடைஞ்சல் வர அவற்றையும் சமாளித்து இதிலும் வெற்றி கண்டுள்ளார்.

பெரம்பலூர் எப்போதுமே வறட்சிப் பகுதி. இங்குக் குடிநீருக்கு எப்போதுமே பிரச்சனை. பெண்கள் தண்ணீருக்காகக் குடம் குடமாய்ச் சுமப்பதைக் கண்டு –மனம் தாங்காமல் அவர்களுக்கு உதவும் பொருட்டு தங்கல் சொந்த இடத்தில் போர் குழாய் போட்டுக் கொடுத்திருக்கிறார்.

இப்போதும் அரசுப் பொது மருத்துவமனைக்கு எதிரே பொதுமக்கள் இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

இவரது சேவை –தொண்டுகளை அடுக்கி மாளாது. இவை வெறும் சாம்பிள்கள் மட்டுமே.

ஐயா சத்தியத்திற்கும் மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவர். எவரிடமும் சண்டை சச்சரவுக்குப் போவதில்லை. மனிதனை மனிதனாய் மதிப்பவர். எளிமை –கனிவான அணுகுமுறை இவரது சிறப்பு. தவறு செய்தாலும் –எதிரிகள் இருந்தாலும் பழிவாங்கும் உணர்வு கூடாது என்பார். எதிரிகளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் நம் எனர்ஜி வீணாகி வளர்ச்சி குறையும்.

இவர் எந்த அரசியலிலும் அரசிலும் தலையிடுவதில்லை, எல்லோரும் இவருக்கு வேண்டியவர்களே 1996 முதல் பெரம்பலூர்

தேர்தல் வாக்கு எண்ணும் பணி இவரது கல்லூரியில்தான் நடத்தப்படுகிறது.

ஐயா நிறைப் புத்தகங்கள் படிப்பார். புத்தகத்தை எடுத்தால் முடித்துவிட்டுத்தான் உறங்குவார். 66 வயதில் இன்னமும் கண்ணாடி அணியாமலே படிக்கும் `பவர்' உள்ளவர்.

இவரது திறமை –சாதனை –சேவைக்குக் கௌரமளிக்கும் வகையில் திருச்சி அண்ணா யுனிவர்சிடி தனது சின்டிகேட் மெம்பராக்கியுள்ளது. பல்வேறு சாதனைகள் புரிந்த இவருக்குப் புதுக்கோட்டை இலக்கிய பேரவை `வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கிக் கௌரவித்து –கௌரவம் பெற்றிருக்கிறது.

மொத்தத்தில்-

திரு.அ.சீனிவாசன் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்திற்குக் கிடைத்த அரிய முத்து – சொத்து! எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் சேவை செய்து –மக்கல் கொண்டாடும் இவரை முன்னுதாரணமாய்க் கொண்டு மேலும் பலர் உருவாக –உருவாக்கபட இவரைப் பற்றிய இந்த நூல் தூண்டுகோலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## *பாகம் 17*

பெரம்பலூர் சீனிவாசன் பொறியியல் கல்லூரியின் முதல்வர் திரு.ஜெயராமன் திரு.அ . சீனிவாசன் அவர்களைப் பற்றிப் பெருமையுடன் தெரிவிக்கிறார்.

அரசு, பொது, தனியார் எனப் பல நிறுவனங்களில் பணி ஆற்றி உள்ள எனக்கு – அங்கங்கே சந்தித்த மேல் அதிகாரிகள், இயக்குநர்கள், முதல்வர்கள் எனப் பலரின் அனுபவங்கள், செயல்கள் அனைத்தும் நன்கு அத்துப்படி.

இப்போது நான் முதல்வராகப் பணி ஆற்றும் சீனிவாசன் பொறியியல் கல்லூரி கல்வி

நிறுவனம் நிச்சயமாகப் பிற நிறுவனங்களில் இருந்து பெரிதும் வேறுபடுகிறது.

தம் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றால் அது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சி. இவர்களை மகிழ்வித்துத் தான் மகிழ்வது என்பது மிக உயர்வான பண்பு. இந்த உவகையும் எல்லையில்லா மிகிழ்வும் கொள்பவர் நமது தலைவர் ஐயா அவர்கள்.

இங்குப் படித்த மாணவர்களும் பிறகு சிறந்த பணியில் அமர்த்தப்படும் போது ஐயா பெறும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

காலத்தால் அழியாத, கள்வர்களால் களவாட முடியாத நிலையான சொத்து; அள்ள அள்ளக் குறையாத அத்தகைய அரிய கல்விச் செல்வத்தை மாணவர் சமுதாயத்திற்கு வாரி வாரி

வழங்க வேண்டும் எனபதற்காக மருத்துவம், தொழில்நுட்பம் எனப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருப்பவர்தான் நமது ஐயா அவர்கள்.

கல்வி நிறுவனங்கள் அடுத்து அடுத்து அமைத்து வளம் பெறச் செய்து மிகத் தரமான கல்வியை மாணவர்ச் சமுதாயத்திற்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் பெருமகிழ்வு கொண்டவர். கல்விக் கூடங்களை மிகச்சிறப்பாக நிர்வகித்து வரும் இவர் கல்வி நவீன மயமாவதில் அதிக ஈடுபாடு கொண்டவர். இக்கல்வி நிறுவனஙகளில் அதிநவீன ஆய்வுக்கூடங்களை அமைத்து அதன் தரத்தை உயர்த்துவது, நவீன நூலகங்களை அமைத்து அரிய பல நூல்களை இந்த நூலகத்தில் இடம் பெறச் செய்து மாணவர்கள் தங்கள் அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ளப் பெரிதும் உதவுவது எனப் பல வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றிக் கல்விக் கூடங்களில் தரத்தை மெருகூட்டியவர்.

எனவே, இக்கல்வி நிறுவனங்கள் பல தேசிய அங்கீகாரம் பெற்றுச் சிறப்பாகச் செயல்பட வித்திட்டவர் என்பது பெருமகிழ்வைத் தருகிறது. திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக் கழகத்தில் சின்டிக்கேட் உறுப்பினராக நியமித்து ஐயாவைக் கௌரவப்படுத்திப் பெருமை சேர்த்து உள்ளவர்கள்.

நவீன சமையற் கூடங்களை அமைத்து அதிகச் சுகாதாரமான உணவு வகைகளை மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் ஆரோக்கியத்தில் பெரும் ஈடுபாடும் அக்கறையும் கொள்பவர் ஐயா அவர்கள்.

மாணவர்களின் தனித்திறமைகளைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கிக்

கௌரவப்படுத்துவதில் பெருமகிழ்வு கொள்பவர்.

விவசாயத்தை இன்றும் இவ்வளவு பணிகளுக்கு இடையிலும் தொடர்ந்து சிறப்பாக நடத்தி வரும் ஐயா அவர்கள் விவசாயகளிடம் பற்றும்,பாசமும் மிக்கவர்.

விவசாயிகளின் நலனில் மிகவும் ஆர்வம் கொண்ட இவர் மிகச்சிறந்த சர்க்கரை ஆலையையும் நிறுவி, கரும்பு விவசாயிகளின் வாழ்வில் ஒளிபெறச் செய்திருக்கிறார்.

அன்பும், பண்பும், கனிவும் கொண்ட கூட்டுக் குடும்பத்தில் மிகுந்த ஈடுபாடு மிக்க பெருமை மிகு பண்பாளர்.

பெரும்பாலான கல்வி நிறுவனங்களையும், சர்க்கரை ஆலையையும்

தனது சொந்த மாவட்டத்திலேயே நிறுவி மாவட்டத்திற்கே பெருமை சேர்ப்பதில் அரும்பாடுபட்டவர்.

மாலைநேர நடைப் பயணத்தில் விருப்பம் உள்ளவர். அப்போது மாணவர்களிடம் உரையாடுவதில் அதிக விருப்பம் உள்ளவர். அவர்களின் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பார்.

ஐயா நீண்ட ஆயுள் பெற்றுச் சிறப்பாகச் சேவையைத் தொடர என் சார்பிலும் பொறியியல் கல்லூரி சார்பிலும் வாழ்த்துகள்!

தனலட்சுமி சீனிவாசன்

சர்க்கரை ஆலை திறப்புவிழா

விழாவிற்கு தனலட்சுமி சீனிவாசன் குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் திரு.அ.

சீனிவாசன் தலைமை வகித்தார். விழாவில் டி.எஸ்.குழுமச் செயலாளர் திரு.நீல்ராஜ் வரவேற்றார். இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.சுந்தரராஜன் சர்க்கரை ஆலையையும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் திரு.நுபுர்மித்ரா சர்க்கரை உற்பத்தி நிலையத்தையும், ஆலையின் மின் உற்பத்தி நிலையத்தை மத்திய மாற்றத்தக்கவல்ல எரிசக்தி நிறுவனத்தின் (இரிடா) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.தெபாஷிஷ் மஜீம்தர் திறந்து வைத்தனர்.

விழாவில் இந்தியன் வங்கித் தலைவர் திரு.சுந்தரராஜன் ``இந்த சர்க்கரை ஆலை மிகக்குறைந்த காலத்தில் அதாவது ஓர் ஆண்டு 4 மாதங்களுக்குள் கட்டிமுடிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் தமிழ்நாடு வேகமாகப் பொருளாதார

வளர்ச்சி கண்டுவருகிறது. நமது நாட்டின் பொருளாதாரம் வளர இதுபோன்ற ஆலைகள் பெரிதும் துணை புரியும். இங்குள்ள 3 வங்கிகள் விவசாயிகளுக்கும், தொழில் முனைவோருக்கும் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கத் தயாராக உள்ளன. வேளாண் பெருமக்கள் வங்கிக் கிளைகளுக்குச் சென்று பல்வேறு கடன் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. 2015 -2020 –க்குள் இந்தியா வல்லரசாக மாறும், அதற்குத் திறன்மிக்கவர்கள் தேவை. அந்தத் திறனைக் கல்வியால் மட்டுமே கொடுக்கமுடியும், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்விக்குழுமம் 30 ஆயிரம் பேருக்குக் கல்வி அளித்துவருகிறது. இவர்களது கல்விப் பணி தொடர்ந்திட வேண்டும். பாராட்டுக்குரிய

இந்நிறுவனம் பல்வேறு சாதனைகளைப் புரிந்திட வேண்டும்’’ என்று பேசினார்.

விழாவில் தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தலைவர்

திரு.அ.சீனிவாசன் தொடக்க உரை

விழாவில் தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தலைவர் திரு.அ.சீனிவாசன் தொடக்க உரையில்.... ``எங்களது சர்க்கரை ஆலையைத் தொடங்க அனுமதி வழங்கிய முதல் அமைச்சர் கலைஞர் மற்றும் இந்த ஆலைக்குப் பரிந்துரை செய்த மத்தியத் தகவல் மற்றும் தொலைத் தொடர்புத்துறை மந்திரி திரு.இராசா, தமிழக மின்துறை அமைச்சர் திரு.ஆற்காடு வீராசாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பகுதி விவசாயிகள் புதிய தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்து கரும்பினை அதிகம் பயிர் செய்யவும்,அதன் மூலம் அதிக மகசூல் பெறவும் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

மேலும், ``சர்க்கரை ஆலையில் பணியாற்றும் அனைவருக்கும் அவர்களது ஒருமாதச் சம்பளம் போனஸாக வழங்கப்படும்'' என்று அவர் பேசினார்.

விழாவில் அரியலூர் மாவட்டக் கலெக்டர் திரு.ஆப்ரகாம் திருச்சி சரக போலீஸ் டி.ஐ.ஜி. திரு.ராமசுப்ரமணி, பேங்க் ஆஃப் இந்தியா உயர் அலுவலர் திரு. தயால், வட்டாரத் தலைவர் திரு கே.எஸ்.ராஜன், பெரம்பலூர் போலீஸ் சூப்பிரண்டு திருமிகு. வனிதா, தந்தை ரோவர் கல்விக்குழுமத் தலைவர் ரோவர்

திரு.வரதராஜன், கரும்பு விவசாயிகள் சங்கப் பொறுப்பாளர் திரு.செல்லதுரை உள்பட பலர் வாழ்த்திப் பேசினார்கள்.

விழாவில் சர்க்கரை ஆலையின் செயல் இயக்குநர் திரு.எஸ். சீனிவாசனுக்கு, அஒ பவுன் தங்கச்சங்கிலி ,ரூ3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் காசோலையும், மின்சார உற்பத்தி மேலாளர் திரு.ஜெயக்குமார் அவர்களுக்கு 5 பவுன் தங்கச்சங்கிலி, ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் காசோலையும்,ஆலை மேலாளர் திரு.பழனிவேல் ராஜனுக்கு 5 பவுன் தங்கச்சங்கிலி , ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் காசோலையும், எலட்ரிக்கல் மேலாளர் திரு.சரவணனுக்கு 5 பவுன் தங்கச்சங்கிலி, ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் காசோலையும், ஆலைக் கட்டுமான நிறுவனமான சி.சி.எல். மேலாளர் திரு

அறிவழகனுக்கு 5 பவுன் தங்கச்சங்கிலி, 50 ஆயிரம் ரூபாய் காசோலையும் வழங்கப்பட்டது.

தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலையின் நவீன் தொழில்நுட்ப முறையில் ஒரு நாளைக்கு 3500 டன் கரும்பு அரவை செய்யப்படும். அத்துடன் 60 கிலோ லிட்டர் டிஸ்டிலரீஸ், ஒரு மணி நேரத்திற்கு 23 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளது.

இந்த ஆலையின் மூலம் 500 பேர் நேரடியாகவும், 2000 பேர் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். இந்த ஆலையில் தினமும் 3 சிப்ட் முறையில் ஒரு நாளைக்கு 3500 முதல் 4000 மூட்டைகள் வரை சர்க்கரை உற்பத்தி செய்யப்படும்.

ஆலையின் மின்சாரச் செலவைக் குறைப்பதற்காகவும் சர்க்கரை உற்பத்தியைப்

பெருக்குவதற்காகவும் நான்கு அதிநவீன 2 ரோலர் மில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் 1 கோடி ரூபாய் மதிப்பிலான டர்பைன் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக சல்பர் அமிலம் பயன்படுத்தாமல் ரீபைண்ட் சர்க்கரை உற்பத்தி செய்ய சுமார் 30 கோடி செலவில் நவீன இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலையின் சக்கைகளைப் பயன்படுத்தி ஒரு மணிநேரத்திற்கு 23000 யூனிட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு அதிலிருந்து 6.5 மெகாவாட் ஆலையின் தேவைக்காகவும் மீதமுள்ள 16.5 மெகாவாட் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் விற்கப்பட உள்ளது.

மொலாசஸ் எனப்படும் பை ப்ராடக்ட்டைக் கொண்டு நாள் ஒன்றுக்கு 60 ஆயிரம் லிட்டர் வீதம் எத்தனால் மற்றும் ஸ்பிரிட் உற்பத்தி செய்யப்பட உள்ளது.

இது வரை சுமார் 19 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு 2009 ஆம ஆண்டில் மட்டும் சுமார் ரூ.50 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2009-ஆம் ஆண்டில் சுமார் 1528 ஏக்கர் பரப்பளவில் சொட்டுநீர் பாசனம் செய்யப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் சொட்டுநீர்ப் பாசனம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு 253 விவசாயிகளுக்கு ஒரு

எக்டேருக்கு நாற்பதாயிரம் வீதம் மானியம் பெற்றுத்தரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 693 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இத்திட்டத்தின் கீழ் சுமார் 500 விவசாயிகள் பயண்டைவார்கள். சுமார் 1250 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படும்.

கரும்பு விவசாயிகள் மத்தியில் நல் உறவை மேம்படுத்த 10 கரும்பு மண்டல அலுவலகமும் 50 செக்சன் அலுவலகமும் தொடங்கப்பட்டு அதில் 60 கரும்பு விரிவாக்க அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இதுவரை விவசாயிகளுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, பேங்க ஆஃப் இந்தியா போன்ற அனைத்து வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம்

பயிர்க்கடனாக சுமார் பத்துக் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கரும்புப் பயிரினை இடைக்கணுப்புழுத் தாக்குதலிலிருந்து காக்க ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கரும்பு அறுவடை செய்ய சுமார் ரூ.4 கோடி செலவில் இரண்டு அறுவடை இயந்திரங்கள் வாங்கப்பட்டு உள்ளது.

இதுவரை கரும்பு அதிகாரிகள், கரும்பு ஆய்வாளர்கள் மற்றும் அந்தந்தக் கிராமத் தலைவர்களைக் கொண்டு 221 கிராமக் கூட்டங்கள் நடத்தப்பட்டு விவசாயிகளின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து அவர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

பெரம்பலூரில் ரூ.2 கோடி மதிப்பில்

தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை

தனலட்சுமி சீனிவாசன் கல்விக்குழுமத்தின் சார்பில் சர்வதேசத்தரத்தில் அமையும் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரியின் முன்னோட்டமாக ரூ.2 கோடி செலவில் மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. இதனை மத்திய மந்திரி திரு.இராசா திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றியதாவது; ``பொதுவாழ்விலும், வர்த்தகத்திலும் செல்வம் ஈட்டுவது பண்பாடு, திருவள்ளுவர் கூறியதுபோல அறவழியில் வரும் பொருள் இன்பம் தரும். தலைமுறைக்கு அறம் தரும் கல்விப்பணியை இந்நிறுவனத்தலைவர் திரு.அ.சீனிவாசன் மேற்கொண்டுள்ளார். அவரது கடின உழப்பினால் இந்நிறுவனம் மாபெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. அறிஞர் அண்ணா

கூறியதுபோல மழை வரவேண்டும் என்பது பொதுநலம். அதில் நாம் நனையாமல் இருக்கக் குடைபிடிப்பது சுயநலம். அதுபோல இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் பொதுநலத்துடன் இணைந்த சுயநலமும் உள்ளது.

பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சிக்கு எனது முயற்சி காரணம் என்று இங்கே கூறினார்கள். இந்தச் சாதனைகளுக்கெல்லாம் காரணமானவர் கலைஞர். நான் கருவி மட்டுமே. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது போல எல்லாப் புகழும் கலைஞருக்கே என்று கூறுகிறேன். இங்கு மருத்துவக்கல்லூரி அமைய உள்ளதை அறியும்போது இவர்களுக்கு நிகராகப் போட்டியிட அரசு மருத்துவக்கல்லூரி உடனே தொடங்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றுகிறது.''

விழாவிற்கு தனலட்சுமி சீனிவாசன் கல்விக்குழுமத் தலைவர் திரு.அ.சீனிவாசன் தலைமை வகித்துப் பேசியதாவது;``எங்களது இந்த மருத்துவமனையில் 16 படுக்கை வசதிகள் உள்ளது. புறநோயாளிகள் பிரிவு தினமும் காலை 8.30 மணி முதல் மதியம் 1 மணி வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் இயங்கும் 24 மணிநேரமும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படும். பெரம்பலூர் புதிய பஸ்நிலையம் மற்றும் பழைய பஸ்நிலையத்தில் இருந்து மருத்துவமனைக்கு அடிக்கடி இலவச பஸ்கள் இயக்கப்படும். கிராம மக்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பெரம்பலூர் மாபெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் வளர்ச்சியைப் பலர் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். இதற்கு மத்திய

மந்திரி திரு.இராசா முயற்சியே முக்கியக் காரணம் ஆகும்.''

விழாவில் எம்.எல்.ஏ.,க்கள் திரு.ராஜ்குமார், ஆண்டிமடம் திரு.சிவசங்கர், தந்தை ரோவர் கல்விக்குழுமத் தலைவர் திரு.வரதராஜன், முன்னாள் ஒன்றிய சேர்மன திரு.அட்சயகோபால் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்விக்குழுமச் செயலாளர் மகன்

டாக்டர் வினோத் –டாக்டர் சரண்யா திருமணம்.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் திரு.அ.சீனிவாசனின் பேரனும், செயலாளர்

திரு.நீல்ராஜ் –திருமதி . ஜெயந்தி மகனுமான டாக்டர் என்.வினோத் மற்றும் சென்னை பி.எம்.மருத்துவமனை இயக்குநர்கள் டாக்டர் வி.தியாகராஜன் –டாக்டர் வசுந்தரா, இவர்களது மகள் டாக்டர் டி.சரண்யா திருமணம் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவன வளாகத்தில் 17.02.2010 அன்று காலை நடைபெற்றது.

திருமணத்திற்கு முந்தை தினத்தன்று பெண் அழைப்பும், வரவேற்பு நிகழ்ச்சியும் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவன வளாகத்தில் நடந்து. இதனை முன்னிட்டு திரு. கங்கை அமரன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பெரம்பலூர் சினிமாத் தயாரிப்பாளர் திரு.பிரபுவெங்கட் உள்படப் பல கலைஞர்கள் கலந்து கொண்டனர். மேலும்,

பெரம்பலூர் கலெக்டர் திரு.மா.விஜயகுமார் ஒரு இந்திப் பாடலைப் பாடினார்.

``மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு.அ.இராசா கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

திருமண விழா மற்றும் வரவேற்பு விழாவில் தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என் நேரு மாவட்ட கலெக்டர்கள் திரு.விஜயகுமார் (பெரம்பலூர்), திரு.சவுண்டையா (திருச்சி), திரு.சுடலைக்கண்ணன் (ஈரோடு), போலீஸ் சூப்பிரண்டுகள் திருமிகு. வனிதா, திரு.பிரேம் ஆனந்த சின்கா, திரு.நஜ்மல்கோடா (அரியலூர்), திரு.கலியமூர்த்தி (திருச்சி), திருச்சி தொழில் அதிபர் திரு.ராமஜெயம், எம்.எல்.ஏல்க்கள்

திரு.ராஜ்குமார் (பெரம்பலூர்), திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் (ஆண்டிமடம்), அரியலூர் பாளை திரு.அமரமூர்த்தி, திரு,அன்பில் பெரியசாமி, வரகூர் திரு.சந்திரகாசி, திருச்சி மாநகர கமிஷனர், மாவட்ட வருவாய் அதிகாரிகள் திரு.பழனிசாமி, திரு.சங்கர், முன்னாள் எம்.எல்.ஏ. திரு.துரைசாமி, தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலைச் செயல் இயக்குநர் திரு.எஸ்.சீனிவாசன்,அரசு மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் திரு.பாலசுப்ரமணியன், தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை டீன் டாக்டர் திரு.ரெங்கநாதன் பன்னாரி சர்க்கரை ஆலைத் தலைவர் திரு.பாலசுப்ரமணியன், முன்னாள் அமைச்சர் திரு.கு.ப.கிருஷ்ணன், பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் திரு.எம்.என். ராஜா, துணைத்தலைவர் ஓவியர் திரு.முகுந்தன், சென்னைத் தொழில் அதிபர்கள் திரு.பாரி,

திரு.சாதிக்பாட்சா, பெரம்பலூர் திரு.கர்ணம் சுப்ரமணியம், ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு.வரதராஜன், துணைத்தலைவர் திரு.ஜான் அசோக் வரதராஜன், சாரதா கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு.சிவசுப்ரமணியன், சிவகாமம் மோட்டார்ஸ் அதிபர் மற்றும் பனிமலர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு.கலியபெருமாள், கிறிஸ்டியன் கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு.கிறிஸ்டோபர்,

மற்றும் மருத்துவத்துறையினர், அரசு உயர் அலுவலர்கள், தனியார் நிறுவன அலுவலர்கள், அரிமா, ரோட்டரி மற்றும் லியோ சங்க நிர்வாகிகள், பஸ் அதிபர்கள்,பெரம்பலூர், திருச்சி, சென்னை மற்றும் பல்வேறு நகரங்களில் இருந்து வர்த்தகப் பிரமுகர்கள் நிரளாகக் கலந்து கொண்டனர்.

பத்மஸ்ரீ விருதுபெற்ற சாக்சபோன் கலைஞர் திரு. கத்ரி கோபால்நாத் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

திருமண விழாவையொட்டி பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவன வளாகத்தில் தோரண வாயில்கள் டிஜிட்டல் பேனர்கள் வைக்கப்பட்டதோடு கல்லூரி வளாகம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலமாகக் காட்சி அளித்தது. திருமண விழாவிற்கு வந்திருந்த பெண்களுக்கு வளையல்கள் அணிவிக்கப்பட்டு, நாட்நாட்செவன் கலர்லேப் சார்பில் இலவசமாக போட்டோக்கள் எடுத்து உடனுக்குடன் வினியோகிக்கப்பட்டது. பெரம்பலூரில் பிரம்மாண்டமான அளவில் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

**திரு.மு. அட்சயகோபால் (முன்னாள் ஒன்றிய சேர்மன்)**

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு.அ.சீனிவாசன் அவர்களைப் பற்றி தாங்கள் எழுதும் புத்தகம் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

திரு.அ.சீனிவாசன் அவர்கள் தன்னுடைய கடின உழைப்பாலும், தளராத தன்னம்பிக்கையாலும், மிகப் பெரிய சாதனை செய்து வெற்றி கண்டுள்ளார்.

கடந்த 40 ஆண்டுகளாக, திரு.அ.சீனிவாசன் அவர்களை உற்று நோக்கியும்,

அவருடன் பழகியும் வந்திருக்கிறேன். அவருடைய எளிமையும், பாசத்துடன் பழகும் பாங்கும், என்னை மிகவும் கவர்ந்தது.

தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்கள், நவீன் சர்க்கரை ஆலை, மருத்துவமனை என்று பெரம்பலூரில் பலரும் வியக்கும் வண்ணம், பல அரும்பெரும் சாதனைகளை ஆண்டுதோறும் நிகழ்த்திக் கொண்டே வருகிறார்.

திரு.அ.சீனிவாசன் அவர்களுடைய சாதனைகள் மென்மேலும் தொடர, என் இனிய நல்வாழ்த்துகள் உரித்தாக்குகிறேன்.

**திரு. மு. இராஜாராம், (அரிமா சாசனத் தலைவர்)**

அன்புகெழுமிய நண்பர் திரு. மோகன்தாஸ் அவர்களுக்கு, வணக்கம்! சிகரம் தொட்ட சாதனையாளர் திரு. அ. சீனிவாசன் அவர்களைப் பற்றித் தாங்கள் புத்தகம் எழுதுவது குறித்து மகிழ்ச்சி.

பெரம்பலூரில் எத்தனையோ மனிதர்கள், பெரியவர்கள் தோன்றி, மறைந்து இருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லும்படியாக பெரிய சாதனைகள் எதையும், எவரும் செய்த வரலாறு இல்லை. அரசியலில், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அ. இராசா அவர்கள் பெரம்பலூருக்கு மகத்தான பல செயற்கரிய சாதனைகளைச் செய்துள்ளது மறுக்க முடியாது.

அதேசமயம் தனிப்பட்ட முறையில், தனது திட்டமிடலாலும், அயராத கடும் உழைப்பினாலும், பெரம்பலூருக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கித் தந்த முதல் மனிதர் திரு.அ.சீனிவாசன் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. அதனால், பெரம்பலூருக்கு பெருமை சேர்த்துத் தந்தார் என்பதும் உண்மையிலும் உண்மை. உழைப்பால் உயர நினைப்பவர்கள், இவரைத்தான் முன் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை வாழ்க்கையில் இவர் உணர்ந்த காரணத்தால், தமிழகத்தின் தலைசிறந்த மாபெரும் கல்வி நிறுவனங்களைப் போகிற போக்கில், சர்வ சாதாரணமாக நிறுவி, இமாலயச் சாதனையை பத்தே வருடங்களில் நிகழ்த்திக் காட்டியுள்ளார். சாதனைகளை அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை.

தனலட்சுமி சீனிவாசன் சுகர்ஸ் என்ற சர்க்கரை ஆலையும், அதே பெயரில் பிரம்மாண்டமான மருத்துவமனையும் பெரம்பலூர் பகுதியில் நிறுவிப் பிறப்படுத்தப்பட்ட இப்பகுதி ஏழை மக்கள் பொருளாதார முன்னேற்றம், வேலைவாய்ப்பு, மற்றும் சுகாதார நல்வாழ்வு போன்றவற்றுக்கு அடித்தளம் ஏற்படுத்தி உள்ளார். இன்னும் அவரால் பெரம்பலூர்ப் பகுதி மக்கள் பல நன்மைகளை அடையப்போவது உறுதி.

சமீப காலங்களில், அளவற்ற அவரது வள்ளல் தன்மையையும் பார்க்கிறேன். அவரது எளிமை, அனைவரையும் அனுசரிக்கும் பாங்கு, அவரை இன்னும் உச்சத்தில் கொண்டு சேர்க்கும் என்பது திண்ணம். தனி மனிதனாகத் தன் உழைப்பால், சிகரம் தொட்ட இச்சாதனையாளர் மேலும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து

பலரின் உயர்வுக்கும் வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என இதயப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

அவரது சாதனைகளின் நிரந்தர அடையாளமாகத் திகழும் அவரது குடும்ப உறுப்பினர்கள் திரு.நீல்ராஜ், திரு.கதிரவன், திரு,ராஜபூபதி, திரு.மணி, ஆகியோரையும் இதன் மூலம் மிகவும் பாராட்டுகிறேன்.

**டாக்டர் ஜி.கண்ணுசாமி**

பெரம்பலூரில் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தி கல்வித் தந்தையாகத் திகழும் தனலட்சுமி சீனிவாசன் கல்விக்குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் திரு.அ.சீனிவாசன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எனது அன்பு நண்பரும், எழுத்தாளருமான திரு.என்.சி.மோகன்தாஸ் எழுதி மணிமேகலைப் பிரசுரம் வாயிலாக வெளிவருவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தனலட்சுமி சீனிவாசன் நிறுவனர் உழைப்பால் உயர்ந்தவர். கல்வி நிறுவனங்களை ஆரம்பித்த பிறகு பெரம்பலூர் மாவட்டத்தில் உயர் கல்வி கற்காதோர் இல்லாத இல்லங்கள் இல்லை எனலாம். வேலை இல்லாத நிலையை

மாற்றி எல்லோருக்கும் வேலை கிடைத்திட வித்திட்டவர் திரு.அ.சீனிவாசன்.

மாபெரும் அளவில் உலகளாவிய தொலைநோக்குச் சிந்தனைகளுடன் பெரம்பலூர்ப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் மேலிட திரு.அ.சீனிவாசன் ஆற்றிவரும், தனிமனித மற்றும் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் அளவிடற்கரியவை.

நற்பணிகளுக்கு நன்கொடைகளை வாரி வழங்கும் சீர்மிகு கொடையாளர் இவர். இப்பகுதியில் யாரைக்கேட்டாலும் ஏதாவது ஒருவகையில் தனலட்சுமி சீனிவாசன் குழுமங்களுடன் தொடர்பு கொண்டவராக இந்நிற்வனம் பெயர்பெற்று, திருச்சி, சென்னை நகரங்களில் தமது கிளைகளைப் பரப்பி வந்துள்ளது.

விவசாயிகள் மேம்பாட்டிற்குச் சர்க்கரை ஆலை, சிறுசேமிப்பிற்கு சிட்பாண்ட்ஸ், கட்டடங்கள் உருவாவதற்கு உதவிடும் காண்கிரீட் பிளாண்ட் ஆகியவை இந்நிறுவனத்தின் சாதனைப் பயணத்தில் கூடுதல் மைல்கற்களாகும். எளியவர்களுக்கு ஆரோக்கியம் அளிக்கும் பன்னாட்டுத் தரத்தில் உருவாகிவரும் மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி ஒருங்கிணைந்த வளாகம், நட்சத்திர விடுதி எனப் பெரம்பலூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அற்புதப் பங்காற்றி வரும் `தனலட்சுமி' சீனிவாசன் அவர்களின் குடும்பம் நமது பண்பாடு, நாகரிகத்தைக் கட்டிக்காக்கும் கூட்டுக் குடும்பமாகத் திகழ்ந்து தனிக்குடித்தனத்தையே அதிகம் விரும்பும் நாகரிக உலகில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சீரிய நற்கனவுகளை நனவாக்கி வீறு நடைபோடும் கல்வி நிறுவனங்களைத் தந்து தரமாக வாழ்ந்து வரும் திரு.அ.சீனிவாசன் பல்லாண்டுகள் வாழ்ந்து பெரம்பலூர் மாவட்டத்திற்கும், இந்திய மண்ணிற்கும் மேலும் பல பெருமைகளைத் தேடித்தந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

## டாக்டர் ஆர்.பால்ராஜ் (நிரஞ்சன் மருத்துவமனை)

சாதனைக்கும், நட்புக்கும் பரோபகாரத்திற்கும் பெயர் பெற்றுள்ள பெரியவர் திரு.அ.சீனிவாசன் அவர்கள் பற்றிய நூல், எழுத்தாள நண்பர் திரு.என்.சி மோகன்தாஸ் கைவண்ணத்தில் வெளிவருவது குறித்து மிக்க மகிழ்ச்சி.

திரு.அ.சீனிவாசன் அவர்களுடன் எனக்கு நீண்டகாலப் பழக்கம், நட்பு உண்டு. பெரம்பலூரின் மேன்மைக்குப் பெரிதும் உதவியிருக்கிற தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தின் புதிய மருத்துவமனை ஆக்கத்திற்கு ஆலோசனைகள் வழங்க முடிந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.அ.சீனிவாசனின் அனுபவம் – உழைப்பு-விடாமுயற்சி-பெருந்தன்மை – மனிதாபிமானம் போன்ற அருங்குணங்கள் இளைஞர்களுக்கு நிச்சயம் வழிகாட்டியாக, ஊக்கமாய் அமையும் என்பது உறுதி, இப்புத்தகமும், திரு.அ.சீனிவாசன் அவர்களின் சாதனைகளும் தொடர வாழ்த்துகிறேன்.

**திரு.ஏ.எம்.சாதிக் பாட்சா**

**நிர்வாக இயக்குநர், கீரின் ஹவுஸ் புரொமோட்டர்ஸ், சென்னை;**

தனலட்சுமி சீனிவாசன் குழும நிறுவனங்களின் தலைவர் திரு.மிகு அ.சீனிவாசன் அவர்களின் தொண்டுள்ளம், சாதனைகள் மற்றும் நற்பெருமைகள் ஆகியவற்றை வெளிக் கொணர்ந்து இருக்கும் இம்மலரில் எனக்கும் வாழ்த்துரை வழங்கக் கிடைத்த வாய்ப்பை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன்.

எனக்கு தனலட்சுமி கல்வி நிறுவனங்களின் தலைவர் பெரியவர் திருமிகு.அ.சீனிவாசன் ஐயா அவர்களுக்கும் நீண்ட நாள் பழக்கம் உண்டு. நான் வீட்டுமனைகளாக விற்பதற்கு இருந்த இடத்தை அவர் நடத்திக் கொண்டிருக்கும் கல்லூரிக்குத்

தேவைப்பட்டதால் வாங்கிய விலைக்கு அவருக்குக் கொடுத்தோம். இந்த மிகச் சிறிய உதவியை அவர் சந்தித்த பெரியோர்களிடம் பல முறை எடுத்துக் கூறி எங்களைப் பெருமைப்படுத்தியுள்ளார். இன்று வரை அந்த நற்செயலை மறவாமல் பல மடங்குகளாக எங்களை கவுரவப்படுத்தி வருகிறார்.

நான் அவரிடம் ஒருமுறை சென்னையில் கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்கக் கூறியபோது அதன் லாப நோக்கை மனதில் கொள்ளாமல், நம்பெரம்பலூர் மாவட்ட முன்னேற்றமே, என் நோக்கம் என்று கூறி அனைத்துக் கல்வி நிறுவனங்கள், சர்க்கரை ஆலை மற்றும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றை நமது மாவட்ட்த்திலேயே ஆரம்பித்து ஆயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பும் லட்சக்கணக்கான மாணவ மாணவிகளுக்கு கல்வி அறிவூட்டியும்

நமது மாவட்ட முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகின்றார்.

கல்வி வளம் பெருகக் கல்விச் சாலைகளையும், உடல் நலம் பேணும் மருத்துவக் கல்லூரியையும், தொழில் வளம் பெருகச் சர்க்கரை ஆலையையும் உருவாக்கிப் பெரம்பலூர் மக்கள் பயனடையும் வகையில் சேவைகள் பல செய்து வரும் பெரியவர் சீனிவாசன் அவர்கள் உள்ளூரில் பழுத்த மரம், ஊரணியில் நிறைந்த நீர், பார் போற்றும் வள்ளல், பாமரரின் தோழர், இவரும் இவரின் குடும்பத்தின் உறுப்பினர்களும் உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞான பெற்று வாழ வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்தி மனம் மகிழும் என்றும் உங்கள் நண்பன்தான் இந்த சாதிக் பாட்ஷா என்று அறிவிப்பதில் பெருமையடைகிறேன்.

இவருடைய அயராத உழைப்பினால் இன்று பெரம்பலூர் மாவட்டத்திற்கே இவர் உருவாக்கிய கல்வி மற்றும் தொழில் நிறுவனங்கள் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றன. இவருடைய இந்த அரிய தொண்டு மென்மேலும் வளர்ந்து பெரம்பலூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மேலும் துணைபுரிய எல்லாம் வல்ல இறைவன் துணை இருக்க வேண்டுகிறேன்.

## இலக்கியவீதி இனியவன்;

திரு.என்.சி.மோகன்தாசுக்கு அறிமுகம் தேவையில்லை. நாடறிந்த எழுத்தாளர். அலுவல் நிமித்தம் அயலகம் பறந்தாலும் பத்திரிகைத் தொடர்பில் பற்றுள்ளவர். `இலக்கிய வீதி'யின் யோசனையை ஏற்று `குவைத்'தில் உள்ள முன்னோடி இந்தியர்களைப் பற்றித் தமிழிலும், ஆங்கிலத்திலும்

எழுதியவர்; எழுதுபவர், `Frontliners' மூலம்

உலகப் புகழ் பெற்றிருப்பவர். `எழுத்து'வழி வரும் ஊதியம் முழுவதையும் ஏழைகளுக்கு வழங்குவதையே வாழ்வின் கடமையாகக் கொண்டிருப்பவர்.

நல்லவர்களையே நாளும் தேடுபவர். நாட்டுக்கு உதவுகிறவர்களை உலகுக்கு அடையாளம் காட்டுவதையே இலட்சியமாய்க்

கொண்டிருப்பவர். அந்த வகையில் பெரம்பலூர்ப்பகுதியில் உலா வரும் ஓர் உன்னத மனிதரின் `தரிசன'த்திற்கு இப்போது வழிவகுத்திருக்கிறார்.

`கல்வி', `மருத்துவம்' ,`தொழில்' என ஏராளமான துறைகளில் தொண்டுகள் செய்து துலங்குகிற பெருந்தகை திரு.அ.சீனிவாசன் அவர்கள் ஓர் ஒப்பற்ற மாமனிதர். `தனலட்சுமி சீனிவாசன்' குழும் நிறுவனங்கள் மூலம், அவர் செய்து வரும் சேவைகள் அளப்பரியவை. அந்த மனிதநேய மாண்பாளரைப் பற்றிய வாழ்வியல் நூல் தமிழ்கூறும் நல்லுலகுக்கு ஒரு வரம் என்றால் மிகையல்ல. இதைத் திறம்படப் படைத்திருக்கிற எழுத்தாளர் திரு.என்.சி.மோகன் தாசை இதயப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

அவரது சாதனைகளின் நிரந்தர அடையாளாமாகத் திகழும் அவரது குடும்ப உறுப்பினர்கள் திரு.நீல்ராஜ், திரு.கதிரவன், திரு,ராஜபூபதி, திரு.மணி, ஆகியோரையும் இதன் மூலம் மிகவும் பாராட்டுகிறேன்.

## திரு.சி.பிரசன்னம் –திரு.ஜெயக்குமார்;

எந்த ஒரு விஷயத்தையும் பார்ப்பது, கேட்பது,கேள்விப்படுவது என்பதற்கும் அப்பால் எழுத்தில் படைக்கப்படும் போது அதற்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்படுவது இயல்பு. அது `மீடியா' பவர்.

தனலட்சுமி சீனிவாசன் குழுமத் தலைவரும் நிறுவனருமான திரு.அ.சீனிவாசன் அவர்கள் பற்றிப் பல விஷயங்களும் கேள்விப்பட்டு பிரமித்திருக்கிறோம். எங்கள் ஊர் நம்புகுறிச்சியுடன் அவருக்குள்ள தொடர்புபற்றி அவர் தெரிவித்ததாக எங்கள் தம்பி மோகன் தாஸ் மூலம் அறிந்து மகிழ்ச்சிடைந்திருக்கிறோம்.

எந்த ஒரு காரியத்தில் இறங்குவதென்றாலும் –எடுத்தோம் கவிழ்த்தோம் என்று அவர் செயல்படுவதில்லை. ஒன்றில் இறங்கும் முன்பு –அதற்கு ஏற்ற நபர்களைக் கொண்டு தீர விசாரிக்கிறார். ஒரு முயற்சி அல்லது தொழில் தொடங்குகிறார். என்றால் –அதன் லாப நஷ்டங்களைப் பற்றி மட்டுமே யோசிக்காமல்-

அதனால் அந்தப் பகுதியில் எவ்வளவு பேர்கள் பலனடைவார்கள், எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தர இயலும் – எத்தனை குடும்பங்கள் முன்னேறும் என்று சிந்திப்பது இவரது சிறப்பு. இந்த ப்ரோபகாரச் சிந்தனை அரிதான ஒன்று.

எங்களுக்குத் தெரியாது – வேலையில்லாமல் கஷ்டப்படும் பலருக்கு அவர்களின் தகுதிக்கேற்ப வேலை

கொடுத்திருக்கிறார். வசதியில்லா மாணவர்களுக்குக் கட்டணச் சலுகைகளும் வழங்கி வருகிறார்.

எதையும் எதிர்பார்க்காமல் –சாதி –மத அரசியலுக்கு அப்பாற்பட்டு சுற்றுப்புறப் பகுதிகளுக்கு இவர் செய்து வரும் சேவை போற்றதலுக்குரியது.

நாளிதழுக்கு ஆயுசு ஒரு நாள்; வார இதழுக்கு ஒரு வாரம், மாத இதழுக்கு ஒரு மாதம் மட்டுமே –ஆனால் புத்தகத்திற்கு நீண்ட ஆயிள் என்பார்கள்.

ஒரு மாபெரும் மனிதரின் வளர்ச்சிப் பாதையை எங்கள் தம்பி –எழுத்தாளர் என்.சி.மோகன் தாஸ் புத்தகமாக்குவது எங்களுக்கும் பெருமை சேர்க்கும் விஷயம்.

சிலருக்கு எவ்வளவு சம்பாதித்தாலும் இன்னும், இன்னும் வேணும் என்கிற ஆசை அடங்காது, இவருக்கோ –எவ்வளவு வாரி வழங்கினாலும், எவ்வளவோ உதவிகள் செய்தாலும், இன்னும்...இன்னும் செய்யணும் என்கிற அடங்காத பேரராசை! இவரும்-இவரது பேராசையும் நீடுழி வாழ வாழ்த்துகிறோம்!

**பாடலூர் திரு.எஸ். மதியழகன், (மாவட்டக் கவுன்சிலர்)**

இந்திய வரைபடத்தில் கூட யாரும் திரும்பிப் பார்க்காமல் இருந்த பெரம்பலூரை, பெரம்பலூர் மாவட்டத்தை இந்தியாகவே திரும்பிப் பார்க்க வைத்தவர் திரு.அ.சீனிவாசன் அவர்கள்.

மிகச் சிறந்த கிராமத்தில் பிறந்து, நல்ல உணவு, நல்ல உடை , கல்வி இதற்குக்கூட வசதியில்லாமல் வளர்ந்த ஒருவர், இன்று அருகில் உள்ள மாவட்டங்களில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களாக இருந்தாலும், வியாபார நிறுவனங்களாக இருந்தாலும்,ஏன் வங்கிக் கிளைகளாக இருந்தாலும் கூட அதைத் துவக்கி வைக்க அவர்தான் வரவேண்டும் என்பது அனைவரின் முதல் விருப்பம்.

திரு.அ.சீனிவாசன் அவர்கள் நினைத்திருந்தால் பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூரில் துவக்கிய கல்வி நிறுவனங்களை, சர்க்கரை ஆலையை, மருத்துவமனியை வேறெந்த நகரத்திலாவது ஆரம்பித்துக் கோடிகளைக் குவித்திருக்கலாம். ஆனால் தனக்குக் கிடைக்காத குறைந்த செலவில் தரமான கல்வி, மருத்துவ வசதி, வேலை வாய்ப்பு போன்றவை தன் பகுதி மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு செயல்படுகின்றார்.

கடந்த இருபது ஆண்டுகளாக அவரின் ஒய்வில்லா உழைப்பு, கடினமுயற்சி, இவைதான் இத்துணை உயர்விற்கும் காரணம் என்று சொன்னால் அதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரி மனிதர்.

அவருடைய எளிமையும், பணிவும் பல பெரியவர்களிடம் பார்க்க முடியாதவை. நேர்மையிலும், துணிவிலும், எளிமையிலும், திறமையிலும், பெருந்தலைவர் காமராஜரைச் சிறந்தவர் என்று சொல்வார்கள்.அவரைப் பார்த்துப் பழகும் வாய்ப்பும் வயதும் எனக்கில்லை.ஆனால் இந்தப் பெரம்பலூர் மாவட்டத்துக் காமராஜரை பார்த்துப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது என்பதே எனக்குப் பெருமை, மகிழ்ச்சி எல்லாமே!

**திரு.ஆர்.ஆர்.ரவி (ஹோட்டல் வசந்தம் குழுமம்)**

திக்கெட்டும் திகழட்டும் புகழோடு சிறக்கட்டும்

தனலட்சுமி சீனிவாசன் திருநாமப் பெயரோடு!

உழைப்பிலே நீராடி

வாழ்க்கையில் போராடி

முயற்சியில் விளையாடி

வளர்ச்சியில் முடிதேடி

தித்திக்கும் கரும்புக்கு ஆலை அமைத்து

கற்பிக்கும் கல்விக்குச் சாலை அமைத்து

எண்ணற்ற உழைப்போர்க்கு வாழ்க்கை கொடுத்து

நல்மக்கள் கற்றம்தனைச் சேர்த்து அணைத்து

வந்த நிலை மறவாமல்

என்றும் நிலை மாறாமல்

பண்பு நிலை தவறாமல்

அன்பு நிலை குறையாமல்

சுயசரிதம் காணும் வித்தகர்க்கு

வைரத்தில் வரி எடுத்து வாழ்த்துகின்றேன்

தங்கத்தில் அதைத் தொடுத்துச் சூட்டுகின்றேன்!

**திரு.எச். ஷேக் தாவூத்**

பலரது வாழ்க்கை

சட்டமில்லாத படம்!

சிலரது வாழ்க்கை

பிறருக்குப் பாடம்! ஆம்

அய்யா சீனிவாசனின்

வாழ்க்கை ஏற்றமிகு பாடம்!

தடம்பதித்துச் செல்வதைவிட

வாழ்ந்தால் தடயம் விட்டுச்

செல்லும் குணம் இவருக்கு!

தனக்குக் கிடைக்காத கல்வி!

யாவரும் பெற்றிட வேண்டும்

எனும் நல்மனம் இவருக்கு
பள்ளிப் படிப்பைப் பாதியில்
விட்டாலும்! இவர்தம்
வாழ்க்கையில் தொட்டது.
இமயத்தின் உச்சம்!
இன்றும் சாதனைகள்
தொடர்கிறது மிச்சம்!
தனிமனித வளர்ச்சியே
சமுதாய வளர்ச்சிஎன
ஊராரைச் சேர்த்து
வளர்க்கும் செறிந்த சிந்தனை
வளர்ந்திடும் இளைய

*தலைமுறைக்கு ஐந்தாம் வேதம்!*

*திட்டமிடல், அர்ப்பணிப்பு,*

*கூட்டு உழைப்பு, செயல்வேகம்,*

*விந்தை தரும் சிந்தை என*

*மானுடவியல் பல்கலையாய்*

*தனமும், கல்வியும் தருபவர்*

*சீர்மிகு சீனிவாச ரெட்டியார்*

*போக்குவரத்து, நிதி, கல்வி, சர்க்கரை ஆலை,*

*மருத்துவமனை எனத் தொடரும் இவரது சகாப்தம்,*

*சாதனை –வரலாறாய் வெளிவருவதில்*

*பெருமகிழ்ச்சி அடைகிறேன்.*

அய்யாவின் சாதனைகள் பெருகிட இறைவனை வேண்டுகிறேன்.

*DHANALAKSHMI SRINIVASAN*

*Group of institutions*

*Perambalur – Trichy – Chennai*

*Schools*

- *Dhanalakshmi srinivasan Matriculation school, Perambalur.*
- *Dhanalakshmi srinivasan Higher Secondary School, Perambalur.*
- *Dhanalakshmi srinivasan Matriculation School, Woraiyur, Trichy.*

*COLLEGES /ARTS/ENGG.*

- *Dhanalakshmi Srinivasan College of Arts and Science for Women, Perambalur.*
- *Srinivasan College of Arts &Science (Co – Education), Perambalur.*

- *Dhanalakshmi Srinivasan Engineering College,Perambalur.*
- *Srinivasan Engineering College, Peramabalur.*
- *Dhanalakshmi Srinivasan College of Engineering and Technology, Chennai.*

*MANAGEMENT STUDY*

- *Dhananlakshmi Srinivasan Institute of Management, Perambalur.*

*POLYTECHNIC*

- *Dhanalakshmi Srinivasan Polytechnic,Perambalur.*
- *Srinivasan Polytechnic, Perambalur.*

*NURSING*

- *Dhanalakshmi Srinivasan College of Nursing, Perambalur.*

*TEACHING EDUCATION*

- *Dhanalakshmi Srinivasan College of Education, Perambalur.*
- *Dhanalakshmi Srinivasan College of Education for Women,Perambalur.*
- *Dhanalakshmi Srinivasan Teacher Training Institute, Perambalur.*
- *Dhanalakshmi Teacher Training institute, Perambalur.*

*MEDICAL EDUCATION*

- *Dhanalakshmi Srinivasan Medical College &Hospital, Perambalur.*

*OTHER GROUP CONCERN*

- *Dhanalakshmi Srinivasan Sugar Mills (P) Ltd., Udumbiam.*

- *Dhanalakshmi Srinivasan Chitifunds (p) Ltd., Perambalur*

- *Basaveshwar Sugars Ltd, Kamataka.*

- *Dhanalakshmi Srinivasan Buliders (P) Ltd., Perambalur.*

- *Dhananlakshmi Srinivasan Transports, Perambalur.*

- *Dhananlakshmi Srinivasan Hospital (P) Ltd., Perambalur.*

- *Dhananlakshmi Srinivasan Hotels (P) Ltd., Perambalur.*

- *Dhananlakshmi Srinivasan Hotels (P) Ltd., perambalur.*

- *Dhananlakshmi Srinivasan Energy (P) Ltd., Perambalur.*